VISIT…

பொழுது விடிகிற வேளையிலே



அந்தக் குழந்தை ஏவத்திய நிபுணரின் பேச்சை அதற்கு மேல் அவளது காதுகள் கேட்க மறுத்தன.

இயற்கை விதிகளுக்கு விரோதமாக அவரது முந்தைய வார்த்தைகளே மீண்டும் மீண்டும் அவளது செவிப்பறையில் அலைமோதின.

ஆனாலும் அதெப்படி முடியும்?

ஒரு சின்னக் குழந்தை-இரண்டு வயது கூட நிரம்ப வில்லை- அதற்குப் போய் எப்படி கட்டி வரலாம்? அதுவும் முதுகுத் தண்டில்?

அதிலும் துறுதுறுவென்று நாலாம் மாதம் உட்கார்ந்து ஐந்தாம் மாதம் தவழ்ந்து, ஏழாம் மாதம் எழுந்து நின்று, பத்தாம் மாதம் மூவே தொடங்கி விட்ட குழந்தைக்கா?

இரண்டு வயது நிரம்பு முன் அந்த நடை தடைப்பட்டுப் போவதா? நின்றாற்போலிருந்து தொப்பென்று விழுவதா? விழுகிறதே! அது மட்டும் இல்லாமல் இதை இப்படியே விட்டு விட்டால் குழந்தையின் உயிருக்கே ஆபத்தாம்!

விடாமல் ஆபரேஷன் செய்வது என்றாலும் பத்தாயிரம் ரூபாய்க்குமேல் செலவாகுமாம்! பத்...தாயிரம்! அடேயப்பா! எவ்வளவு பணம் வரவுக்கும் செலவுக்குமே இழுபறியாகக் காலம் செல்லுகையில் இவ்வளவு பணத்துக்கு எங்கே போவது?

ஆனால் இந்தப் பணம் இல்லை என்றால் ஆபரேஷன் இல்லை. ஆபரேஷன் இல்லை என்றால் அவளுடைய கண்ணனும்... கண்ணா... முருகா...

டாக்டரின் பேச்சு நின்றதோ, அவர் எழுந்து சென்றதோ ஒன்றும் அவளது கருத்தில் பதியவில்லை.

அவளது வாழ்வின் ஆதாரம் சில மாதங்களுக்குள் இல்லாமல் போய்விடக்கூடும் என்பது மட்டும்தான் அவளது திகைத்த மூளைக்குப் புரிந்த விஷயமெல்லாம்.

அடுத்து அவளது கையில் ஒரு குளிர்ந்த தம்ளரை யாரோ திணிப்பது மெல்லப் புரிய வந்தது.

வேறு யாருமல்ல.

டாக்டர்தான். தம்ளரை அவளது கையில் வைத்து, "முதலில் இதைக் குடியுங்கள். மற்றதைப் பிறகு பேசலாம்" என்றார் தெளிவாக திருத்தமாக.

அந்தக் குரலின் அழுத்தம் அவளைப் பணியவைத்தது.

நீரின் சில்லிப்பு சூழ்நிலையை உணரச் செய்ய நெஞ்சில் பற்றி எரிந்த நெருப்பு இந்தக் குளிர் நீரால் அணைத்து விடக்கூடுமோ என்று எண்ணியது போலச் சொட்டுவிடாமல் குடித்து முடித்து விட்டுத் தம்ளரை மேசை மேல் வைத்தாள்.

"அவ்வளவு நிறைய... பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் ஆகுமோ டாக்டர், அவ்வளவு ஆகுமா?" என்று பயத்தால் மெலிந்த குரலில் மெல்லக் கேட்டாள்.

"சே, இல்லையம்மா, சும்மா சொன்னேன்" என்று கூறிவிட்டு "ஆமாம்" என்று நம்பிக்கை அற்ற ஒரு நப்பாசை.

அந்த அகன்ற விழிகளில் நிறைந்திருந்த ஏக்கம் அவரைத் தயங்க வைத்ததோ? அவசியமற்ற மேசை மேல் இருந்த பேப்பர் வெயிட்டை இருமுறை இடம் மாற்றி வைத்தார் டாக்டர்.

பிறகும் பார்வையைப் பேப்பர் வெயிட்டிலேயே பதித்து "இதற்கு மேல் இதுபற்றி உங்களிடம் பேசுவதை விடக் கண்ணனுடைய தந்தையிடம் பேசுவது மேல் என்று எண்ணுகிறேன்!" என்று உரைத்தார்.

தந்தையா? மாதுரிக்குச் சிரிப்பு வந்தது.

தனக்கு ஒரு குழந்தை இருப்பதையே அறியாத தந்தை!

கண்ணன் இதுவரை பார்த்தறியாத தந்தை!

அவனுடைய தாயின் விருப்பம் மட்டும் நூறுசதமாய் நிறைவேறக் கூடுமானால் வாழ்வு முழுமைக்குமே அவன் சந்திப்பதற்கு முடியாத சந்திக்கக் கூடாத தந்தை.

இந்தச் சுமையை அவளுக்குப் பதிலாக ஏற்க அவன் வருவான் என்று நினைக்கிறாரா இந்த வைத்தியர்?

வருவானா?

வரக்கூடும். ஆனால் அவள் தான் அதை அனுமதிப்பதற்கில்லை.

தன் மெல்லிய உடலிலும் தொய்ந்த மனதிலும் முடிந்த அளவு உறுதியை ஏற்றி, "கண்ணனுக்குத் தாய், தந்தை எல்லாம் நான்தான், டாக்டர். பரவாயில்லை என்னிடம் சொல்லுங்கள். என்னால் எதையும் ஏற்றுக் கொள்ள முடியும்" என்றாள் மாதுரி.

டாக்டர் மேலும் தயங்கவும் முயன்று, லேசாக முறுவலித்து, "அப்போது திடுமெனச் சொல்லவும் சற்று பயந்து போனேன். டாக்டர்... மற்றபடி என்னால் தாங்கிக் கொள்ள முடியும். தைரியமாகச் சொல்லுங்கள், எதையும் மறைக்காமல் சொல்லுங்கள்" என்று வற்புறுத்தினாள்.

டாக்டர் சொன்னார். எக்ஸ்ரே படங்களை காட்டினார். ரிப்போர்ட்டைப் படித்தார். என்ன நடக்கக்கூடும் என்று கோடி காட்டி, அதன் தீவிரத்தை குறைத்துக் காட்டி ஏதேதோ சொன்னார்.

எல்லாமாக அவர் சொன்னதின் மொத்த சாராம்சம் இதுதான்.

மாதுரியின் அருமை மகனுக்கு முதுகுத்தண்டில் ஒரு கட்டி இருக்கிறது. எப்போதோ இசகு பிசகாக விழுந்ததில் இந்தக் கட்டி முதலில் உருவாகியிருக்கக் கூடும். இப்போது எப்படியோ சற்று வ்ளர்ந்து பெரிதாகி விட்டிருக்கிறது. இந்தக் கட்டியின் பாதிப்பினால்தான் பிள்ளையின் நடை தளர்ந்து போனதும், அவ்வப்போது நிற்கவும் சக்தியற்று விடுவதும். இந்தக் கட்டியை விரைவில் அகற்றியாக வேண்டும். அல்லது... உயிருக்கே ஆபத்தாகிவிடக் கூடும்.

சரி, உடனே அறுவை சிகிச்சையைச் செய்து விடலாம் என்றாலும் அதிலும் சில முக்கியமான விஷயங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

முதலாவதாக இது மிக மிக நுண்மையான, மிகவும் சிக்கலான ஆபரேஷன். மயிரிழையில் பத்தில் ஒரு பங்கு தவறினாலும் கண்ணனின் கைகால்கள் சுரணையற்றுப் போய்விடக் கூடும். எனவே வேலூர், சென்னை என்று அதற்குரிய நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனையில் தான் சிகிச்சை செய்ய முடியும்.

அடுத்து இது பெரிய ஆபரேஷன் குழந்தையின் இளம் உடல் இதைத் தாங்கும் சக்தி பெறுவதற்காக வேறு சில விலை உயர்ந்த மருந்துகள் தேவைப்படும்.

எல்லாமாகப் பணம்... நிறையத்தான் ஆகும்.

"...ரூபாலும் அவ்வளவா?"

"நிச்சயம்" என்றார் டாக்டர், "வெறும் கர்ப்பப்பை ...க்கே நாலாயிரம் ஆகிறது. இது எவ்வளவு சிக்கலான

சிகிச்சை ஒன்றிரண்டு கூடுதலாகத்தான் ஆகும். அது போக நீங்களும் கூடப் போய்த் தங்கியிருக்க வேண்டும் அது வேறு செலவு ஆகும். எதற்கும் ஒரு பதினைந்து ரெடி பண்ணி வைத்துக் கொள்ளுங்களேன் நான் கடிதம் தருகிறேன்..."

மீண்டும் டாக்டரின் குரல் காதில் விழ மறுத்தது.

பதினைந்து ஆயிரத்துக்கு எங்கே போவது!

இதையும் சேர்த்துக் கடனுக்கு எழுதிக் கொள்ளட்டும் என்று வீராப்புடன் கழற்றி வைத்து விட்டு வந்த நகைகள் இப்போது கண்ணெதிரில் வந்து கெக்கலி கொட்டின.

குறைந்த பட்சம் தாலி கோர்த்து அவன் அணிவித்திருந்த சங்கிலி இருந்திருந்தால் கூடப் போதும். ஆனால் அதை விற்ற காசுதான் வயிற்றுப்பாட்டுக்கு ஒழிகாட்டியது.

மற்றபடி... சித்தி...

சித்தி பணக்காரி இல்லைதான். ஆனால் அவளிடம் பணம் ஓரளவு உண்டு என்பது மாதுரிக்குத் தெரியும். கேட்டால் தருவார்களா?

சந்தேகம்தான் முதலிலேயே கண்டிப்பும் கறாருமாக "தாயும் பிள்ளையும் என்றாலே வாயும் வயிறும் வேறு என்பார்கள். நீ எனக்கு வெறும் ஒன்றுவிட்ட அக்கா மகள்தான். அனாதையாக வந்து நிற்கிறாய். வேறு நிழல் இல்லாத காரணத்தால் மாடி அறையைத் தங்குவதற்குத் தருகிறேன். மற்றபடி உன் செலவுக்கு நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று அன்றே அடித்துப் பேசிய சித்தியா இன்று இவ்வளவு தந்து உதவப் போகிறார்கள்? ஊகூம்...

"நாளை வந்து கடிதம் வாங்கிக் கொள்கிறீர்களா தாமதிப்பது ...வ்வளவு நல்லதில்லை."

டாக்டர் குரல் சற்று உரத்து ஒலித்து அவளை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வந்தது.

இவ்வளவு நேரம் அவர் என்னென்ன சொல்லியிருக்கக் கூடும்?

அவள் மருண்டு விழிக்கவும் அவரே மனம் இளகி மீண்டும் சொன்னார். "கண்ணனின் நோய் விவரம், இது வரை எடுத்த சிகிச்சை, எக்ஸ்ரே, டெஸ்ட் ரிப்போர்ட் எல்லாம் ஃபைல் பண்ணித் தரச் சொல்லுகிறேன். அத்தோடு வேலூர், சென்னை இரண்டு இடங்களிலும் எனக்குத் தெரிந்த பெரிய டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கடிதமும் தருகிறேன். நாளை வந்து வாங்கித் கொள்ளுங்கள்... முடிந்த அளவு விரைவில் சிகிச்சையைத் தொடங்க முயற்சி செய்யுங்கள்" என்று முடித்துவிட்டு எழுந்தார் அவர்.

குறிப்பு புரிந்தவளாகத் தானும் எழுந்து பணம் கொடுப்பதற்காகக் கைப்பையைத் திறந்தாள் மாதுரி.

அந்த நிமிடத்தில் அவளிடம் பணம் வாங்குவதுமாகக் கொடுமையாகப் பட்டது டாக்டருக்கு.

"இருக்கட்டும் இருக்கட்டும், குட்டிப் பையன் ஆபரேஷன் வெற்றியாகித் திரும்பி வந்தபின் கொடுங்கள்" என்று இதமாக அவளைத் தடுத்தார்.

அவரை ஏறிட்டுப் பார்த்து லேசாக முறுவலித்தாள். மாதுரி, "இந்த இருபது ரூபாய் பத்தாயிரம் ஆகப் பெருகிவிடுமோ டாக்டர்?" என்றவள் இரு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து பேப்பர் வெயிட்டின் அடியில் வைத்துவிட்டுத் திரும்பி நடந்தாள்.

முடிந்த அளவு நிமிர்வுடன் சென்ற அந்த மெல்லிய முதுகை இரக்கத்துடன் பார்த்தபடி சற்று நேரம் அசையாமல் அமர்ந்திருந்தார், டாக்டர்.

அவருக்கு அடிக்கடி இது ஒரு துன்பம்.

இந்தக் குழந்தை கண்ணனுக்கு வந்திருப்பது போலச் சில செலவு மிகுந்த நோய்கள், செலவு செய்ய வசதியற்றவர்களுக்கு

வந்து சிகிச்சை தடைப்படும் போது அவருக்கு மிகுந்த வேதனையாகிவிடும். தானே பணம் கொடுத்து இந்த சிகிச்சையைச் செய்து விட்டால் என்ன என்று மனம் துடிப்பார். ஆனால் அவராலும் தான் இப்படி எத்தனை பேருக்குச் செய்ய முடியும்? அப்புறம் அவருடைய குடும்பம் பிழைப்பது எப்படி?

இதை எண்ணி மிகவும் சிரமப்பட்டு மனதை இறுக வைத்துக் கொள்வார். வாரம் ஒரு தரம் ராமகிருஷ்ணாமிஷன் ஆஸ்பத்திரிக்குச் சென்று வரும் நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை செய்து மனப்பாரத்தைக் குறைத்துக் கொள்வார்.

டாக்டர் அறையிலிருந்து வெளியே வந்த மாதுரி மகனை விட்டிருந்த இடம் நோக்கிச் சென்றாள்.

பல வண்ண பிளாஸ்டிக் வளையல்களை அடுக்கி வைத்து அமைதியாக விளையாடிக் கொண்டிருந்த மகனைப் பார்க்கையில் அவளது நெஞ்சுக்குள் வெகுவாக வலித்தது.

ஒரு வயது நிறையுமுன் என்ன ஓட்டம் ஓடுவான்!

கையும், காலும் இறக்கை முளைத்தாற்போல என்று ரேவதி சித்தி சொல்வாளே!

அடுத்தடுத்து விழுந்து அடிபட்டு விடவும் குழந்தையின் ஆட்டபாட்டம் எல்லாம் அடங்கிப் போயிற்று. இப்போது உயிருக்கும் ஆபத்து என்கிறாரே டாக்டர், இந்தப் பிள்ளை இல்லாமல் அவளால் எப்படி வாழ முடியும்?

சட்டெனக் குனிந்து குழந்தையை அள்ளி இறுக அணைத்துக் கொண்டாள் மாதுரி.

முதலில் மிரண்ட பிள்ளை, தாய்தான் என்பதை அறியவும் இணக்கமையாய் முறுவல் செய்தான். "அம்....மா!" என்று மழலையாய்த் தாயின் தோளில் சாய்ந்து கொண்டான்.

மன உளைச்சலும் சோர்வுமாக, மாதுரி வீட்டை அடைந்த போது, அங்கே ஏதோ பரபரப்புடன் குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருந்தாள் ரேவதி, மாதுரியுடைய தாயாரின் மூத்த சகோதரி.

சிறுவயதிலிருந்து மாதுரியுடைய தாயாருடன் சேர்ந்து வளர்ந்த அவளுடைய ஒன்றுவிட்ட சகோதரி.

இந்த இரண்டரை ஆண்டு காலமாக மாதுரிக்கு அடைக் கலம் கொடுத்திருப்பவள். அவள் ஓடிந்து போய் விடாமல் ஒரு தூணாய் நின்று தைரியம் தந்தவள்.

பண விஷயத்தில் மட்டும் எப்போதும் மகா கறார்தான்.

ஆனாலும் இந்த மாதிரி விஷயத்துக்குக் கூடக் கணக்குப் பார்க்கத் தோன்றுமா, என்ன?

முடியாது என்றுதான் மாதுரிக்குத் தோன்றியது.

மெதுவாகப் படியேறி வந்த மாதுரியின் முகத்தைப் பார்த்ததும், "முதலில் காபியும் டிபனும் முடித்துக் கொண்டு வா. பிறகு பேசலாம்" என்று உட்புறம் கை காட்டினாள் ரேவதி.

டிபனாவது காபியாவது?

இந்தப் பணப் பிரச்சினை, தீரும்வரை தொண்டைக்குள் ஒன்று இறங்குமா?

தயங்கி நின்ற அக்கா மகளைக் காணவும் ரேவதியின் முகம் சற்றுக் கருத்தது. "போ, மாதுரி, வேலைக்காரி வீட்டுக்குப் போக வேண்டாமா? சும்மாவே நீ லேட் நீயும் பசித்திருப்பாய். இன்னும் நேரம் ஆக்காமல் போ..." என்று சிடுசிடுத்தாள்.

டிபனும் காபியும் வேலைக்காரியும்தானா இப்போது முக்கியம் என்று மாதுரிக்கும் ஆத்திரம் வரத்தான் செய்தது. ஆனால் அதை வெளிக்காட்டும் தைரியம்தான் வருவதாக இல்லை. கூடவே பணம் கேட்க வேண்டிய நேரத்தில் சித்தியின் மனசை கெடுத்து விடக் கூடாது என்றும் தோன்றவே மாதுரி மௌனமின்றி உள்ளே சென்றாள்.

அவளுக்காக இரண்டும், கண்ணனுக்கு ஒன்றும் என்று மூன்று அடைகள் மேசை மேல் தட்டில் வைத்து மூடப் பட்டிருந்ததை கணக்குதான்.

எல்லாவற்றிலும் ரேவதி சித்தி கணக்குதான். காலை, மாலை மாதுரியின் உணவு சித்தியோடுதான். ஆனால் அதற்குக் கணக்கிட்டுப் பணம் கொடுத்துவிட வேண்டும். மாலையோடு வேலைக்காரி போய்விடுவாள் என்பதால் இரவு உணவை மாதுரி மாடி அறையிலேயே அவளே சமைத்துக் கொள்ள வேண்டும். சித்தியின் இரவு உணவு பழமும் பாலும் மட்டும் என்பதால் அவளுக்கு இது பிரச்னை இல்லை.

ஒரு கை அரிசியும் பருப்பும் சமைத்து இரவு உண்பது மாதுரிக்கும் கண்ணனுக்கு உடம்பு சரியில்லாது போகும் வரை கஷ்டமாக இல்லைதான்.

மகனுக்குப் பிட்டு கொடுத்தபடியே, சிரமப்பட்டு தானும் ஓர் அடையை விழுங்கி வைத்தாள் மாதுரி.

அதற்கு மேல் முடியாமல் அடுத்த அடையை வேலைக் காரியிடம் கொடுத்துவிட்டு சாப்பிட்ட தட்டைக் கழுவி வைத்துவிட்டு (அதிலும் சித்தி கணக்குதான். இருவேளைப் பலகாரம் மட்டும்தான். மற்றபடி அந்த வேலைக்காரி மாதுரிக்கு அல்ல. மீந்த சட்டினி, பலகாரம் என்று எடுத்துப் போகத்தான் அவள் அவ்வளவு நேரம் காத்திருப்பதே) மீண்டும் ரேவதியை நாடிச் சென்றாள்.

பொதுவாக ஷாப்பிங் செய்தால்கூட பஸ் செலவில் பாதி உன்னுடையது என்று கணக்கிட்டு, கண்டிப்புடன் வாங்கிக் கொள்கிற சித்தி ரேவதியிடம் என்ன சொல்லி மனம் இளகச் செய்து எப்படிப் பணம் வாங்குவது என்று யோசித்தபடியே மீண்டும் ரேவதியை நாடிச் சென்றாள் மாதுரி.

இருபது ஆண்டு அதிகப்படி அனுபவசாலியல்லவா? பெண்ணின் முகத்தில் என்ன கண்டாளோ, "உட்கார். உட்கார்ந்து என்கிட்ட சொன்னதை மட்டும் சொல்லு" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

எங்கேயோ பணம்? சற்றுக் கலங்கினாள் மாதுரி. ஆனால் என்கிட்ட பணத்தைப் பற்றியும் பேசியது நினைவு வர, அவர் கூறியபடி எல்லாவற்றையும் ஒன்று விடாமல் ஒப்பித்தாள்.

"அதனால்..." என்று சீறியவள் மேலே தொடங்குமுன் இடைமறித்து, "பத்தாயிரத்துக்கும் மேல் ஆகுமா? ஆமாம், இவ்வளவு பணத்துக்கு என்ன செய்யப் போகிறாய்?" என்று விசாரித்தாள் ரேவதி.

சற்று நேரம் வாயடைத்துப் போயிற்று மாதுரிக்கு. 'விக் விக்'கென்று தொண்டையில் பந்தாய் அடைத்ததை வெகு சிரமப்பட்டு விழுங்கிக் கொண்டு, "எனக்கும் இவனுக்கும் உங்களைத் தவிர வேறு..." என்று தொடங்கிய மாதுரியின் பேச்சில் மீண்டும் இடைப் புகுந்தாள் ரேவதி.

"பணத்திற்காக என்னிடம் கேட்டுப் பயன் இல்லை மாதுரி, ஏனென்றால் இங்கே நானும் ஒரு சேதியுடன்தான் காத்திருந்தேன். நான் நைஜீரியாவுக்குப் போகப் போகிறேன்" என்று அறிவித்தாள்.

நைஜீரியா?

அதற்கும் கண்ணனின்ஆபரேஷனுக்காக உதவுவதற்கும் என்ன சம்பந்தம்?

இளையவளின் திகைத்த பார்வையைக் கண்டதும் எரிச்சலுற்றவளாக "ஏன் அப்படி விழிக்கிறாய்? நைஜீரியா இந்த உலகத்தில்தான் இருக்கிறது" என்று வெடுவெடுத்தாள்.

உதட்டைக் கடித்துக் கொண்டு மாதுரி பார்வையைத் தாழ்த்தவும், சற்று இளகி, "எனக்கு அங்கே ஒரு டீச்சர் வேலை கிடைத்திருக்கிறது. அது சம்பந்தமாக முதலில் கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது. பிறகும், ஒரு வேளை அங்கே உள்ள சுற்று வட்டாரம், தட்ப வெப்பம் எதுவும் ஒத்து வரவில்லையென்று திரும்ப நேர்ந்தால் இங்கே மீண்டும் வேறு வேலை கிடைக்கும் வரை பணம் வேண்டும். அதனால்தான் என்னை நம்பாதே என்று சொல்கிறேன்" என்றாள். விழிகளில் திரளத் தொடங்கிய நீரை உள்ளிழுக்க முயன்றபடி, "சித்தி, ப்ளீஸ் சித்தி, நீங்கள் திரும்பி வர நேர்ந்தால் என்று ஒதுக்கி வைத்திருக்கும் பணத்தில் ஒரு பத்தாயிரம் மட்டும் தாருங்கள் சித்தி, உங்களுக்குத்

தேவைப்பட்டால்... தேவைப்படும்போது... சும்மாவே கூட எப்படியும் திருப்பித் தந்துவிடுவேன் சித்தி" என்று கெஞ்சிக் கேட்டாள் மாதுரி.

"எப்படித் திருப்பித் தருவாய்? உன் வரவு செலவுக் கணக்கு எனக்குத் தெரியாதா? வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி மாதம் ஐம்பது ரூபாய் மீத்தாய். இப்போது கண்ணனுக்கு உடம்பு சரியில்லாமல் போனதில் அதிலும் ஓரளவு காலி. இதில் நீ என்னத்தைச் சேமித்து என்றைக்கு என் பணத்தைத் திருப்பித் தரமுடியும்? அதைவிட அந்தப் பணத்தை எங்காவது டெப்பாசிட் செய்தால் எனக்குப் பதிநாலு சதவீத வட்டி வேறு வரும். அப்படி இருக்க உழைத்து சேர்த்த அந்தப் பணத்தை உன்னிடம் தாரை வார்க்க எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கவில்லை" என்றாள் ரேவதி மிகவும் கண்டிப்பான குரலில்.

சித்தியிடம் இலகுவில் பணம் கிடைக்காது என்பது மாதுரி அறிந்த விஷயம்தான். ஆனால் குழந்தை கண்ணனின் உயிருக்கே ஆபத்து என் கையில் ஒரேயடியாக மறுக்க அவளுக்கு மனம் வராது என்று ஒரு நம்பிக்கை அவள் மனதில் உலாவாடிக் கொண்டே இருந்தது.

ஆனால் இப்போது ரேவதி கறாராக மறுத்துவிடவும் அவளால் தாங்க முடியவில்லை.

அதற்குமேல் கட்டுப்படுத்த முடியாமல் அவளது அகன்ற விழிகளில் கண்ணீர் பொங்கி வழியலாயிற்று. "சி... சித்தீ, என்... கண்ணன்..." என்று அழத் தொடங்கினாள்.

"அதற்குள் அவன் உயிருக்கு என்ன வந்து விட்டது?" என்று சிடுசிடுத்தாள் ரேவதி, "ஆபரேஷன் பணத்துக்கு வேறு வழி தேடு என்றால் உயிரே போய்விட்ட மாதிரி ஒப்பாரி வைக்கிறாயே" என்று நாக்கூசாமல் பேசி அதட்டினாள்.

"வேறு வழியே இல்லையே, சித்தி!" என்று மீண்டும் கண்ணீர் பெருகக் கேவினாள் மாதுரி.

"ஏன் இல்லை?"

"சித்தி...?" ஆவலும், கூடவே நம்பிக்கை இன்மையுமாக, நீர் வழியும் கண்களோடு ரேவதியை நிமிர்ந்து பார்த்தாள் மாதுரி.

ஒன்றுவிட்ட சகோதரியின் மகளைச் சற்று நேரம் வெறுத்துப் பார்த்தாள் ரேவதி. பிறகு நிதானமாகக் கேட்டாள், "கண்ணன் இந்த உலகத்தில் பிறவியெடுக்க நீ மட்டுமா காரணம்?" என்று.



பணத்திற்கு வேறு வழி ஏன் இல்லை என்று சித்தி ரேவதி கேட்டபோது மாதுரிக்கு அப்படி ஒன்றும் பிரமாதமாய் நம்பிக்கை வந்துவிடவில்லை.

ஏனென்றால் பண விஷயத்தில் சித்தி எவ்வளவு கெட்டி என்பதை இந்த இரண்டரை ஆண்டுகளில் வெகு நன்றாக அறிந்து கொண்டு இருந்ததால், கண்ணனுக்கு வந்து இருப்பது ஏதோ பெரிய நோய் என்று ஊகித்து அறிந்த நாளில் இருந்தே பணம் புரட்டக்கூடிய வேறு வழிகள் அத்தனையையும் அலசி ஆராய்ந்திருந்தாள்.

அதிலும் இன்று டாக்டர் பத்தாயிரத்திற்கு மேலாக ஆகும் என்று சொன்ன வினாடியில் இருந்து மீண்டும் ஒவ்வொரு வழியாக சலித்தெடுத்து துருவித் துருவித் தேடிப் பார்த்து விட்டாள்.

அலுவலகம், அறிந்தவர், தெரிந்தவர்... என்று ஒருவர் பாக்கியில்லை ஓர் ஆயிரம், ஐநூறு தரக்கூடியவர்களைக் கூட விடவில்லை.

ஆனால், தான் உண்டு, தன் வேலை உண்டு, வேலை முடித்து திரும்பி வந்தால் வீடும் குழந்தையும் உண்டு என்று

இருந்தவளுக்கு பணம் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ளும் அளவுக்கு நெருக்கமானவர்கள் யாரும் இல்லை.

அலுவலகத்திலோ மொத்தமாக இரண்டு ஆண்டுகள் கூடத் தொடர்ந்து வேலை பார்த்திராத ஜூனியர் டைப்பிஸ்ட் அவள். எண்ணூறு ரூபாய்ச் சம்பளமே பெரிய காரியம். எம். டி. யை சந்தித்து விஷயத்தைச் சொல்லி காலில் விழாத குறையாகக் கெஞ்சினால் ஒரு மாத சம்பளம் கடனாகக் கிடைக்கலாம். அவ்வளவுதான்.

எனவே வேறு வழி பற்றி ரேவதி தொடங்கியபோது மாதுரிக்குப் பெரிதாக நம்பிக்கை வந்து விடவில்லைதான்.

ஆனால் உயிர் அடங்கும்போது கடைசி வினாடி வரை பிழைக்கும் நம்பிக்கை அழியாதாமே, அந்த மாதிரி ஒரு நப்பாசையால்தான் அவள் தன சித்தியின் பேச்சைக் கவனித்ததே.

அப்போதும் கூட அவள் இந்தக் கேள்விக்கு தயாராக இல்லை. கேள்வி காதில் விழுந்த பின்னரும் மனதில் ஒன்றும் பதிவதாகவும் இல்லை.

இல்லைதான் கண்ணன் இந்த உலகத்தில் பிறவி எடுக்க அவன் மட்டும் காரணம் இல்லைதான். ஆறடி உயரத்தில் அழகாகுபாகுவாய் ஒருவனும் காரணம்தான்.

ஆனால் 'அவனை அடியோடு மறந்து தொலை' என்று உபதேசித்த சித்தி இப்போது எதற்காக அவன் பேச்சை எடுக்க வேண்டும்.

எதற்காக என்பதை ரேவதியே சொன்னாள். "பிறப்புக்குப் பொறுப்பாக ஒருவனுக்குக் காக்கும் பொறுப்பும் உண்டல்லவா? அவனிடம் சென்று பணம் கேள்" என்று கூறி முடித்தாள் பெரியவள்.

விக்கித்துப் நின்றாள் மாதுரி.

அன்று பேசியிருந்தால்- யோசிக்க வேண்டிய அவசியம் கூட இல்லாமல் கண்ணனுடைய தந்தையின் பேச்சை ரேவதி

எடுத்ததுமே அவள் புரிந்து கொண்டிருக்க வேண்டிய விஷயம்தான். புரிந்து கொள்ளக்கூடியவளும் தான் 'மகனுடைய உயிருக்கு ஆபத்து' என்கிற ஒரு வாக்கியத்தில் நிலைகுலைந்து நின்ற பெண்ணுக்கு மற்ற எதையும் சரியாக உணருகிற சக்திகூடக் குறைந்து விட்டிருந்தது.

இப்போது சற்று எதிர்பாராத விதமாக அவன் பேச்சை எடுத்தது மட்டும் இல்லாமல் அவனிடம் சென்று பணம் கேள் என்று ரேவதி கூறவும் தன் காதுகளையே நம்ப இயலாமல் வெறித்தாள்.

பேசுவது சித்தி ரேவதிதானா?

அன்று மனம் நொந்து புண்பட்டு வந்து விழுந்த, பெண்ணிடம், "ஆண்களே அயோக்கியர்கள், பணவெறி பிடித்த மிருகங்கள் அவன் உன் வாழ்வில் குறுக்கிட்டதையே அடியோடு மறந்துவிட்டுப் புதுவாழ்வு தொடங்கு" என்று சொன்னதெல்லாம் அவருக்கு நினைவு இல்லையா?

"சொத்துக்காக மணந்து கொண்டது மட்டும் இல்லாமல் ஒழுக்கக் கேடு வேறா? உன் தகப்பனை நல்லவனாக்கி விட்டாளே, விட்டு ஒழி?" என்று உபதேசித்தவள், அவளால் இன்று அவனிடமே சென்று பணம் கேள் என்று எப்படிச் சொல்ல முடிகிறது.

அப்படியே அவள் கேட்கச் சொன்னாலும் மாதுரியால் அவனிடம் போய்க் கேட்டுவிட முடியுமா?

அதுவும், "இனி உங்களுக்கும் எனக்கும் இடையே ஒன்றும் இல்லை. நீங்கள் வேறு திருமணம் செய்து கொள்வதில் எனக்கு முழு சம்மதம்" என்று தெளிவாக எழுதிவைத்துவிட்டு அன்று வெளியேறியவள், இன்று எந்த முகத்துடன் அவனிடம் சென்று பணம் கேட்பாள்.

அதுவும், எந்தப் பிள்ளை உருவானதையோ, பிறந்ததையோ தெரிவிக்காமல் மறைத்து ஒதுக்கி வாழ்ந்தாளோ,

அந்தப் பிள்ளைக்காகப் பணம் வேண்டும் என்று எப்படி கேட்க முடியும்?

ஊகூம். முடியாது என்று ஒதுக்குகையிலே, பிறகு பிள்ளையின் கதி என்ன ஆகும் என்று மனம் பதறிப் போயிற்று.

பெற்ற வயிறும் நொந்த மனமும் போட்டி போட்டுக் கொண்டு கலங்கின.

மாதுரியின் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்ற ரேவதி குனிந்து கண்ணனைத் தூக்கிக் கொண்டாள். "உன் இஷ்டம். வேண்டிய அளவு அழுது முடி. ஆனால் ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள். உன் மகன் பிழைக்க வேண்டுமானால் அதற்கு அந்த சசிதரனின் பணம்தான் வந்தாக வேண்டும். அவ்வளவுதான்" என்று பிள்ளையோடு வாயிற்புறம் சென்று விட்டாள்.

அதற்குமேல் இது விஷயமாக ரேவதி தானாகப் பேசவும் இல்லை மாதுரியைப் பேச விடவும் இல்லை.

இரவில் கண்ணனை உறங்க வைத்துவிட்டு மாதுரி மீண்டும் அந்தத் தாயிடம் பணவிஷயம் பற்றிப் பேச்செடுத்தாள்-இல்லை பேச்செடுக்க முயன்றாள்.

ஒரு கையை உயர்த்தி அவளது பேச்சை அடக்கி "இந்தப் பண விஷயமாக நீ என்னிடம் பேசி ஒரு பயனும் இல்லை மாதுரி. அதை நான் முன்பே முடிவாகச் சொல்லி விட்டேன். நீ வேறு இடம்தான் பார்த்தாக வேண்டும். ஆனால் கண்ணனிடம் எனக்கும் பாசம் உண்டு என்பதால் நீ உன் புருஷனிடம் சென்று பணம் வாங்கி வருகிறவரை வேண்டுமானால் ஓர் இரண்டு நாள் அவனைப் பார்த்துக் கொள்ளுகிறேன். அல்லது கண்ணனைக் கூட்டிக்கொண்டு போனால் ஒரு வேளை அவனுடைய தகப்பனின் மனம் இளகக்கூடும் என்று தோன்றினால் அவனையும் தூக்கிச் செல். இதற்கு மேலான உதவிகளை மட்டும்தான் நான் உனக்குத் தரக்கூடியது. மற்றபடி வேறு எந்த உதவியும், முக்கியமாகப் பண உதவியைக் கேட்டு என்னைப் போரடிக்காதே" என்று முடித்துவிட்டுக்

கையிலிருந்த வாரப் பத்திரிகையில் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

மாதுரிக்கு ஜாடை புரிந்தது.

மேலே பேசினால் பயங்கரமாகக் கத்துவாள்.

மோப்பக் குழையும் அனிச்சமான மாதுரி பத்து நாள் நினைத்து நினைத்து மனம் நோவாள்.

ஆனால் இன்றைய நிலையில் காரியம் நடக்குமானால் அதைக் கூடத் தாங்கிக் கொள்ளலாம்தான். ஆனால் காரியம் நடக்காதே, ரேவதி ஒன்று சொல்லிவிட்டாள் என்றால் அவ்வளவுதான்.

முன்பு ஒரு தரம் இப்படித்தான் மாதுரிக்கு ப்ளூ வந்ததில் கொஞ்சம் அதிகம் செலவாகி விட்டது. கொஞ்சம் கடன் கேட்டபோது, ஒரேயடியாய் மறுத்து விட்டாள் ரேவதி. "ஒரு வாரம் மதியமும் இரவும் பட்டினிகிட, அப்போதுதான் எதிர்பாராத செலவையும் யோசித்து மாதச் செலவு செய்கிற புத்தி வரும்" என்று முடித்து விட்டாள்.

காய்ச்சல் பலவீனத்தோடு இரவும் சேர்ந்து கொள்ள மாதுரி மிகவும் கஷ்டப்பட்டாள்.

பக்கத்துல இருந்து பார்த்த போதும் ரேவதியின் மனம் சற்றும் இளகவில்லை.

ஆனால் அவள் சொன்னது போல, அதன் பிறகு மாதுரி அந்த மாதிரிச் செலவுக்கு இல்லாமல் மாட்டிக் கொண்டதும் இல்லை.

இப்போதுதான்... இமயமாய் வந்துவிட்டது. இதற்கு முன்னால்...

"இப்படி உட்கார்ந்து குருட்டு யோசனை செய்வதை விட, கண்ணனுடைய நகப்பனிடம் எப்படிப் பணம் வாங்குவது என்று யோசித்து செயல்பட்டாயானால் நன்றாக இருக்கும். கண்ணன்

உடல்நிலை ஒருபக்கம் இருக்க, எனக்கும் பாஸ்போர்ட் விசா என்று அலைச்சல் தொடங்கிவிடும். அப்புறமானால் என்னால் கண்ணனைப் பார்த்துக் கொள்ளவும் முடியாது. அதனால் உருப்படியாக யோசித்து விரைவாக முடிவு செய்" என்று எழுந்த ரேவதி. "நான் தூங்கப் போகிறேன். நீ படுக்கப்போகிற போது சன்னல் கதவுகளைச் சாத்திக்கொண்டு தாழ்ப்பாள் போட்டுவிட்டுப் போ" என்று சென்றுவிட்டாள்.

அவளது படுக்கையறைக்குள் சென்று சித்தி கதவைச் சாத்தும் வரை செயலற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தாள் மாதுரி.

பிறகும் அசையவில்லை.

அந்த மோடாவில் இரு கைகளாலும் தலையைத் தாங்கிய படி பதுமை போல் அமர்ந்திருந்தாள்.

மனம் எங்கெங்கோ ஓடியது.

இந்த இரண்டரை ஆண்டுகளாக மிகவும் சிரமப்பட்டு மறக்க முயன்று மறக்க முடியாவிட்டாலும் மனதில் ஒரு மூலையில் பதுக்கி வைத்து விட்டிருந்த நிகழ்ச்சிகள்... மீண்டும் அதே வலியுடன், அதே வேதனையுடன் அப்படியே நினைவு வந்தன.

முதலில் வந்து நின்றவன் சசிதரன்.

அவளுடைய அருமைத் தாத்தா, கண்களில் சிறு கலக்கத்துடன் அவனை அண்ணாந்து பார்த்துக் கொண்டு இருக்க, முகத்தில் ஓர் அழுத்தத்துடன் உயரமாக நின்று கொண்டிருந்தான்.

மனதினால் வலுவிழந்து கழுத்தினால் தாங்கி நிற்க முடியாத தலையைத்தான் தலை சற்று ஆட அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று கவலையுற்றாற் போல அவன் முகத்தைத் தன்னை அறியாமலே பார்த்துக் கொண்டிருந்த அந்த ஒரு நிமிடத்திலேயே மாதுரிக்குச் சசிதரனைப் பிடிக்காமல் போய் விட்டது.

தாத்தாவுக்குக் கழுத்து வலிக்காது?

வற்றிச் சுருங்கிய தோலும், வெள்ளித் தலை மயிரும், தளர்ந்த உடலுமாக அவரது முதுமை பார்த்தாலே தெரிய வில்லை?

ஒன்று, அண்ணாந்து அவர் பார்க்கத் தேவையிராத அளவுக்குச் சற்று தொலைவிலேயே நின்று அவரோடு பேச வேண்டும்.

அல்லது இருவருமாகத் தோட்டத்துக் கல் பெஞ்சிகளில் ஒன்றில் அமர்ந்து பேச வேண்டும்.

இரண்டையுமே விடுத்து அவரது சிரமத்தைக் கண்டும் காணாதது போல நிற்கிறானே, அவன் என்ன மனிதன்?

நிற்கிற தினுசைப் பார்த்தால் வயதில் பெரியவரிடம் மரியாதை காட்டுவதாகவும் தெரியவில்லை. வயதானவரின் இதத்தை நாடும் பண்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதே சமயம் ரவீந்திரன் மட்டும் இருந்திருந்தால் தாத்தாவுக்கு எப்படி எல்லாம் உபசாரம் செய்வான். தாத்தா நிற்பதையே அவனால் தாங்க முடியாதே "நீங்கள் நின்றால் நெஞ்சில் வலிக்கிறது" என்று உள்ளிருந்து குஷன் தூக்கிக் கொண்டு நாற்காலியைத் தருவானே.

நல்லவேளை! இந்த முசுடு போல் ஒருத்தனாக இல்லாமல் ரவீந்திரன் இந்த வீட்டு மருமகனாக வுரப்போகிறான்.

எண்ணம் எங்கோ ஓடியபோதும், தாத்தாவை முதலில் உட்கார வைக்க வேண்டும் என்று அவசரமாக அவர்களை அழைத்தாள் மாதுரி.

அரவம் கேட்டுத் திரும்பிய பெரியவரின் முகம் பேத்தியைக் கண்டதும் பளிச்சென்று மலர்ந்தது.

"நல்லவன்தான் என் பேத்தி சார். ஒரே பேத்தி பிடிக்காமலிருக்குமா?" என்று புன்னகையால் உதடு விரிய அறிமுகப்படுத்தத் தொடங்கினார்.

அவனுக்கு புன்னகை புரிந்து பழக்கம் இல்லையோ, அல்லது அவளைப் பார்க்கப் பிடிக்கவில்லையோ.

உணர்ச்சியற்றிருந்த அந்தப் பார்வையைச் சந்தித்ததும் மாதுரிக்கு உள்ளூர இருந்த ஆத்திரம் அதிகம் ஆயிற்று.

"பெயர்..." என்று அவர் மேலே தொடருமுன் நேற்றெல்லாம் கால் வலி என்று விட்டு இன்றைக்கு இன்னமும் இழுத்துக் கொள்ளப் பார்க்கிறீர்களே வாருங்கள்... உட்கார்ந்து கொண்டு அப்புறம் பேசுங்கள்" என்று அவரது கையைப் பற்றினாள்.

"இரம்மா... முதலில் அவரிடம் சொல்லி விடுகிறேன், என் பேத்தி பெயர், மாதுரி சார், சார் பெயர் சசிதரன். கண்ணு அவர் நம்ம..." என்று தொடங்கியவரைப் புதியவன் இடைமறித்துப் பேசினான்.

"மிகவும் அழகாகப் பேத்திக்குப் பெயர் வைத்திருக்கிறீர்களே. மாதுரி... மதுரமான பெயர்" என்றான் குரலில் ரசனையோடு.

அவளது பெயரை அவன் மேலும் ரசனையோடு சொன்ன விதம் மாதுரியை மேலும் பாதித்தது. சற்று மிடுக்காக தலையைச் சிலிர்த்து, "காப்பி, அப்பட்டமான காப்பி, நூற்றி ஐந்தாவது ஆன பெயர்தான் காப்பி" என்றாள் துடுக்காக.

"ஓ" என்ற சசிதரனின் முகத்தில் முதல் முறையாக முறுவல் அரும்பியிற்று. "அத்தனை பேரா எனக்கு முன் இதையே பிடித்திருக்கிறார்கள்? ஆளும் அழகாக இருப்பதால் நிச்சயம் எதிர் பார்த்திருக்க வேண்டும். கொஞ்சம் மாற்றி இனிமையான பெயர் எதாவது கண்டுபிடித்துக் கொடுக்கலாமா?" என்றான் அவன்.

மாதுரி என்பது மிகைதான். ஆனால் நிறையப் பேர் பிடித்துக்கொண்டதால் அதைப்போய் நம்பாத மாதிரி புருவங்களைத் தூக்க வேண்டுமா? என்று நினைத்தாள் மாதுரி.

அவனுக்கு பதிலுக்கு "இன்னும் நீங்கள் பழைய கஞ்சிதான்" என்பதுபோல் அவனிடம் பேச பிடிக்காமல், பிடிக்க

வில்லை என்பதை மறைக்கவும் முயலாமல் தன் தாத்தாவிடம் திரும்பினாள்.

தன்னைத் திருப்ப முயன்ற பேத்தியைத் தடுக்க முயன்றவர் தடுமாறவும் சட்டென அந்த சசிதரன் உதவிக்கு வந்தான்.

தாத்தாவோடு தடுமாறிய, பேத்தியையும் பற்றி நிறுத்தியவன். தாத்தாவைச் சிறுபிள்ளை போல அலக்காகத் தூக்கிச் சென்று, குல்மோஹரின் அடியில் கிடந்த கல்பெஞ்ச் மேல் உட்கார வைத்தான்.

"என்ன செய்கிறது?" என்று விசாரித்தான்.

"ஒன்...றும் இல்லை. இவள் வேலைகளில் நேற்றுக் கொஞ்சம் அலைந்து விட்டேனா, கால் தாங்க மாட்டேன் என்கிறது. வயதாகி விட்டதில்லையா?" என்று முறுவலித்தார் சிவநேசர்.

அந்த முறுவலைப் பார்க்கையில் மாதுரிக்குப் நெஞ்சு வலித்தது. தாத்தா எப்போதும் இப்படித்தான். தன் உடல் துன்பங்களையோ, மன வேதனைகளையோ வெளிக் காட்டிக் கொள்வதே இல்லை.

"மதுக்குட்டி, நீ போய் சாருக்குக் கொஞ்சம் டீ கொண்டு வாடா கண்ணா" என்றவரை அந்த சசிதரன் மறுத்தான்.

"ஊகூம். இதெல்லாம் வேண்டாம். நீங்கள் ஓய்வாக உட்கார்ந்திருங்கள். நான் ஒருதரம் வீட்டைச் சுற்றிப் பார்த்து விட்டுப் போகிறேன்" என்று கூறி விட்டுப் பதிலை எதிர்பாராமல் வீட்டை நோக்கி நடந்தான்.

மாதுரி பிரமித்துப் போனாள்.

இவனை இதுவரை இங்கே யாரும் பார்த்து கூட இல்லை. சுவாரஸ்ய பட்சம் மாதுரி பார்த்தது இல்லை. என்ன திண்ணக்கம் இருந்தால் "வீட்டைச் சுற்றிப் பார்க்கலாமா" என்று அனுமதி கேளாமல் அவன் பாட்டில் வீட்டைப் பார்க்க வீட்டுக்குள் போவான்.

வீட்டில் அம்மா அப்பா அறை இருக்கிறது. அங்கே அம்மா வாசித்த வீணை. அப்பாவின் புத்தகங்கள் எல்லாம் அவ்வப் போது தூசி தட்டித் துடைத்து அப்படியே வைத்துப் பூஜை அறை மாதிரி பாதுகாத்து வரப்படுகிறது.

அங்கெல்லாம் இவன் ஷூ காலோடு...

இந்தத் தாத்தா ஏன் அவனைத் தடுக்கவில்லை?

"தாத்தா, அம்மா அப்பா அறைக்குள் எல்லாம் இந்த ஆள்... அவரை நிற்கச் சொல்லுங்கள் தாத்தா" என்று படபடத்தாள் மாதுரி.

"இல்லையில்லை அவர் சுற்றிப் பார்க்கட்டும். நீ போய் அந்த ரூமெல்லாம் வெளியில் இருந்தே காட்டி விட்டு வா" அவள் அவசரமாக நடக்கவும். "மதுக்குட்டி அவரிடம் கொஞ்சம் பதமாகப் பேசம்மா. சடபுடாரென்று சீ மாதிரி வெடிக்கக் கூடாது. என்னடாம்மா!" என்று புச்சி கூறி அனுப்பினர்.

சிரித்த முகமாகவே கிண்டல் போல அவள் கூறிய போது, 'காப்பி, பழைய கஞ்சி' என்ற தன் பின்னிருந்த கோபத்தைத் தாத்தா கண்டு விட்டிருக்கிறாரே!

முதல் தடவையாகப் பார்க்கும் ஒருவரிடம் அப்படிப் பேசியது தவறுதான்.

சுவரிய முகத்தை மறைத்து, 'ம்' என்ற ஒப்புதலுடன் அதற்குள் வீட்டினுள் சென்றுவிட்டிருந்த சசிதரனின் பின்னே விரைந்தாள் மாதுரி.

அதைப் பெரிய வீட்டில் காட்டுவதற்கு அதிகம் ஒன்றும் இல்லை.

தாத்தாவின் தந்தை கட்டிய வீடு. அகலச் சுவர்களும், பெரிய பெரிய சன்னல்களும், அறைகளுமாக ஓரளவு வசதியாகவே கட்டியது. பெரும்பகுதி அறைகளைச் சுற்றிலும் வெளியது. பராமரிப்பு போன்ற செலவுகளுக்கு அஞ்சிப் பூட்டியே வைக்கப்பட்டிருந்தன.

பூட்டென்றால் காட்ரெஜ் நவ்தால் பூட்டல்ல சும்மா சாத்தி நாதாங்கியிடப்பட்டிருக்கும்.

ரவீந்திரனுக்கு இந்த அறைகளைத் திறந்து பார்ப்பதில் ஓர் ஆவல்.

திருமணத்தின் பின் இந்த ஒவ்வோர் அறையிலும் நட்ட நடுவில் நின்று உன்னை முத்தமிடப் போகிறேன் என்பான்.

அது ஓர் இனிய அதிர்ச்சி, திடீர்ப் பரிசாகத் தாத்தாவுக்குக் காத்திருக்கிறது.

திருமணம் ஆன பிறகு அவள் கணவன் வீடு சென்று விடுவாள் என்று நினைத்து, "உன் திருமணத்தின் பிறகு நான் காசி, ஹரித்துவார் என்று சுற்றப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார். இந்தக் கால்களை வைத்துக் கொண்டு ஹரித்துவாரா?

அது அப்படியல்ல; திருமணத்தின் பின் ரவீந்திரனும் அவர்களோடு இங்கேயே வந்து வசிக்கப் போகிறான் என்று தெரியும்போது அவர் எவ்வளவு ஆனந்தப்படுவார்!

தாத்தாவுக்கும் பேத்திக்கும் இடையே இருக்கும் பாசத்தை உணர்ந்து, "மாமனார் வீட்டு மாப்பிள்ளை என்று வரக்கூடிய கேலிப் பெயரையும் பொருட்படுத்தாமல் இங்கே வசிப்பதாக அவள் கேட்குமுன்பாகத்தான் உரைத்த ரவீந்திரன் எவ்வளவு நல்லவன்!

ஒரே மகனான போதும் இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்கும் ரவீந்திரனுடைய பெற்றோர் எவ்வளவு நல்லவர்கள்!

அவர்களுக்கு மருமகளாகப் போகும் அவள்தான் எவ்வளவு அதிருஷ்டசாலி.

"பெரும் பகுதி வீட்டைப் பயன்படுத்தாமல் அப்படியே போட்டு விட்டீர்கள் போல இருக்கிறதே" என்று அவனது அலுவலகத்தில் இடையிட்டது சசிதரனின் குரல்.

"இருப்பது நானும் என் தாத்தாவும் மட்டும். எங்கள் இருவருக்கும் மட்டுமாகத் தேவையான அறைகள் இவ்வளவுதான்" என்றாள் மாதுரி விட்டேற்றியாக.

"ம்ம்..." என்று அடுத்த அறையை அவன் நெருங்குமுன் முன்னே வந்து வழியை மறைத்தாள் மாதுரி.

"அது என் அம்மா அப்பா அறை. அதற்குள் போகக் கூடாது!"

"ஓ!... ஓகே. உள்ளே போகவில்லை." என்றாலும் தாண்டி அடுத்த அறைக்குச் செல்லாமல் கதவைத் திறந்து வெளியே இருந்து நோட்டமிட்டான்.

ஆத்திரம் வந்தபோதும் தாத்தாவின் வார்த்தைகளை எண்ணி உதடுகளை இறுக மூடிக்கொண்டு அசையாமல் நின்றாள் மாதுரி.

அவள் முகத்தில் படிந்து மீண்ட அவன் பார்வையில் சிறு [illegible] இருந்தது.

கடைசி அறை வரை சென்று பார்த்துவிட்டுத் திரும்பி வந்தான் அவன்.

பார்வை அங்கங்கே சுழன்றபோதும் மறுபடியும் கீழ்த்தளம் வரையில் அவன் பேசவில்லை.

முன்னொரு காலத்தில் 'பால்' ரூமாகப் பயன்பட்ட பெரிய [illegible] நடுவே நின்று சுற்றிப் பார்த்தான் அவன்.

"எல்லாவற்றையும் சீர் செய்வதற்குக் குறைந்தது இரண்டு [illegible] ஆகும்" என்றான்.

சீர் [illegible] இடங்களில் சிதிலமாகத் தொடங்கியிருந்தது. [illegible] அறிந்த விஷயமும்தான். அவ்வப்போது அவள் [illegible] விஷயமும்தான். ஆனால் அதையெல்லாம் [illegible] நிதி நிலைமையை மீறிய விஷயம் [illegible] ஒருவாறு மனதில் அதை ஒதுக்கி விடவும் [illegible].

சிவநேசர் மனநிலையும் அதுவே என்பதும் அவளுக்குத் தெரியும்.

எனவே, "இதைப் போய்த் தாத்தாவிடம் சொல்லி வைக்காதீர்கள்" என்றாள் அவசரமாக.

"அடடா!" என்றான் அவன் போலி வருத்தம் காட்டி. "பெரியவரிடம் சொல்லவே கூடாதா? பின்னே வேற யாரிடம் சொல்வது? உன்னிடமா?" என்று அக்கறையோடு விசாரித்தான்.

கிண்டலா?

ஆத்திரமுற்றவளாக, "என்னிடமும் சொல்ல வேண்டாம், வேறு யாரிடமும் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை! அதற்கு அதிகாரமும் இல்லை. ஒரு பெரிய வீட்டைப் பார்த்து மலைத்த திருப்தியோடு நடையைக் கட்டுங்கள்" என்றாள் அலட்சியமாக அவள்.

திடுமென அவன் பார்வையிலிருந்து தன் விழிகளை அவளால் விலக்கிக் கொள்ள முடியாமல் போயிற்று.

அவன் பார்வையில் என்ன இருந்தது?

என்ன இருந்தது என்று அப்போது புரியவில்லை.

ஆனால் வெகு விரைவிலேயே புரிய நேர்ந்தது.

வடிகட்டின முட்டாளைப் பார்த்த பார்வை அது பார்த்து, "முட்டாளே, இது என்ன உளறல்?" என்று கேளாமல் கேட்ட பார்வை அது.

அதற்கு நேரத்தில் அவன் அறிந்திராத போதும் அன்றைய நிலையில் அவள் பேச்சு உளறல்தான்.

இந்த வாழ்வில் உறவினனோமே என்று நினைத்து நினைத்து [illegible] என்று அன்று மாதுரி எண்ணும் நிலைக்கு [illegible]

அறையினுள் கண்ணன் புரளும் அரவம் கேட்கவும் நினைவோட்டம் கலைந்து மாதுரி உள்ளே எழுந்து சென்றாள்.

படுக்கையை நனைத்து விட்டிருந்தான் மகன்.

நனைந்த துணிகளை மாற்றிக் கிடத்தும்போது மனம் கனத்தது அவளுக்கு.

ஒன்றேகால் வயது நிரம்பு முன்னரே படுக்கையை நனைப்பதை நிறுத்தியிருந்த பிள்ளை, இப்போது அவ்வப்போது இப்படிச் செய்கிறான்.

இந்தக் கட்டியினால் இடுப்புக்குக் கீழே கட்டுப் படுத்தும் சக்தி குறைகிறதோ?

சித்தி ரேவதி சொன்னபடி முன்னறைச் சன்னல்களைச் சாத்திவிட்டு வந்து கட்டிலில் சாய்ந்தாள்.

ஆனால் இமைகள் ஒன்றோடு ஒன்று விரோதம் பாராட்டுவது போல ஒட்ட மறுத்தன.

மனம் பழைய கதையிலேயே சிக்கிக் கொண்டு உழன்றது.

அந்தத் திருமண நாள்!

அவளது வாழ்வைத் தலை கீழாக்கிய நாள்?

எல்லாப் பெண்களுக்குமே திருமணநாள் வாழ்க்கையை மாற்றுகிற நாளாகத்தான். ஆனால் மாதுரியின் திருமண நாள் அவள் எண்ணியிருந்ததற்கு நேர் எதிர்மாறாக அல்லவோ அவளது வாழ்வை மாற்றியது.

யோசித்துப் பார்த்தால் அன்றைய பொழுது விடியலில் ஒரு வித்தியாசமும் இல்லை.

வழக்கம் போலவே விழித்து எழுந்ததும் மேல் மாடிக்குச் சென்று கீழ்வானம் மெல்ல சிவப்பு ரேகைகளை ஏற்று மெல்லச் சிவந்து உதயமானதும் சிவப்பு மாறித் தங்க நிறமாகும் வரை பார்த்திருந்துவிட்டு இறங்கி வந்தான்.

தேனிலவு ஒரு வாரமும் இதைப் பார்க்க முடியாதே என்று ஒரு கணம் மனம் வாடியது. உடனேயே அங்கே கன்னியாகுமரியில் இன்னமும் அழகாகக் கடலில் ஆதவன் உதிப்பதைக் காணலாமே என்று உற்சாகம் மிகுந்தது.

அதற்குள் யாரோ "என்னம்மா கல்யாணப் பொண்ணு, சீக்கிரம் குளித்துவிட்டு வா. அலங்காரம் செய்ய வேண்டும்" என்று விரட்டினார்கள்.

வழக்கம் போலவே குளிர் நீரில் உடல் சிலிர்க்கச் சிலிர்க்கக் குளித்தாள்.

திருமணம் என்றால் மனம் படபடக்குமாமே. உடல் பரபரக்குமாமே, தனக்கு எப்போதும் போலத்தானே இருக்கிறது என்று உள்ளூர ஆச்சரியப்பட்டபடியே குளித்து முடித்தாள்.

பத்தரை மணிக்கு மேல்தான் திருமண நேரம் என்பதால் விழுந்தடித்துக் கொண்டு எதுவும் செய்ய வேண்டியிராதபடி நிதானமாகவே எல்லா வேலைகளும் நடந்தன.

சிவநேசர் மட்டும் அவ்வப்போது வந்து பேத்தியைப் பார்த்து உதட்டால் முறுவலித்து, லேசாகக் கண்கலங்கிவிட்டுப் போனார்.

பிரிவை நினைத்துதானே வருத்தம்; அது இல்லை என்று சொல்லிவிடலாமா என்று அவள் நினைத்த ஒரு சமயத்தில், அவர் கண்களைத் துடைத்துக் கொண்டு அவருடைய மகளின் [illegible] தாயாரின் பெரிய படத்தைப் பார்க்கவும் வாயை [illegible]

இந்த நேரம் பார்த்து மகிழ மகள் இல்லையே என்று எண்ணி வருகிற கண்ணீர்.

தாத்தாவைத் தொடர்ந்து பேத்தியின் பார்வையும் அவள் தாயாரின் படத்தில் நிலைத்தது.

அன்பைக் கொட்டி சிவநேசர் வளர்த்ததாலோ என்னவோ, அவளுக்கு இழப்பென்று பெரிதாகத் தோன்றவில்லை.

ஆயினும் தாயாரைத் தெய்வமென மதித்து, 'எனக்கு நல்லது நடக்கச் செய்யுங்கள் அம்மா' என்று மனதால் வேண்டிக் கொண்டாள்.

நடக்க இருந்த திருமணம் நல்லபடியாக நடந்தேற வேண்டும் என்று அவள் தாயிடம் வேண்டிக் கொள்ளவில்லை.

அப்படி வேண்டியிருந்தால் ஒரு வேளை அடுத்து வந்த [illegible]த் துன்பமெல்லாம் நேராந்திராதோ?

ஆனால் துன்பம் நேரக்கூடும் என்கிற நினைப்புகூட இல்லாத காரணத்தால் அன்று மாதுரிக்குத் திருமணம் பற்றி வேண்டாத் தோன்றவும் இல்லை. அந்தத் திருமணம் நடக்கவும் இல்லை. தாயிடம் வேண்டியதுபோல் நல்லது நடந்ததாகவும் தெரியவில்லை....

சரிகை இழையோடிய சிவப்புப் பட்டுசேலை அணிந்து பொருத்தமாய் நகைகள் அணிந்து மணமேடையில் அவள் அமர்ந்திருந்தபோது கூட யாருக்கும் அந்தத் திருமணம் நின்று விடக்கூடும் என்று தெரியவில்லை...

அவளைத் தெரிந்திருந்ததோ? அந்தச் சசிதரனுக்கு..?

தாத்தா வீட்டின் மேல் உள்ள ஆசையில் எவ்வளவு பெரிய [illegible] பிரித்து விட்டான்.

[illegible] தான் திருமணம்.

[illegible] சொல்வார்களோ என்கிற வெட்கம் சிறிதும் [illegible] தலையை திருப்பி அவளை

விழுங்குவதுபோல் பார்த்தது மாதுரியின் ஓரக்கண் பார்வையில் பட, அவள் முகம் மெல்லச் சிவக்கலாயிற்று.

மஞ்சள் பூசிய தேங்காய் மேல் இருந்த பொன் சங்கிலியோடு பின்னிப் பிணைந்திருந்த மஞ்சள் கயிறும், மாங்கல்யமும், பெரியவர்களின் ஆசியைப் பெற்றுக்கொண்டு மணமேடைக்கு வந்து கொண்டிருந்த அந்த வேளையில், "கொஞ்சம் பொறுங்கள்" என்றது ஒரு குரல்.

ரவீந்திரனுடைய தந்தையின் குரல்!

குரலில் இருந்த கடுமையால் திகைப்புற்று நிமிர்ந்தாள் மாதுரி.

"தாலித்தட்டு அப்படியே நிற்கட்டும். அது மணமேடைக்குப் போகுமுன் எனக்கு ஒரு விஷயம் தெரிந்தாக வேண்டும்" என்றார் சிதம்பரம் தொடர்ந்து கண்டிப்பான குரலில்.

"எ... என்ன சம்பந்தி?" என்று திகைப்பும் தடுமாற்றமுமாக சிவநேசர் சிதம்பரத்தை நெருங்கி வந்தார்.

"சொல்லுங்கள் இந்த வீடு உங்களுடையதா இல்லையா?"

இதென்ன அசட்டுத்தனமான கேள்வி என்று தோன்றியது மாதுரிக்கு. ஆனால் தாலித்தட்டு மணமேடைக்கு வருவதற்கும் இந்தக் கேள்விக்கும் என்ன சம்பந்தம்?

சம்பந்தம் இருந்ததாகத்தான் சிதம்பரம் சொன்னார்.

அங்கிருந்த ரவீந்திரனும் அதுபோலத்தான் பேசினான்? "என்ன மாது, இது உன் வீடு என்றுதானே சொன்னாய்?" என்று அடிக்குரலில் வினவினான்.

"ஆமாம், எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து [illegible]" என்றாள் அவள். வியப்பும் திகைப்பும் கூடவே [illegible]

[illegible] சிதம்பரத்திற்குத் தெளிவாகத் தெரிய [illegible]

"ஆ... ஆமாம்... ஆனால்..." என்று இழுத்த சிவநேசரை இடைமறித்து, "பின்னே அவர் திருமணம் முடிந்த பிறகு அவருடையது ஆகிவிடும் என்கிறாரே" என்று கைநீட்டிச் சுட்டிக் காட்டினார் சிதம்பரம்.

வருங்கால மாமனாரின் சுட்டு விரலைத் தொடர்ந்து பார்வையைச் செலுத்திய மாதுரிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

அங்கே செதுக்கிய சிலை போல மார்பின் குறுக்கே கை கட்டியபடி அழுத்தத்துடன் நெடி திருமாலாய், நின்று கொண்டிருந்தான் சசிதரன்!

வீட்டை விட்டு ஒருதரம் சுற்றிப் பார்த்துவிட்டதாலேயே வீடு [illegible] ஆனதாகி விடுமோ அல்லது வீட்டை வாங்க முயற்சிக்கிறானா? திருமணத்துக்கு வந்தால், கண்டோம் [illegible] கண்டோம் என்று திருமணத்தைப் பார்த்து விட்டு [illegible] விட்டுப் போகாமல் கலகமூட்டுகிறானா?

[illegible] னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளாமல் தாத்தா ஏன் [illegible] நிற்கிறார்?

[illegible] தோடு வீட்டு உரிமை யாருடையதாக இருந்தால் [illegible] திருமணத்தை மேலே நடத்துவதற்கும் வீட்டு [illegible] என்ன தொடர்பு இருக்க முடியும்?

[illegible] மனதில் முட்டி மோதிய அத்தனை [illegible] விரைவிலேயே பதில் கிடைத்தது.

[illegible] மேல் நிறையக் கடன் இருப்பதால் திருமணம் [illegible] சசிதரன் மேல் பத்திரம் முடித்து விடத்தான் [illegible] சிவநேசர் சொன்னார்.

[illegible] விளக்கம் சிதம்பரத்தின் வாயில் [illegible]

[illegible] வங்களை இளிச்சவாயர்கள் என்று எண்ணி [illegible] ஒரு காசு வரதட்சிணை இல்லாமல் உங்கள்

[illegible]

பேத்தியை என் மருமகளாக்க ஏன் ஒப்புக் கொண்டேன் என்று நினைத்தீர்கள்? இந்த வீட்டுக்கு ஒரே வாரிசு என்கிற ஒரே ஒரு காரணம்தான். குறைத்துக் குறைத்துப் போட்டாலும் இருபது லட்சம் பெறுமானம் உள்ள வீடு விள்ளாமல் விரியாமல் அப்படியே மகனுக்கு வந்து சேரும் என்பதால்தான். மாதம் மூவாயிரத்துக்குத் ததிங்கிணத்தோம் போடுகிறவனுக்கு இதைவிட அதிகம் எங்கே கிடைக்கும் என்று பார்த்தேன்.

"இப்போது வீடும் இல்லாமல் பணமும் இல்லாமல் இந்தப் பெண்ணை என் மகனுக்குக் கட்ட எனக்கு என்ன பைத்தியமா? டேய் ரவி, எழுந்திருடா போகலாம்" என்றார் அவர்.

"உனக்காக உற்றார் உறவினர் அத்தனை பேரையும் துறந்து விடுவேன்" என்றவன், தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று காட்டுக்குப் போன தசரதராமனை மிஞ்சி, கல்யாண மேடையை விட்டு இறங்கிச் சென்றான்.

மணமேடையில் உட்கார்ந்த நிலையில் உதறப்பட்ட தனது நிலை, மாதுரியின் மனதில் அப்போது சற்றும் படவில்லை.

ஆனால் வயதினாலும் நோயினாலும் நலிந்த கை கால்களோடு குரலும் பதற, "தம்பி, ரவித்தம்பி... போகாதேப்பா, அப்பாவைக் கூப்பிடம்மா... சி... சிதம்... பரம் சார் ச... சம்பந்தீ" என்று கெஞ்சியபடி, விரைந்து நடந்த சிதம்பரத்தையும் ரவீந்திரனையும் தொடர முயன்ற சிவநேசரின் தடுமாற்றம்தான் அவளை மிகவும் பாதித்தது.

"தாத்தா..." என்று அழைக்க முயன்றாள். அவள் தொண்டையிலிருந்து சத்தமே வரவில்லை. அது அடைத்துப் போயிருந்தது.

அதற்குள், திருமணத்தில் கலந்து கொள்ள விருந்தாளியாக வந்திருந்த வக்கீல் அங்கிள், எழுந்து வந்து, "போகிறது விடுங்கள் சிவநேசன். நாளை திருமணம் முடிந்த பின் இவர்களின் சுயரூபம் தெரியுமுன் இன்றே புரிந்ததே என்று சந்தோஷப்படுங்கள். ஒரு கொடிய விதியிலிருந்து மாதுரி

தப்பித்தாள் என்று நிம்மதி அடையுங்கள்..." என்று சிவநேசருக்குக் கைலாகு கொடுத்துத் தாங்கியவர் பின்புறம் திரும்பி மனைவியை விளித்தார்.

"இந்தா, மாதுரியை உள்ளே அழைத்துப் போ" என்று பணித்தார்.

அதற்குள் யாரோ சிலர், "எதற்கும் மாப்பிள்ளை வீட்டார் அறைக்குப் போய் பேசி பார்க்கலாம். இவ்வளவுக்கு வந்த திருமணத்தை நிறுத்துவதாவது?" என்று எழுந்து செல்வது மாதுரியின் புறக்கண்களில் பட்டது.

பொருளற்று அவர்களைத் தொடர்ந்த அவளது பார்வை சட்டென நின்று நிலைத்தது.

சற்றே இடுங்கிய பார்வை தவிர, மற்றபடி உணர்ச்சியற்ற முகத்துடன் முன்னிருந்த அதே நிலையில் கற்சிலை போல அவளருகே சசிதரன் நின்று கொண்டிருந்தான்.

இந்தத் திருமணம் நிற்க இவன்தான் காரணம்!

அதற்கு மேல் ஒன்றும் எண்ணத் தோன்றவில்லை அவளுக்கு.

அதற்குள் வக்கீலுடைய மனைவியின் கரங்கள், பரிவுடன் அவளைப் பற்றி எழுப்ப, இயந்திரமாய் எழுந்து அவளோடு உள்ளே சென்றாள் மாதுரி.

அவளிடம் அன்பு கொண்ட தோழிகள் சிலர் மணமகள் அறையில் நின்றிருந்தார்கள்.

இவளைப்போலப் பெண்கள்; அவர்களும் பெரும் அதிர்ச்சியிலிருந்தார்கள்.

மாலையில் வந்த சினேகிதிக்கு உட்கார நாற்காலி, காற்றுக்கு விசிறி, நிமிடத்தில் நாலைந்து என்று தங்களால் ஆன வசதிகளை அவளுக்குச் செய்தார்கள்.

ஆனால் எவரை பேசினால் தங்கள் தோழிக்கு எப்படி ஆறுதல் சொல்லி தேற்றுவது என்பதில் யாரும் வாய் திறக்கவில்லை.

பேசியிருந்தாலும் மாதுரிக்கும் அப்போது காதில் விழுந்திருக்குமோ என்னவோ, சுற்றிலும் எல்லாம் பொய்யுலகம் போல, அவளுக்கும் யாரிடமும் எதுவும் சொல்லத் தோன்றவில்லை.

அந்தச் சசிதரன் ஏன் அப்படிப் பார்த்தான்?

திருமணத்தை நிறுத்தவென்று திட்டம் போட்டுச் செய்து முடித்த பார்வையா?

உலக யுத்தத்தில், அணுகுண்டு வெடிப்பின் நாசத்தின் அளவை அறிந்து கொள்வதற்காகவே ஜப்பானில் அமெரிக்கா குண்டு வீசியது என்பார்கள்.

இவனும் குண்டு வெடித்துவிட்டு நாசம் எவ்வளவு என்று பெருமையோடு கணக்கிட்டுக் கொண்டிருந்தானா?

ஆனால் ஒன்று.

ரவீந்திரனுடைய குடும்பத்தினரின் சுயரூபம் தெரிந்தது.

உண்மைதான். அதுவும் தாலி ஏறுமுன் அது தெரிந்தது நன்மையும் கூடத்தான்.

அவர்களுடைய முகமூடியைக் கிழித்ததற்காக அந்தச் சசிதரனுக்கு நன்றி செலுத்த வேண்டுமா? அல்லது அதை எடுத்துக் காட்டியதற்கு வெறுக்க வேண்டுமா?

வெறுப்பதுதான் எளிதாகத் தோன்றியது மாதுரிக்கு.

அவன் குறுக்கிடாமல் இருந்திருந்தால் இந்நேரம் மாதுரி, திருமதி ரவீந்திரன் ஆகியிருப்பாள்.

தாத்தா ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு

அவளை சிரித்துக் கொண்டு, வாழ்த்துவோருக்கு நன்

தெரிந்திருக்கவேண்டும்... ஆனால் அது முட்டாளின் சொர்க்க

அவ்வளவுதான்.

எப்படியும் ஒரு நாள் உடைந்துவிடக் கூடியது...

ஆனால் இன்றைக்கு, இந்தக் கணத்தில், இப்படி ஒரு சுமை நெஞ்சை அழுத்தாதே!

மாதுரி தன்னுள் தானே உழன்று கொண்டு இருந்த போது, அறைக்குள் யாரோ வந்தார்கள்.

தாத்தாதான்.

தயங்கித் தயங்கிப் பேத்தியின் அருகே வந்தவர் அவளது முகத்தை வருடி "என் கண்ணே, இனி உன் கதி..." என்றார் கண்ணீர் வழிய.

ஆக மாப்பிள்ளை வீட்டார்... அறைக்குச் சென்று பேசியது யென்ன தரவில்லை.

போகிட்டும். அது எப்படியேனும் போகட்டும். இப்போது தாத்தாவைத் தேற்றுவதுதான் முதல் கடமை.

தாத்தாவின் கையைப் பற்றி, அருகில் இருந்த மோடாவில் உட்கார வைத்து, "எனக்கு என்ன தாத்தா ஒன்றும் இல்லை...யே" என்று மறுவலிக்க முயன்றபோது அன்று கல்லூரியில் அவளுக்குப் பிரிவுபசார் கொடுக்கச் சென்ற போது பொறாமையுடன் பேசிய வினோதாவின் முகம் நினைவு வந்தது. எப்போதும் இதமாகப் பேசி வருந்தும் மனோகரி...

பிள்ளை வீட்டார் அவசரப்படுத்துவதால் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டுத் திருமண வாழ்வைத் தொடங்கப் போவதாக அறிவித்துவிட்டு... மீண்டும் அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பாள்?

எண்ணமோ ஓட, மாதுரியின் முகம் சூடாகிக் கன்றி சிவந்து வேர்த்து வடிந்தது.

"பெரியவளாக மட்டுமின்றிப் பதினைந்து ஆண்டுகள் வளர்த்தவர் ஆயிற்றே. அவருக்குப் புரியாமல் இவளை எப்படி எல்லாம் கஷ்டப்படுகிறாளே..." என்று அவர்

வேதனையுடன் அரற்றியபோது வக்கீல் அந்த அறைக்குள் வந்தார்.

"உச்சுச்சு. என்ன கண்ணீர் சிவநேசர் சார்? ஒருவன் மனைவியை இன்னொருவன் கொண்டு போக முடியாது என்பது பெரியவர் உங்களுக்குத் தெரியாதா? முதலில் என்னோடு வெளியே வாருங்கள்" என்று சிவநேசரின் கையைப் பற்றி எழுப்பினார். "...மெள்ள மெள்ள நான் தான் சொல்கிறேனில்லையா? தைரியமாய் வாருங்கள். அங்கே அருமையாய் ஒரு பேச்சு வந்திருக்கிறது. விஷயம் தெரிந்தால் நீங்கள் என்னை உதறிவிட்டு சின்னப்பிள்ளை மாதிரித் துள்ளி ஓடுவீர்கள்... வாருங்கள்..." என்று அழைத்துச் சென்றார்.

என்ன பேச்சு?

வேறு மாதிரிப் பேரம் எதற்கும் ரவீந்திரன் குடும்பத்தினர் இணக்கம் காட்டியிருப்பார்களா?

அவர்கள் சரியென்று திரும்பி வந்தால்கூட இனி எப்படி அவளால் அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாய்க் கலந்து வாழ முடியும்? அதைவிட வினோதாவையும், மனோகரியையும் எதிர் கொள்வதே மேல்.

ஆனால் இந்தத் தாத்தா...

தாத்தா மீண்டும் திரும்பி வந்தபோது மெய்யாகவே அவர் உடல்நிலை அனுமதித்த அளவுக்கு மேலாகவே "விசுக் விசுக்" என்றுதான் நடந்து வந்தார்.

பேத்தியின் அருகில் வந்து வாஞ்சையோடு அவ முகத்தைப் பார்த்து, "வக்கீல் சொன்னது மெய்தானம்ம பூகைக்கு உரிய பூவைக் கழுதை மேய முடியுமா? கடவு மகளுக்கு, எவ்வளவோ மேலான வாழ்வை நிர்ணயித்த இருக்கையிலே நான் முட்டாளைப்போல உன்னை எங்கே தன்னை நிரூபித்தேனே..." என்றவர் திரும்பி, "என்னம்ம வக்கீலம்மா, என் பேத்தியின் அலங்காரம்... இந்த பவு

மையெல்லாம் கலையாமல் நன்றாக இருக்கிறதா? கலைந்திருந்தால் சீக்கிரம் சீர் பண்ணுங்கள் நல்ல நேரம் இன்னும் பதினைந்து நிமிடம்தான் பாக்கி இருக்கிறது. என் கண்ணம்மா, உன் அம்மாவுக்குக் கொடுத்த வாக்கு நல்லபடியாக நிறைவேறப் போவதை நினைத்தால் எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது தெரியுமா? சரி, சரி, பெண்களா, சீக்கிரமாக மதுக்குட்டியை மேடைக்கு அழைத்து வாருங்கள்" என்று பூரிப்புடன் அறை வாயிலை நோக்கித் திரும்பினார்.

மாதுரியால் உற்சாகம் கொள்ள முடியவில்லை.

மாறாக அது யார் அந்த மகானுபாவன், இவ்வளவு குறுகிய அவகாசத்தில் மாப்பிள்ளையாக மணமேடை ஏற ஆனங்குகிறவன் யாராவது பெண் கிடைக்காமல் தவித்தவனா என்று இளக்காரமாய்த்தான் அவளுக்கு எண்ணம் ஓடிற்று.

ஆனால் சிவநேசரின் உற்சாகத்தைக் காண்கையில் அந்த அபிப்பிராயத்தை வெளிக்காட்டவும் முடியவில்லை.

மனதில் தோன்றிய ஏளனத்தை வெளிக்காட்டாமல் மறைத்து, பாட்டனாரை அழைத்தாள்.

அவர் நிற்கவும், அவரது கையைப் பற்றி, "தாத்தா ஒன்று சொல்லலாமா?" என்று மெதுவாகக் கேட்டாள்.

"என்னம்மா கண்ணு?" என்றார் சிறு கலக்கத்துடன்.

அவசரத்தில் திருமணம் செய்தால் அவகாசத்தில் வருத்தப்பட நேரும் என்பார்களே. ஒரு மணமகனைக் கண்டுபிடித்து... அந்த ஆளின் குணம், தரம் எல்லாம்..."

சிவநேசரின் முகம் வாடவும் அவள் பேச்சு நின்று போனது.

பேத்தி அவரைப் பார்த்து முடிவு செய்ததே ஆடிக்காற்று வீசும் பொழுதில் பிறந்துவிட்ட பிறகு, இந்தத் தாத்தாவின் அனுபவ நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. இல்லையா, என்ன சொல்லுகிறாள், அவர் வருத்தமாக உரைக்கவும் மாதுரி [illegible]

"நான் மட்டும் இல்லை கண்ணு, நம் வக்கீல்கூட...." என்றவரை இடைமறித்து, "உங்கள் வார்த்தைக்கு மேல் எனக்கு வேறு வேண்டுமா, தாத்தா? ஒரு ரவீந்திரனால் உங்களிடம் எனக்கு உள்ள நம்பிக்கையை அசைத்துவிட முடியும் என்றா எண்ணினீர்கள்? வாருங்கள், தாத்தா. நீங்கள் யாருக்குக் கழுத்தை நீட்டச் சொன்னாலும் கண்ணை மூடிக்கொண்டு நீட்டுவேன். வாருங்கள்" என்று மடமடவென்று முன்னே நடக்கத் தொடங்கினாள்.

மீண்டும் பளீரிட்ட பொய்ப்பல் சிரிப்புடன், "மெள்ள மெள்ள குட்டிம்மா கல்யாணப் பெண் இப்படி ஓடக் கூடாதுடா. அவளோடு வாருங்கள் பிள்ளைகளா" என்று மீண்டும் மிடுக்குடன் முன்னே சென்றார் சிவநேசர்.

யாரோ? அவனைப் பார்த்தால் அன்று ஆதிமூலமே என்ற யானையைக் காத்த ஆபத்பாந்தவன், மகாவிஷ்ணுவாகவே தாத்தாவுக்குத் தோன்றுகிறது. கூடவே ரவீந்திரனை விடவும் பணத்திலோ, அந்தஸ்திலோ மேலானவனாகவும் இருக்க வேண்டும். மற்றபடி தாத்தா இப்படிப் பூரிக்கத் தேவையில்லை...

சற்றும் எதிர்பாராமல் மடமடவென்று நடந்துவிட்ட நிகழ்ச்சிகள் ஏதோ கனவு நிலையாய்த் தோன்ற, நிகழ்ச்சியில் சம்பந்தப்படாத மூன்றாம் நபர் போலத் தன் போக்கில் எண்ணமிட்டபடி மணமேடையை நெருங்கிய மாதுரி சட்டெனத் திகைத்தாள்.

ஏனெனில் அங்கே அவளது வருகைக்காக மண மேடையில் மணமகனாக அமர்ந்து காத்திருந்தவன் சசிதரன்.

இவன்?

இந்தச் சசிதரன் அவளது திருமணம் நின்று போகக் காரணமாக இருந்தவன்?

மனிதர்களிடம் அவளுக்கு இருந்த நம்பிக்கையைக் கலைத்தவன்!

அவளுடைய, தாத்தாவுடைய துயரத்தை ஒரு கல் போல் நின்று வேடிக்கை பார்த்தவன்!

இவனையா...?

திரும்பி ஓடிவிட வேண்டும் போலக் கை கால்கள் துடிக்க நின்றிருந்தவளின் கண்களில் சிவநேசர் பட்டார்.

வெண்ணம் மனத்தோடேயே நின்று போயிற்று.

மாலை மாற்றுகையில் அவன் முகத்தை அவள் பார்க்க நேர்ந்தது.

அவனது பார்வை அப்போதும் அவளுக்குப் புரியவில்லை தான்.

அவனுள் இருப்பது எதையும் காட்டாமல் மறைத்தபடி, அவள் முகத்தை அப்படியே படிப்பதுபோல...

சட்டென இமைகளைத் தாழ்த்திக் கொண்டாள் மாதுரி.

அன்று அவள் ஏன் அவனது பார்வையைத் திருப்ப வேண்டும்? அவனின் மனதை அறியவும் பிடிவாதம் ஏன் வர வேண்டும்? யோசித்திருந்தால் பிற்பாடு அவ்வளவு துயரப்பட்டிருக்க நேர்ந்திருக்காதோ?

அன்று தொடங்கிய பின்வாங்கல் தொடர்ந்து சசிதரன் சம்பந்தப்பட்ட அனைத்திலுமே அவளுக்குத் தோல்விதான். பின்னேறுதல்தான். கடைசியாக ஒரேயடியாகப் புறமுதுகு காட்டி ஓட்டமாய் ஓடிவந்து விட்டாள்.

ஒருவேளை அன்று துணிந்து அவனை எதிர்த்திருந்தால்...

ஊகூம் அவளது உயிர் கூட நிலைத்து இருந்திராது.

அவளால் நியாய அநியாயம் பாராமல் வாழ முடியாது, போராட்டத்தில் கூட அப்படித்தான்.

அந்த மாதிரி வரைமுறைகளை அறியாதவர்களோடு எப்படிப் போராடி எப்படி நிலைப்பது? நாலே நாளில் அபிமன்யுவாய் அழிந்திருப்பாள்.

அன்று ஓடிவந்த ஒரே காரணத்தால் கண்ணனும் இந்த ஒன்றரை ஆண்டுகால ஆனந்தமும் கிடைத்தன.

ஆனால் இதுகூட அந்தக் கடவுளுக்கு ஏன் பொறுக்க வில்லை?

இன்று அவனிடமே போய்க் கையேந்த வேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டாரே!

சசிதரனைச் சந்திப்பதை நினைத்தாலே அவளுக்கு மனம் குன்றியது. அதுவும் அவனிடம் யாசிக்கச் செல்வது என்றால் அதை எண்ணிப் பார்க்கக்கூட அவளுக்குச் சக்தியில்லை.

ஏதோ தோன்றவும், எழுந்து உட்கார்ந்து மகனின் முகத்தை விடிவிளக்கின் ஒளியில் உற்றுப் பார்த்தாள்.

ஊகூம், கண்ணன் ஜாடையில் அன்னையைக் கொண்டு [illegible]ருக்கவில்லை.

[illegible]ால் உளி கொண்டு செதுக்கிய கற்சிலை போன்ற [illegible] தந்தையின் கடினமும் அவனிடமும் இல்லை. அதுவும் [illegible] அவளை அணைத்துக் கொள்ள வேண்டும்போல [illegible] போலல்லவா தோன்றுகிறான்!

ஒருவேளை சசிதரனும் தூக்கத்தின் தளர்வில் மென்மையாகத் தெரிவானோ?

யோசித்துப் பார்த்தும் மாதுரிக்கு நினைவு வரவில்லை.

கணவன் மனைவி என்று ஆன பிறகும், ஒரு குழந்தை உருவாகும் அளவு பழகியபோது கூட அவனை அந்த அளவு ஊன்றிக் கவனிக்கும் மனநிலை அவளுக்கு வரவில்லை. ஏன் அவளாக மனம் விரும்பி அவனோடு பழகவும் இல்லை.

அதற்குச் சின்னச் சின்னதாய் எத்தனையோ காரணங்கள் இருந்த போதும் முக்கியமான ஒன்று அவளுடைய தாத்தா சிவநேசரின் மறைவு.

கடவுள் சன்னிதானத்தில் அவரது இறப்பின் பழி சசிதரனைச் சாராது இருக்கலாம். ஆனால் அவளைப் பொறுத்த வரையில் தாத்தாவின் இழப்பின் மூலகாரணம் அவன்தான். அப்படித்தான் அவள் நினைத்தாள்.

அவன் மட்டும், அந்த வீடு அவனதாகப் போகிறது [illegible]தை அது உண்மையாகவே இருக்கலாம். ஆனால் அந்த [illegible]லையை அந்த நேரத்தில் ரவீந்திரனுடைய தந்தையிடம் [illegible]சொல்லித்தான் ஆக வேண்டும் என்பது இல்லையே, அதைச் [illegible]சொல்லாமல் இருந்திருந்தால் தாத்தாவுக்கு இந்த அடி [illegible]ழுந்திராதே.

[illegible]னவே பலவீனமான அந்த இருதயத்தை, அஞ்ச [illegible]வைத்து, அழ வைத்து, அடியோடு பலமிழக்க வைத்தது அவன் [illegible]ண்டு தானே.

[illegible] எப்போதுமே திடகாத்திரர் அல்ல.

[illegible]யும் மாதுரியின் ஐந்தாவது வயதில் மின்னாமல் [illegible]ழுங்காமல் வீழ்ந்த இடிபோல மகளும், மருமகனும் ஒரு [illegible]தில் ஒன்றாக மறைந்தபோது முதல் தடவையாக அவரது [illegible] ஒழுங்காகச் செய்ய மறந்தது.

எப்படியோ அவர் உயிர் பிழைத்து மீண்டும் வந்தார்.

ஆனால் மகளுடைய இழப்பைத் தாங்கி, கணவனுக்காகப் போராடி அவரை எமனிடமிருந்து மீட்ட அவருடைய மனைவியால் தேற முடியவில்லை.

மனைவியின் இழப்புக்கு ஓரளவு முன்னறிவிப்பு இருந்ததாலோ என்னவோ, அது அவரது உடலை அவ்வளவு பாதிக்கவில்லை. ஆனால் எதையும் எடுத்துச் செய்யும் பலமிழந்து போனார்.

மாதுரிக்கு நினைவு தெரிந்து வேலை, தொழில் என்று சிவநேசர் வெளியே சென்று அவள் பார்த்தது இல்லை.

பலூன், பொம்மை என்று விரும்பியதை வாங்கித் தரும் தாத்தா. அதற்குரிய பணத்துக்கு என்ன செய்கிறார் என்கிற யோசனை அந்த வயதில் அவளுக்கு வந்தது இல்லை.

ஓரளவு விபரம் புரிகிற வயதில், பள்ளிப் படிவங்களில் 'கார்டிய'னின் தொழில் என்பதற்கு நேரே 'லான்ட் லார்ட்' என்று எழுதியிருப்பதைப் பார்த்து, ஏதோ நிலத்து வருமானம் என்று எண்ணியதுண்டு.

இன்னும் கொஞ்சம் பெரியவள் ஆனபிறகு அவளுக்கு ஏதேதோ நெருடத் தொடங்கியது.

உபயோகத்துக்கு தேவை இல்லை என்று பூட்டி வைத்த அறைகள் மெல்ல சிதிலமாகத் தொடங்கிய போதும் தாத்தா அதைக் கண்டு கொள்ளாமல் அசட்டை செய்தது.

நிலத்து வருமானம் என்றால் அந்த நிலத்தைத் தாத்தா ஒரு தரம் கூடச் சென்று பாராதது...

பொதுவாக சிவநேசரிடம் அவள் கேட்டபோது "[illegible] வைர நெக்லஸ் வேண்டுமென்று கேட்கப் போகிறாயா? அல்லது மோதிரத்துக்காவது தாத்தா தேறுவாரா என்று பார்க்கிறாயா?" என்று வேடிக்கை போலப் பேசி

விஷயத்தை விளக்கி விட்ட போதும், தாத்தாவின் முகம் வாடினாற் போல பேத்தி உணர்ந்தாள்.

அன்றிரவு உறக்கம் வராமல், அவர் புரண்டதைக் காணவும் அதன் பிறகு பணவிஷயம் பற்றி அவரிடம் மாதுரி பேசிய தில்லை. தனக்கு எதுவும் வேண்டும் என்று கேட்டதும் இல்லை.

விழுந்து விழுந்து படித்த படிப்பைக் கூட உபகாரச் சம்பளத்திலேயே நடத்திக் கொண்டாள்.

காரணம் புரிந்து கொள்ளாத அளவு அவள் முட்டாள் அல்ல.

எத்தனை வரதட்சணை ஒழிப்புச் சட்டங்கள் வந்த போதும் செலவில்லாமல் திருமணம் நடக்கிற நிலைமை இப்போதைக்கு எங்கே இல்லை.

'பெரிய படிப்பு படித்து பெரிய வேலை பார்க்கப் போகிறேன்' என்று ஜாடைமாடையாகச் சொல்லிப் பார்த்தாள்.

அவள் பேச்சை அவர் சீரியசாக எடுத்துக் கொள்ளவும் இல்லை, கவலைப்படுவதை விடவும் இல்லை.

அந்தச் சமயத்தில்தான், அவரது கவலைக்கு விடிவாக [illegible]ரன் வந்து சேர்ந்தான்.

ஆனால் விடிவு என்று நினைக்க அவன் வேறு நினைத்திருப்பான் போலும்.

குறைந்த பட்சம் அவனுடைய தந்தை வேறு [illegible]நின்றுதான் இருந்திருக்கிறார்.

அவரோடு உடன் பயின்ற தோழி ஒருத்தியின் பெரியம்மா [illegible]ரன்.

அவளது கல்லூரி விழா முடிந்து வீடு திரும்பத் தாமதம் [illegible] மாதுரியை வீட்டில் கொணர்ந்து விட்டு விட்டுப் [illegible]

[illegible] தங்கையின் நடனத்தைக் காண வந்திருந்த [illegible] இருந்தான்.

முழு நிலவின் ஒளியில் வீட்டைப் பார்க்கையில் மாதுரிக்கு உள்ளுரப் பெருமிதம்தான் அதைத் தோழி குறிப்பிட்டுச் சொல்லவும் ஒரே மகிழ்ச்சி.

மறுநாள் வீடு திரும்பும்போது தெரு முனையில் அவளைத் தற்செயலாகச் சந்தித்த ரவீந்திரன் வீடுவரை உடன் வந்து விட்டுவிட்டுத் தாத்தாவிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போனான்.

அப்புறம் அடிக்கடி வந்தான்; அவன் பெற்றோர் வந்தனர்.

நகை, தொகை வேண்டாம். பெண்ணைக் கொடுத்தால் போதும் என்றதும் சிவநேசருக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

மகளுக்குக் கிடைத்தது போலவே பேத்திக்கும் அவளிடம் அன்பு கொண்டு மணக்கும் ஒருவன் கிடைத்தது குறித்து அவளுக்கு ஒரே பூரிப்பு.

ஆனால் திருமணத்தன்று மாப்பிள்ளை வீட்டாரின் சாயம் வெளுத்தபோது ஏற்கனவே வைத்திருந்த அவரது இதயத்தின் மீது பெரிய அடி விழுந்து விட்டது.

பிறகு பேத்தியின் திருமணம் நில்லாமல் சசிதரனோடு நடந்தபோது அந்தப் பூரிப்பையும் அவரால் தாங்க முடிய வில்லை போதும்.

வக்கீலின் தாங்கலில் நின்றபடிதான் மணமக்களை ஆசீர்வதித்தார்.

பிறகு சோபாவில் அமர்ந்து, வக்கீலுடனும் புது மாப்பிள்ளையுடனும் அவர் மெல்லிய குரலில் ஏதோ பேசிக் கொண்டு இருப்பதைப் பார்த்துவிட்டுத்தான் மாதுரி விலகிப் போனாள்.

அவளுக்கு மனிதர்களே இல்லாத ஏதாவது துருவப் பிரதேசத்தில் போய் தனித்து அமர வேண்டும் போல இருந்தது.

அது அசாத்தியம் என்பதால் ஏதாவது காலி அறை தென்படுகிறதா என்று தேடியபடி அவசரமாக உள்ளே புகுந்து உள்ளே பூட்டிக்கொள்ள வேறு அறை தேடிச் சென்றாள்.

கடைசியில் அவளுடைய பெற்றோர் அறைதான் கிடைத்தது.

ஓசைப்படாமல் உள்ளே சென்று கதவைச் சாத்திக் கொண்டு அவசரமாக அலங்காரங்களைக் கலைத்தவள், 'அப்பாடி!' என்று அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

அவளுக்கு நிறைய யோசிக்க வேண்டியிருந்தது.

ஆனால், பாறையாய்க் கனத்த தலையை கையில் தாங்கியபடி அமர்ந்தவளுக்கு யோசனையும் ஒன்றும் ஓட வில்லை.

யாரிவன் இந்த சசிதரன்..?

நின்ற நிலையில் தன்னிஷ்டமாய் தாலி கட்டி விட்டானே, இவனுடைய பெற்றோர், மற்ற நெருங்கிய உறவினர் ஒத்துக் கொள்வார்களா?

ஒரு வேளை யாரையும் மதியாமல் எடுத்தெறிகிற திமிர்க் காரனா?

அல்லது... ஒருவேளை அவன் ஏற்கனவே திருமணமானவனோ? அந்த மனைவியைப் பிடிக்காமல்... சேச்சே இராது. அவ்வளவு தைரியம் அவனுக்குக்கூட வருவது கடினம். மனைவி இருக்கையில் மறு திருமணம் செல்லாது என்பதோடு உள்ளே போகவும் நேரும் என்பது கூடவா தெரியாமல் இருக்கும்? உறுதி.

ஆனால் இவனைப்பற்றி ஒன்றுமே தெரியாமல் இவனோடு வாழ்க்கை

என்று நினைத்து நினைத்து சென்ற சிந்தனை அங்கே நின்றே போயிற்று.

அப்போது வெளியே "மாதுரி... மாதுரி எங்கே?" என்று குரல் கேட்டது. தொடர்ந்து கதவு தட்டி, "மாதுரி, நீ உள்ளே இருக்கிறாயா?" என்று அழைத்தபடியே கதவும், மனமற்று எழுந்து வந்து கதவை திறந்தாள் அவள்.

"சீக்கிரம் போப்பா, அங்கே திடீரென்று உன் தாத்தாவுக்கு... உடம்பு சரியில்லை."

உண்மையை முழுமையாகச் சொல்ல அந்தத் தோழிக்கு மனம் வரவில்லை.

ஆனால் மூச்சுக்குத் திணறிக் கொண்டிருந்த சிவநேசரின் பார்வை, அவருடைய அருமைப் பேத்தியின் முகத்திலேயே நிலைத்துப் போயிற்று.

மாதுரியால் அதை நம்பவே முடியவில்லை.

நினைவு அறிந்ததிலிருந்து, சுற்றி சுற்றி வந்த தாத்தா இனி இல்லை என்றால் எப்படி ஒத்துக் கொள்வது?

தோட்டத்தில் தேன்சிட்டு குஞ்சு பொரித்திருப்பதையும், பப்பாளி இலையில் வரிக்குயில் அமர்ந்து கூவுவதையும் இனி யாரிடம் காட்டுவது?

கல்லூரிக் கதைகளை யாரிடம் சொல்வது?

காரணம் புரியாமல் அடிவாங்கிய குழந்தைபோல் மலைத்து நின்றவள், தன்னை மெதுவாக நடத்திச் சென்று ஒரு நாற்காலியில் அமர வைத்த கணவனை உற்றவனாக உணர்ந்து கொள்ளவே இல்லை.

அந்த வீட்டில் வசித்தவள் மாதுரிதான் என்றாலும் அது எங்கே, என்ன என்று அவளை யாரும் தொல்லை செய்யவில்லை.

அப்படித் தொல்லை செய்யாமல் சசிதரன் பார்த்துக் கொண்டான் என்று இப்போது யோசிக்கும்போது தோன்றியது மாதுரிக்கு.

அவர்கள் போது அவனை நோக்கி வந்தவர்களை அழைத்து அவளை வேற்றி பேசி அனுப்பியது கூட லேசாக நினைவு வந்தது.

ஆனால், அன்று ஒன்றும் தோன்றவில்லை.

இனித் தாத்தா இல்லை என்பதுதான் தவிர வேறு ஒன்றும் தோன்றாமல், யாருடனும் பேசப் பிடிக்காமல் எல்லோரிடமிருந்தும் விலகி, ஒதுங்கித் தனித்திருந்தாள், அவனிடமிருந்தும்தான்.

5

அடுத்த ஏழு நாட்களில் நட்பு, சொந்தம் என்று வந்த அத்தனை பேரும் சென்றுவிட, அந்தப் பெரிய வீடு 'ஹோ'வென்று காலியாயிற்று. அவனையும் அவளையும் தவிர.

காலையில் வந்து, சுற்றி வேலை செய்து, சமையல் செய்து வைத்துவிட்டு மாலையில் வீடு செல்லும் ஆயாவை சேர்த்துக் கொண்டால் அவளையும் தவிர-

அப்போதும் மாதுரியால் சசிதரனிடம் இயல்பாகப் பேசப் பழக முடியவில்லை.

அவனுக்கும் அப்படித்தான் இருந்திருக்குமோ, என்னவோ, வீட்டில் ஒரே சமயம் அவள் இருக்கும் திசை நாடி சசிதரன் வருவதை செய்தான். அப்படி வந்தவனிடம் நின்று பேசி, தன் மனதைப் பகிர்ந்து கொள்ள அவளுக்கு மனம் வரவில்லை.

மாறாக, அப்படி அவன் வருவது பார்வையில் பட்டால் வேண்டாதது போல விலகிச் சென்றுவிடுவாள்.

ஆதரவை மட்டும் முதலில் அந்தத் திருமணத்தை நிறுத்தினால் தாத்தா உயிரோடு இருந்திருப்பார் என்கிற குற்றவுணர்வை அவளால் ஒதுக்க முடியவில்லை.

மரபை மீறி உடைய பெண் என்பதால் ரவீந்திரன் குடும்பத்தினரின் சாயம் கெட்டியாக இருந்திருந்தால் தப்பு

ஒன்றும் நேர்ந்திராது என்கிற உண்மை அவளது உள்ளத்தின் ஒரு மூலையில் உறுத்தத்தான் செய்தது.

ஆனாலும் அந்த மட்ட சாயத்தை அந்த நேரத்தில் அலசிக் காட்டித் திருமணத்தை நிறுத்த அவன் யார்? பிறகு சொல்லியிருந்தால் பேத்தியின் திருமணம் நின்று போயிற்றே என்ற வேதனை சிவநேசருக்கு நேர்ந்திராதல்லவா?

அவன் பேசாதிருந்து திருமணம் நடந்தபின் வீட்டு விஷயம் வெளிப்பட்டிருந்தால், ரவீந்திரனுடைய குடும்பத்தினரிடம் அவள் என்ன பாடுபட்டிருக்கக்கூடும் என்பது அவளுக்குப் பெரிதாகத் தெரியவில்லை.

ஆண்டவனுக்கு அடுத்தது அவளுக்கு எல்லாமுமான தாத்தாவின் இழப்பு பெரிதாகத் தோன்ற, அதற்கு அவனையே காரண கர்த்தாவாக்கி முடிந்த அளவு ஒதுங்கிப் போனாள்.

அந்த ஒரு வாரத்தின் பின் அந்த வீட்டுக்கு விருந்தாளியாகச் சசிதரனுடைய சகோதரி தனலட்சுமியும் அவளுடைய மகள் பத்மினியும் வந்தார்கள்.

சசிதரனுடைய சகோதரி எப்படிப்பட்டவள் என்று இன்று வரையிலும் மாதுரியால் கணிக்க முடியவில்லை.

அன்பொழுகத்தான் பேசினாள். கண்ணு, தங்கம் என்று கனிவாகத்தான் அழைத்தாள் வந்ததுமே. "என்னடா, தம்பி சசி, இப்போது நான் உன்னிடம் கல்யாணம் விசாரிக்கட்டுமா, கருமாதி விசாரிக்கட்டுமா? பத்துப் பொருத்தம் பார்க்கவேணும் என்பார்கள், நீ ஒன்றுகூடப் பாராமல் செய்தது எப்படி ஆயிற்று பார்" என்று அங்கலாய்த்தாள்.

"ஷ். அக்கா" ஏன்று அவன் எச்சரிக்கவும், அப்போதுதான் பார்ப்பவள் போல மாதுரியைப் பார்த்தவள், ஓடி வந்து தம்பி மகளையை அணைத்துக் கொண்டாள். "அட கண்ணா, தம்பி சொல்லியே சொன்னதும் உடனே ஓடி வந்து உன்னைப் பார்க்க வேணும் என்று எனக்கு ஆசை. ஆனால் இந்தப் பாழும்

உடம்புக்கு என் மனது புரிகிறதா? ஒரே காய்ச்சல், நேற்றுதான் படுக்கையைவிட்டு எழுந்தேன். இன்றைக்கு வந்து விட்டேன்... என்ன பத்தும்மா?" என்று மகளைச் சாட்சிக்கு அழைத்தாள்.

"ஆமாம், பத்து இருபது முப்பது" என்று முகத்தைச் சுளித்துத் தாயாருக்குப் பழிப்புக் காட்டினாள் மகள்.

மாமனின் தோளைப் பற்றித் தொங்கியவாறே, "பாருங்கள் மாமா, இந்த அம்மாவை, அழகாய் மின்னி என்று கூப்பிடுங்கள் என்றால் பத்து கித்து என்கிறார்கள்" என்று மூன்றாம்பிறை பட்டதேவி குரலில் புகார் செய்தாள்.

சசிதரன் பதில் கூறுமுன், அவன் முகவாயைத்தொட்டு தன் பக்கம் திருப்பி, "மாமா மாமா பங்களூர் வரை வந்தாயிற்று. நாம் ஊட்டி வரை போய் பிருந்தாவனம் வரை வருவோமா? என்ன மாமா..." என்று மழலையாய் மிழற்றிக் கொஞ்சினாள்.

தோளில் தொத்திக் கொண்டு தொங்கிய அந்தப் பெண்ணை விலக்கி விடாதது மட்டுமல்ல. மறு கரத்தால் அவள் கன்னத்தில் [illegible] அதெலலாம் பிறகு பார்க்கலாம். நீ முதலில் அத்தையை அறிமுகம் செய்து கொள்ள வேண்டாமா?" என்று அவளை [illegible] நடத்தி மாதுரியின் அருகே வந்தான்.

"மாதுரி, அவர்கள் என் அக்கா ஒரே அக்கா, பெறாத தாய் [illegible] பெயர் தனலட்சுமி. அவள் அக்காவின் ஒரே மகள்- [illegible] பத்மினி. அக்கா பத்தும்மா என்பார்கள். இவளுக்குத் [illegible] மின்னி, அல்லது மின்னி என்று அடுத்தவர் அழைப்பதில் [illegible] நான், அந்த சித்தூர் ராணியின் நினைவில் பத்மினி [illegible] பெயர் அழகாக இருக்கிறதில்லையா?" என்று [illegible] முழுமையாக முறுவலித்தான்.

முதல் முதலாகக் கண்டதாலோ என்னவோ, அந்த [illegible] மாதுரி பிரமித்துப் போனாள்.

அந்தப் பிரமிப்பையும் மீறிக்கொண்டு சசிதரனும் அவன் [illegible] ஓடி நின்ற நிலை அவளுள் எரிச்சலை [illegible]

இரண்டில் எதைப் பற்றியும் யோசிக்கப் பிடிக்காமல் முயன்று புன்னகை செய்து, "ஹல்லோ" என்றாள் மாதுரி.

முயன்று வந்தபோதும், வடிவான செவ்விதழ்களில் இடையே முத்துப் பற்கள் மின்னும்போது முறுவல் அழகற்றுப் போய்விடுமா?

சசிதரனின் பார்வை மனைவியின் முகத்தில் படிவதை கண்ட பத்மினியின் முகம் கடுத்தது.

சசிதரனுடைய உறவினரிடம் ஓரளவு வெறுப்பையே எதிர்பார்த்திருந்தபோதும் மாதுரி சற்றுத் திகைத்துப் போனாள்.

ஏனெனில் பத்மினியின் பார்வையில் நிறைந்திருந்தது கலப்படமற்ற குரோதம்.

தனலட்சுமியும், பத்மினியும் வந்த பிறகு வீட்டில் ஆளில்லாமல் தனித்திருக்கும் உணர்வு மறைந்தது.

தோழமை, துணை என்று இல்லாவிட்டாலும் வீட்டில் சத்தம் இருந்தது.

ஏகப்பட்ட சத்தம்!

முதலில் குளியல் அறையில் 'கீசர்' இல்லை என்று கத்தத் தொடங்கினாள் பத்மினி.

பிறகு ஏசி இல்லை என்று ஒரு கூப்பாடு.

அப்புறம், அந்த இடத்தில் காரை பெயர்ந்து இருக்கிறது. இப்போது இந்த வீடு இடிந்து தலையில் விழப்போகிறது என்று [illegible] அலறல்.

"கண்ணராவி... இது என்ன சாப்பாடு?" என்று கூச்சல்? [illegible] அலறுப்பி வேறு வாங்கிவந்த பிறகுதான் உண்டாள்.

[illegible] அளவு மாமனும் தாயுமாக பத்மினியின் [illegible] நிறைவேற்றவே முயல்வதையும் வியப்பும் [illegible]யுமாக மாதுரி கண்டாள்.

இதென்ன அநாகரீகம் என்று கண்டிக்க வேண்டாமா?

தாத்தா அவ்வளவு பிரியமாக இருந்தாலும்கூட இது போல காட்டுக் கத்தலுக்கெல்லாம் அவர் இடம் கொடுத்ததே இல்லை, கண்டித்து விடுவார்.

இங்கானால் அம்மாவும் அம்மானுமாக விழுந்து விழுந்து சேவிக்கிறார்கள்.

அதிலும், சசிதரன் காது கேளாத சமயங்களில், "இப்படி ஒரு பிச்சைக்காரக் குடிசையில் எத்தனை நாள் அடைந்து கிடப்பது?" தெளிவாகவே எரிச்சல் பட்டாள்.

"இந்த வீட்டில் இருக்கும்படி உன்னை யாரும் வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கவில்லை. போவதானால் போயேன்" கொடுக்கெனத் திருப்பிக் கொடுக்க வேண்டும் போல மாதுரியின் நாவைத் துடிக்கும்.

ஆனால் அப்படி உரிமையோடு சொல்ல இப்போது அது மாதுரியின் வீடு அல்லவே?

அந்த பத்துமின்னியுடைய மாமாவுடையது ஆயிற்றே.

மாமனிடம் மருமகளுக்கு இருந்த சலுகை வெளிப் [illegible] தெரிந்தது.

அது எப்படியோ போகட்டும், மருமகளுக்குப் பரிந்து [illegible] வந்து மாதுரியை அவன் அதட்டி அடக்கினான் [illegible] புறம் அவளால் யார் முகத்தை நிமிர்ந்து பார்க்க [illegible]

[illegible] வேதனைக்கு மேல் இது வேற ஏன் என்று [illegible] மாதுரி.

பத்மினி அப்படிக் கத்துகிறபோது சுற்றுமுற்றும் பார்த்து [illegible] அமைதிப்படுத்துவாள் தனலட்சுமி.

சசிதரன் இல்லாத சமயங்களில், "மாமாவுக்காக எதையும் தாங்குவேன் என்பாயே கண்ணா, கொஞ்சநாள் பொறுத்துக் கொள்" என்று சமாதானப்படுத்துவாள்.

சில நேரங்களில் தாயும் மகளுமாய் குசுகுசுவென்று ரகசியம் பேசுவார்கள். மாதுரி வந்தால் நின்று விடும்.

மொத்தத்தில் தன் வீட்டிலேயே அந்நியமாய் உணரத் தொடங்கினாள் மாதுரி.

மாதுரியின், வீட்டில் டி.வி . இருந்தது.

அது மாதுரியாக வாய் திறந்து வேண்டும் என்று கேளாத போதும், அக்கம் பக்கம் அத்தனை வீடுகளிலும் இருப்பதை பார்த்துவிட்டு அவள் தாத்தாவாகப் பார்த்து வாங்கி வைத்தது.

அதன் முன்னே, தட்டில் எதையாவது எடுத்து வந்து கொறித்தபடி, வாடகைக்கு எடுத்து வந்த வி. சி. ஆரில், ஏதாவது படத்தை ஓட விட்டுவிட்டு, அமர்ந்த பிறகு தான் பத்மினியின் கூக்குரல் கொஞ்சம் அடங்கும்.

அந்த நேரங்களில் தனலட்சுமி மாதுரியிடம் வந்து ஏதாவது பேசிக்கொண்டு இருப்பாள்.

மாதுரியின் தாத்தா என்ன தொழில் செய்தார் எவ்வளவு வருமானம் வரும்? வேறே சொத்து பத்து உண்டா? என்பன போலப் பல கேள்விகள். தூண்டித் துருவுகிற கேள்விகள்.

ஆனால் இதற்கெல்லாம் புதில் மாதுரிக்குத் தெரியாத போது நாத்தனாருக்கு எதை விளக்க முடியும்?

"எனக்குச் சரியாகத் தெரியாது" என்ற மாதிரி பதில் சொல்லவும் தனலட்சுமியின் பார்வை ஒருவிதமாய் அவள் மேல் படிந்து மீளும்.

"ஆளாலும் ஒரு வைரத்தோடு கூட இல்லாமல் இப்படி மூணுபவுன் தாத்தா உன்னை நிறுத்தி வைத்து இருக்கிறாரே மருதாயி" என்று தன் வைர வளையலைச் சேலைத் தலைப்பில்

துடைத்து மெருகேற்றியபடி கீழ்க்கண் பார்வையோடு அங்கலாய்ப்பாள் பெரியவள்.

தாத்தாவைப் பற்றிய குற்றச்சாட்டும், மூளி என்ற சொல்லும் மாதுரிக்கு மனதினுள் வலிக்கும்.

ஆனால் வருத்தப்படுகிற மாதிரிப் பேசுகிறவளிடம் அதிலும் கிட்டத்தட்ட இருபது மடங்கு வயதில் பெரியவளிடம் வாயை மூடு என்று எப்படிச் சொல்வது?

இந்த யோசனையில் அவள் பெயர் மாற்றி அழைத்த விதத்தைக் கவனியாது, "அப்படி இல்லை... அ... அண்ணி! நங்கத்தில் நிறைய... நாலு ஜோடி வளையல், மாங்காய் மாலை தோடு ஜிமிக்கி எல்லாம் இருக்கிறது?" என்றாள் அவள் பதிலாக.

"வெறும் தங்கம்தானா? ஒரு ரூபாய்கூடக் கிடையாதா மருதாயி?" என்று தெளிவாகக் கூறினாள் தனலட்சுமி.

அப்போதுதான் அந்த மருதாயி உறைக்க "எ... என் பெயர் மாதுரி" என்றாள் சிறிது தெளிந்து.

"ஓகோ, மருதாயி என்று விட்டேனா?" என்றாள், பெரியவள் அலட்சியமாக, "அது பார் மாதுரி, அங்கே மதராசில் மருதாயி என்ற ஒரு வேலைக்காரப் பெண் இருக்கிறாள் உன்னைப் பார்த்ததும் அவள் ஞாபகம் வருகிறதா? அப்படியே 'மருதாயி' என்று கூப்பிட்டு விடுகிறேன்" என்று தெளிவாக விளக்கினாள்.

மாதுரி அயர்ந்து போனாள்.

நீ எங்கள் வேலைக்காரிக்குச் சமம் என்று சொல்லாமல் சொல்கிறாளே!

ஒரு காலத்தில், "என்னைப் பார்த்தால் வேலைக்காரி மாதிரியா தெரிகிறது? ஜாக்கிரதையோடு பேசுங்கள்" என்று கூடச் சொல்லியிருக்கக் கூடியவள் தான்.

ஆனால் அப்போது அவளைக் கண்ணின் கருமணியாக வைத்து தாத்தா இருந்தார். எந்த நிலையிலும் அவர் அவளுக்குத் துணையாக நிற்பார் என்ற திடம் இருந்தது.

இப்போது யார் அவளுக்கு என்ன மதிப்பு கொடுக்கக் கூடும் என்பது புரியாத நிச்சயமற்ற நிலை அவளது தைரியத்தை வெகுவாகக் குறைத்து விட்டிருந்ததால் இது போல் வலிகளைப் பேசாமல் பொறுத்துப் போனாள்.

தனலட்சுமி தன்னைப் பற்றியும் சொல்வதுண்டு.

எப்படி அவள் பிறந்து பத்து ஆண்டுகள் ஒரே குழந்தையாய்ச் செல்வமாக வளர்ந்தாள்; பிறகு தம்பி பிறந்த பிறகும் அவளுடைய பெற்றோர் இரு பிள்ளைகளுக்கும் ஓர் இம்மி அளவுகூடப் பாரபட்சம் இல்லாது எப்படி வளர்ந்தார்கள் என்பதை எல்லாம் விளக்குவாள்.

சொத்து பத்து வாங்கும்போது கூட எல்லாம் இரண்டு இரண்டாக சம மதிப்பு உள்ளதாகவே வாங்குவார்களாம்.

மகள் பத்மினிக்கு எட்டு வயதாகிறபோது யாரோ 'செய்வினை' வைத்து விட்டதால் பத்மினியுடைய தந்தை சாமியாராகித் தேசாந்திரம் போய் விட்டாராம். தேடி வந்தால் தற்கொலை செய்து கொள்வேன் என்று எழுதியிருந்ததால் வேறு வழியின்றிப் பேசாமல் இருந்து விட்டார்களாம்.

சாகிறபோது தகப்பனார், பத்மினியின் கையைப் பிடித்து சசிதரன் கையில் வைத்து உன் பொறுப்பு என்று கூறி உயிரை விட்டாராம்.

"ஊம்...நாங்கள் என்ன...னமோ நினைத்தோம்..." என்று பெருமூச்சு விட்டாள் தனலட்சுமி.

அவள் என்ன நினைத்திருந்தாள் என்பது தெளிவாகவே தெரிந்ததால் மாதுரி தரையை வெறித்தபடி பேசாமல் இருந்தாள்.

நினைத்தவர்கள் தாயும் மகளும் மட்டும்தானா? சசிதரனுமா? ஒட்டி உறவாடுவதைப் பார்த்தால் எல்லோருக்கும் ஒரு மனதுதான் என்று தெரிகிறது... பின்னே அவளை ஏன் மணந்தான்?

அதற்கும் தனலட்சுமி ஒரு விளக்கம் சொன்னாள்.

அவளுடைய தம்பிக்கு ஒரு மாதிரிப் பார்த்தால் மிகவும் இளகிய மனதாம். "அன்றைக்கு உன் தாத்தா முகம் சாம்பல் கலர் ஆகிவிட்டதாமே. உண்மையைச் சொல்லப்போய் ஓர் உயிர் போய்விடக் கூடாதே என்று தான் உனக்குத் தாலி கட்டினானாம்... உம் அதனாலே இப்போது எவ்வளவு சிக்கல்!"

'சிக்கல்' என்பது உண்மைதான்.

ஆனால் அவளுடைய தம்பிக்கு இளகிய மனம் என்பதை மாதுரியால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. இளகிய மனம் உள்ள ஒருவனால் ஒரு திருமணத்தை எப்படி நிறுத்த முடியும்; அதுவும் தாலி ஏறுகிற தருணத்தில்?

ஊகூம், சசிதரன் அவளை மணம் செய்து கொண்டதற்கு வேறு காரணம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தாள் மாதுரி.

அந்தக் காரணம் என்னவென்பதை அவள் விரைவிலேயே அறிந்து கொள்ள நேர்ந்தது.

ஆனால் அதற்கு முன்னால் இன்னொன்று நேர்ந்தது.

6

அன்று வெளியே சென்று மாலையில் திரும்பி வந்த சசிதரன் பங்களூரிலும் ஏதோ தொழில் வைத்து இருப்பான் போலும். தமக்கை வந்த பிறகு தினமும் காலையில் செல்பவன் மாலையில்தான் திரும்பி வந்து கொண்டிருந்தான். அன்று மாலை அப்படித் திரும்பி வந்தபோது- சில துணி பைகளும் உடன் வந்தன.

[illegible] பத்மினி அருகே வைத்துவிட்டு மற்றதோடு மாதுரி [illegible] முன் அவசரமாகப் பாக்கெட்டை கிழித்துப் [illegible] பத்மினி.

தன்னிடம் நீட்டப்பட்ட பாக்கெட்டைத் தயக்கத்துடன் வாங்கிக் கொண்டாள் மாதுரி, அதே தயக்கத்துடனேயே பிரித்துப் பார்த்தவளின் விழிகள் வியப்பால் விரிந்தன.

அட்டைப் பெட்டிக்குள் ஓர் அழகான சேலையிருந்தது.

இலைப் பச்சை உடலும் பார்டரில் சிவப்பும் மெல்லிய சரிகை கட்டங்களுமாகச் சேலை வெகு அழகாக இருந்தது. வழுவழுவென்று மைசூர் கிரேப்.

இவ்வளவு அழகான சேலையைத் தனக்கென்று கணவன், அவனை இன்னமும் சொந்தமென அவள் உணராத போதும்கூட, அவன் வாங்கி வந்திருப்பது அவளுக்கு உள்ளூற மகிழ்ச்சியளித்தது.

கூடவே நன்றாகப் பேசிப் பழகாத கூச்சத்தினால் முகம் சிவக்க அவள் "வந்து...வந்து ரொம்ப தேங்க்ஸ்" திணறவும் சிறு முறுவலுடன் "எனக்கு நீ நன்றி கூற வேண்டுமா?" என்று சசிதரன் அவள் புறமாக ஓர் எட்டு எடுத்து வைத்தபோது பீங்கான் நொறுங்கும் சத்தம் கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினர்.

வெகு கோபத்துடன் வீசி எறியப்பட்டதால் உடைந்த காபி கப்பின் தூள்கள் நாலா புறமும் சிதறி இருந்தன.

"காபியா இது? இவள் வீட்டில் கைகழுவும் தண்ணீரைக் கொதிக்க வைத்துக் காபியாக்கி விடுவார்களா?" என்று கூச்சலிட்டாள் பத்மினி.

சற்று மிரண்ட பார்வையுடன், மகளின் கையைப் பற்றி அழுத்தி, "சும்மா கோபப்படாதே கண்ணு உனக்கு வேறு நல்ல காப்பி கொண்டு வரச் சொல்கிறேன்" என்று பத்மினியைச் சமாதானம் செய்ய முயன்றாள் தனலட்சுமி,

"வேறு காபியும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம்" என்று கையையே தூக்கிவிட்டு, "இதையும் உங்கள் பெண்டாட்டிக்கே கொடுங்கள்" என்று தனக்கு வாங்கி வரப்பட்டிருந்த ஜீன்ஸைத்

தூக்கி மாமன் பக்கம் எறிந்து விட்டு உள்ளே ஓடிப் போனாள் பத்மினி.

"சின்னப் பெண், அவளுக்கும் ஒரு சேலை வாங்கி வராமல் இருந்து விட்டாயே, சசி" என்று குறை கூறும் பாவனையில் பேசினாள் தனலட்சுமி.

"சேலையா? பத்மினிக்கா? அவள் சேலை கட்டுவதே இல்லையே என்றுதான் அவளுக்கு ஜீன்ஸ் வாங்கினேன் ஆனால்..."

"நீ வித்தியாசம் பார்க்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும் தம்பி. ஆனால் சின்னப்பிள்ளை பார். உனக்குத் தெரியாதா?"

"எனக்குப் புரியும் அக்கா. ஆனால் மற்றவர்களுக்கு எப்படிப்படும் என்று பார்க்க வேண்டும் இல்லையா? நீங்கள் தானே சொல்ல வேண்டும்" என்றான் சசிதரன்.

தனலட்சுமியின் முகம் சுருங்கிப் போயிற்று. ஆனாலும் சமாளித்து "அவ தகப்பன் இல்லாத பெண் தம்பி. அவளது நல்லது கெட்டதற்கு பொறுப்பேற்றுக் கொண்டு இருக்கும் உன் கடமைதான் அதுவும், கண்டிப்பு காட்டித் திருத்துவாயோ அல்லது கொஞ்சிக் குழைந்து வழிப்படுத்துவாயோ- ஆனால் நீ எங்கே அவளிடம் கண்டிப்புக் காட்டப் போகிறாய்?" என்று லேசாகச் சிரித்தவள், மாதுரியிடம் திரும்பி, "எங்கே கண்ணு, உன் சேலையைப் பார்ப்போம்?" என்று தம்பி மனைவியுடன் அளவளாவத் தொடங்கினாள்.

ஆனால் மாதுரியால் அதில் முழுமனத்தோடு ஈடுபட முடியவில்லை. இந்த அக்கா தம்பி பேச்சு வார்த்தையில் சில வார்த்தைகள் அவளை நெருஞ்சி முள்ளாய் உறுத்தத் தொடங்கின.

தகப்பன் இல்லாத, பொறுப்பேற்றவன், கொஞ்சிக் குழைந்து என்ற வார்த்தைகளின் அர்த்தம் என்ன?

காலை என்றால் ஒன்றும் தோன்றியிராதோ, என்னவோ, மாலை வேளை தனலட்சுமி கோடிகாட்டிப் பேசிய பேச்சின் பின் இந்த

வார்த்தைகளைச் சாதாரணமாகத் தள்ளிவிட அவளால் முடிய வில்லை.

அதே சமயம் யாரிடமும் உரிமையோடு விசாரிக்கவும் துணிச்சல் இல்லை.

கேட்டாலும் என்னவென்று கேட்பது? கேட்பதிலும் என்ன பிரயோஜனம்?

குற்ற மனதினர் என்றால் அதை ஒத்துக் கொள்ளப் போவது இல்லை. மற்றவிதம் என்றால், கேட்கிற அவள் மகா அசிங்கமான அற்ப புத்திக்காரி என்று ஆகும்.

இந்தச் சஞ்சலம் அவளைப் பெற்றோரின் அறைக்கு விரட்டியது. அங்கே தாத்தாவும் படமாக நின்றார்.

அதுவும் அவன் வேலைதான்.

திருமணப் படங்களில் இருந்து தாத்தாவின் ஒரு படத்தைப் பெரிதுபடுத்தி ஃபிரேம் போட்டு அந்த அறையில் வைக்கச் செய்திருந்தான்.

பார்த்தால் அழுகை வருகிறது என்று இரண்டு நாள் அந்த அறைப் பக்கமே போகவில்லை மாதுரி.

இப்போதும் படத்தைப் பார்த்ததும் அவளுக்கு உதடு நடுங்கியது. "என்ன தாத்தா, நான் என்ன செய்யட்டும்? எப்போதும் மனதுக்கு நன்றாகவே இல்லையே" என்று முறையிட்டாள்.

படத்தின் மீதே சாய்ந்து அமர்ந்திருந்தவளுக்கு ஏதோ சிவநேசரே வந்து தலையை வருடிக் கொடுப்பதுபோல் ஒரு பிரமை உண்டாக ஒருவாறு மனம் அமைதியுற்றாள்.

சசிதரனின் அழுத்தமான குரலில் ஏதோ கூறியது, தொடர்ந்து. "மாதுரி, எங்கேம்மா இருக்கிறாய்" என்று தனலட்சுமியின் குரல் அழைப்பதும் கேட்கவே எழுந்து சென்றாள் அவள்.

மாதுரியைக் கண்டதும், "புதுச் சேலையைக் கட்டிக் கொண்டு வா, ஏதாவது கோயிலுக்குப் போய் வரலாம்" என்றான் சசிதரன்.

பேசாமல் சேலைப் பெட்டியை எடுத்துக் கொண்டு அகலும்போது, "நானும் கூட வரட்டுமா தம்பி? தனியாக வர அவளுக்கு எப்படி இருக்குமோ?" என்று தனலட்சுமி கேட்பதும், "தனி என்ன? நான்தானே அழைத்துப் போகிறேன்? நீங்கள் பத்மினிக்குத் துணையாக இருங்கள்" என்று சசிதரன் பதில் உரைப்பதும் மாதுரியின் காதில் விழுந்தது.

சசிதரனோடு தனியே செல்வது-அதே கோவிலுக்கு என்றாலும்கூட மாதுரிக்கும் ஒரு மாதிரிதான் இருந்தது. ஆனால் அதை மறுத்துப் பேசும் திடம் இல்லாததால் பேசாமல் உடன் சென்றாள்.

இரண்டு தெரு தள்ளி இருந்த பிள்ளையார் கோயில் தான். நடந்தே சென்றார்கள்.

செல்லும் வழியில், "இந்தச் சேலை உனக்கு நன்றாக இருக்கிறது" அவன் இயல்பாகப் பாராட்டவும், சற்றுத் திகைத்துவிட்டு, "ந...நன்றி," என்று தரையைப் பார்த்து முணு முணுத்தாள் மாதுரி.

அவனின் பார்வை தன்மீது படிந்து மீள்வதை உணர்ந்ததும் கூசை நிமிரவில்லை.

கோவிலுக்கு மாதுரி அறிமுகம் ஆனவள்.

எனவே, "வாம்மா குழந்தை" என்று பிரியமாய் வரவேற்று, கற்பூரம் காட்டிப் பிரசாதம் கொடுத்தார்கள்.

கோவிலில் ஒரு குழந்தை; சுமார் இரண்டு வயசு இருக்கக் கூடும். அங்குமிங்கும் ஓடியாடி எல்லோர் கவனத்தையும் கவர்ந்து, தரையில் விழுந்து சாஷ்டாங்கமாய் வணங்கு வதைப் பார்த்தால் அதற்கு ஒரே ஆச்சரியம். கோவிலில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை

அறிய விரும்பினாற்போல் யார் விழுந்து சேவித்தாலும் ஓடி ஓடிச் சென்று உற்றுப் பார்த்தது.

அதில் ஒருவர் விழுந்து வணங்கியபோது நேர் எதிரே சென்று நின்று, முழங்காலில் கை வைத்து நன்றாகக் குனிந்து உற்றுப் பார்த்தது.

கடவுளை நினைத்து வணங்கி எழுந்தவர் எதிரே குழந்தை தரிசனம் தரவும் முதலில் திகைத்துப் போனார். ஆனால் அவருக்கு உடனே சிரிப்பும் வந்துவிட்டது.

பார்த்துக் கொண்டிருந்த மாதுரியும் கலீர் என்று சிரித்து விட்டாள்.

தன் சின்னச் சின்ன சந்தோஷங்களைக் கூடத் தனியே பூட்டி வைத்துக் கொள்ளாமல் தோழிகள், தாத்தா என்று யாரிடமாவது பகிர்ந்தே பழக்கப்பட்டிருந்த பெண், இந்தச் சிரிப்பையும் பகிர்ந்து கொள்ளும் முகமாக அருகில் நின்றிருந்தவனை நோக்கினாள்.

அவனும் லேசாகச் சிரித்தவாறே அவளை நோக்கவும் விசித்திரமான ஒருவிதமாக அவள் மனம் இலகுவாயிற்று.

எனவே வீடு திரும்பும்போது, "உன் சிரிப்பு அழகாக இருக்கிறது" என்று அவன் பாராட்டியபோது அதை இயல்பாக ஏற்று, நன்றி கூறி முறுவலிக்க அவளால் முடிந்தது.

கூடவே சசிதரனின் இளநகையை மனதில் கொணர்ந்து அவன் சிரிப்பும் நன்றாய்த்தான் இருப்பதாக மெச்சிக் கொள்ளவும் முடிந்தது. மனதுக்குள் தான்.

ஆனால் வீட்டை அடைந்ததும் இந்த மனநிலை மாறிப் போயிற்று.

வீடியோ ஓடும் சத்தமோ, பத்மினியின் கூச்சலோ கேளாததோடு அவளும் கண்ணில் படவில்லை.

அன்று வரை பிரியம் காட்டி அதுவும் சசிதரன் முன்னிலையில் அம்மா அரிசி என்று கொஞ்சிப் பழகி வந்த

தனலட்சுமி, மாதுரி சேலை மாற்றுவதற்குச் சென்றபோது அவள் பின்னாலேயே தொடர்ந்தாள்.

"என்னதான் கோயில் கீயில் என்று போனாலும் தான் என்ன? தின்னுகிற வேளை கவனித்துத் திரும்புவது இல்லையா? பப்பி பசியோடேயே தூங்கப் போய் விட்டாள்." என்றாள் தன் எரிச்சல் மறையாமல்.

சட்டெனக் கைக் கடிகாரத்தில் பாய்ந்த மாதுரியின் பார்வை இன்னமும் இரவு உணவருந்தும் வேளை ஆகவில்லை என்பதைக் கண்டு திகைத்து,

இவள் ஏன் இப்படி அனாவசியமாக கடுமை காட்ட வேண்டும்? மகள் பட்டினியாகப் படுத்துவிட்ட ஆத்திரமோ?

"பத்மினி சாப்பிட்டிருக்கலாம்" என்றாள் மாதுரி சாதாரணமாகவே.

"நன்றாய்ச் சொன்னாயே" என்று முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டாள் அரியவள். "தம்பி ஊரில் இருக்கிற நாளில் அவனை விட்டுவிட்டு ஒரு பிடி வாயில் போட மாட்டாளே? ம்... பெண்ணாய்ப் பிறந்து விட்டு வேற எப்படி இருக்க முடியும். என்னமோ..." என்று முனகியபடியே திரும்பிச் சென்றாள்.

மாதுரி மீண்டும் திகைத்து நின்றாள்.

மறுபடியும் மறைபொருளாய் ஒரு சேதி-அவள் மட்டும் அறிய வேண்டுமான ஒரு சேதி. அறிந்தே ஆக வேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட சேதி.

மாதுரிக்குச் சற்றுமுன் இருந்த இதம் மறைந்து போயிற்று.

தன் கழுத்தில் தாலி கட்டிய சசிதரனின் வாழ்வில் மாதுரிக்கு என்ன முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும் இடம் என்ன? வெறும் சுமையா? அலட்சியமான இடைஞ்சலா ?

தனிமையோடு மகிழ்ச்சியாய் கழித்த அந்த நாட்களை எண்ணிப் பெருமூச்சு விட்டபடி, அவள் மனம் அலைப்புறத் தொடங்கியது.

உணவு என்கிற பெயரில் லேசாகக் கொறித்துவிட்டு எழுந்தவள் மற்றவர் கவனத்தில் படாமல் ஒதுங்கி பக்கக் கதவின் வழியே தோட்டத்திற்குச் சென்று விட்டாள்.

நன்கு பராமரிக்கப்பட்ட தோட்டம் அல்ல அது. அதற்குத் தேவைப்பட்ட பணமும் சிவநேசரிடம் இல்லை. பேத்தி தானாக மண்வெட்டி கடப்பாறை என்று தூக்கினாலும் வருத்தப்படுவார். கை முரடாகிவிடுமாம். எனவே கண்டபடி வளர்ந்த செடி கொடிகளை ஓரளவு பிடுங்கியும், ஒதுக்கியும் நடப்பதற்காகச் சில பாதைகளை மட்டும் ஏற்படுத்தியிருந்தாள் மாதுரி. காலை மாலை வேளைகளில் முழுநிலா இரவுகளில் இந்தப் பாதைகளில் உலாவும் போது ஒரு ராணி போல அவள் உணருவதுண்டு.

அன்றும் பவுர்ணமிதான்.

ஒருவேளை பழைய இதம் கிட்டுமோ என்று எண்ணி தோட்டத்தில் உலாவத் தொடங்கினாள். ஆனால் சற்று நேரத்திலேயே இது கடப்பாறையை விழுங்கி அது ஜீரணிக்க சுக்கு கஷாயம் சாப்பிடுகிற கதை என்று புரிந்துவிட அங்கிருந்த நீரற்ற செய் குளத்தின் சுற்றுச் சுவர்மேல் சும்மா உட்கார்ந்து விட்டாள்.

உட்கார்ந்தபடி யோசனையில் ஆழ்ந்தவளுக்கு மற்றதை எல்லாம் முந்திக்கொண்டு, கோயிலில் கண்ட சசிதரனின் சிரிப்பு நினைவுக்கு வந்தது.

அடர்ந்த கருநிற மீசையின் அடியில் வரிசைப் பற்கள் பளீரிட அலட்டித்தனம் இல்லாமல் லேசாகச் சிரித்தானே? இந்த மாதிரி சிரிப்பவன் கெட்டவனாக இருக்க முடியுமா?

அந்தச் சிரிப்பு முகம் தவிர, முதலிலிருந்து உள்ளூர வெறுப்பை, ஆத்திரத்தைத் தூண்டிய அவனது தோற்றங்களை மனதில் உருவகப்படுத்திப் பார்க்க முயன்றாள். ஆனால் அந்தச் சிரிப்பு தவிர மற்ற எதுவும் நினைவு வர மறுத்து அவளைத் திகைக்க வைத்தது.

ஏன் என்று யோசிக்கையில் சட்டெனத் தூக்கிவாரிப் போட்டது.

உடல் சிலிர்த்து நிமிர்ந்தவளுக்கு, பங்களூரின் சில்லிப் போடு இன்னும் ஏதோ ஒன்று உரைத்தது.

சற்று மருண்டு சுற்று முற்றும் பார்த்தாள்.

அந்தத் தெருவில் தெருக் காவல் கெட்டி என்பதால் திருட்டு பயம் கிடையாது. ஆனால், 'ராத்திரி நேரம் தோட்டத்தில் சுற்றாதே கண்ணா, ஏதாவது பூச்சி பொட்டு...' என்று சிவநேசர் எச்சரிப்பதுண்டு.

அப்படி ஏதாவது... என்று தோன்றவும் உடனே எழுந்து வீட்டுக்குள் கிளம்பிவிட்டாள் மாதுரி

உடல் கழுவிப் படுத்த பிறகும் சரியாகத் தூக்கம் வர மறுத்தது.

வழக்கமான இடப்புறத்தை மாற்றி மறுபுறம் சரிந்து படுத்துப் பார்க்கலாம் என்று புரண்டவளுக்குத் திடுமென இதயம் நெஞ்சுக்குள் வந்து தடதடத்தது.

வராண்டா விளக்கின் ஒளியில் கதவைத் திறந்து கொண்டு, அவளையே பார்த்தபடி அசையாமல் நின்று கொண்டிருந்த சசிதரனின் வரி வடிவம் துல்லியமாகத் தெரிந்தது.

அவள் தன்னைக் கண்டுவிட்டாள் என்பதை உணர்ந்ததும், உள்ளே வந்து கதவைச் சாத்தினான் அவன்.

அவள் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கட்டிலை நெருங்கி வந்து, "சற்று நகர்" என்று கூறிக் கட்டிலில் அமர்ந்து, அவளை நோக்கிக் குனிந்தான்.



அதன் பிறகு பலமுறை மாதுரி அன்றைய நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்திருக்கிறாள்; எண்ணி எண்ணி பரிதவித் திருக்கிறாள்.

அப்போதும் சரி, வெகு நாட்களுக்குப் பிறகு மீண்டும் தவிர்க்க முடியாமல் நினைவு வரும், இன்றும் சரி சசிதரனின் நடவடிக்கைகளை அவளால் ஒத்துக்கொள்ள முடியவில்லை தான்.

ஏதோ, தாலிகட்டும் சமயத்தில் மணமகன் மாறும்படி ஆயிற்று சரி அது விதி. ஒருவன் மனைவியை இன்னொருவன் கட்ட முடியுமா என்பது போல் ஆயிற்று என்று ஒத்துக் கொள்ளலாம்.

ஆனால் அதன் பிறகு சசிதரன் என்ன செய்திருக்க வேண்டும்.

அவளது மனக் கலக்கம் தீர்ந்து, திடம் பெற்று, அவளது உள்ளம் அவனை நோக்கி படரும் வரை பொறுத்திருக்க வேண்டாமா இதற்கு மேல் மாதுரிக்கு அவளுடைய தாத்தா இறந்த தவிப்பு வேறு.

சூடிக்காற்று இலவம் பஞ்சாய் அவள் நிலைகுலைந்து அலைபாய்ந்து கொண்டிருந்த போது மைசூர் சில்க் சேலையை நீ [illegible] உடனே நெருங்கி விடுவதா?

[illegible] மனிதன்?

[illegible] சசிதரனிடம் மனிதத் தன்மை இல்லை என்பது [illegible] அவளை பிரமாத்திலும் கீழ் என்பதையும் அவள் [illegible]

ஆனால் அன்றும் இது ஒன்றும் தோன்றவில்லை.

முதலில் இருந்த திகைப்பும், கலக்கமும், அவனை மீறும் துணிவு இல்லாததால் வந்த தயக்கமும் மெல்ல மறைந்து போயின.

அவனை ஒண்டியபடியே உறங்கிப் போனாள். காலையில் எழுந்தபோது அவன் அருகில் இல்லாதது ஒரு மாதிரி இருந்த போதும் அதில் ஒரு நிம்மதியும் உண்டாயிற்று.

ஏனெனில் அவன் முகத்தைப் பார்த்துப் பேச அவளுக்குக் கொஞ்சம் கூச்சமாக இருந்தது. ஆனால் அதே சமயம் உள்ளூர ஒரு உறுதியையும் உணர்ந்தாள்.

தனக்கு என்று ஒன்றுமே இல்லை என்கிற நிலையற்ற தன்மை மறந்து, அவளுக்கும் ஏதோ இருப்பது போல ஒரு இடம் பெற்றாள்.

காலைக் கடன்களை முடித்து, தோட்டத்தில் கொஞ்சம் சுற்றி மெல்ல அவள் உள்ளே சென்றபோது சசிதரன் வெளியே கிளம்பி விட்டிருந்தான்.

தொலில் கத்திக்கொண்டிருந்த வீடியோ சத்தத்தையும் மீறி, அவன் தன் தமக்கையிடம் உரக்க ஏதோ சொல்ல முயன்று கொண்டிருப்பதைக் கண்ட மாதுரி, டி.வி. அருகில் சென்று சத்தத்தைக் குறைத்தாள்.

ஆச்சரியத்துடன் நிமிர்ந்த பத்தினியின் 'ஏய்...' ஐக் கவனிக்காதவள் போல், "இந்தச் சத்தத்தில் மாமா பேசுவது [illegible] காதில் விழவில்லை பார்" என்று இயல்பாகக் கூறிவிட்டு [illegible] பும் நோக்கிச் செல்லலானாள்.

பொதுவாக வாயே திறக்காத பெண் பேசியது [illegible] ருக்குமே வியப்பாய் இருந்தது போலும், சில வினாடிகள் [illegible] சமேயே இல்லை.

[illegible], "நான் வெளியே போகிறேன், உனக்கு ஏதாவது [illegible] வேண்டுமா மாதுரி?" என்று சசிதரன் வினவினான்.

அன்றுவரை இல்லாத விதமாக, கணவன் தன்னிடம் நேரில் கேட்கவும் மாதுரி சற்று தடுமாறினாள்.

கன்னங்கள் சூடாகிச் சிவப்பதை உணர்ந்தபடி "ஊகூம் ஒ...ஒன்றும் வேண்டாம்" என்று திணறினாள்.

தனலட்சுமியின் பார்வை சற்றுக் கூர்மையுற்றுத் தன் முகத்தின் மீது படிவதை உணரவும், "நான் இன்னும் டிபன் சாப்பிடவில்லை" என்று அங்கிருந்து நகர்ந்தாள்.

"சரி நான் கிளம்புகிறேன்" என்று பொதுப்படையாகக் கூறி சசிதரன் கிளம்பியதும் தனலட்சுமி தம்பி மனைவியை நாடிச் சென்றாள்.

நேரடியாக அவள் எதையும் கேட்கவில்லை. ஆனால் தனலட்சுமியின் கேள்விகள் தூண்டித் துருவுவதை மாதுரி உணர்ந்தாள்.

"இரவு நன்றாக உறங்கினாயோ?"

"நான் அடித்து போட்டது போல தூங்கி விட்டேன்."

"தம்பி எதற்காகவும் என்னைத் தேடினானோ? யாரோ நடக்கிற சத்தம் கேட்டதே."

"பப்பிகூட என்னமோ மாதிரி ஓசை கேட்டதாகச் சொன்னாள்..."

இரவு நடந்ததை நினைத்துப் பார்க்கவே கூச்சமாக இருக்கையில் இவளிடம் எப்படிப் பேசுவது?

உணவிலேயே கவனமாக இருப்பவள்போல, வெறும் 'ஊம்...', 'ஊகூம்' களோடு தன் பேச்சை நிறுத்திக் கொண்டாள் மாதுரி.

மேலே அதிகம் பேச இடம் கொடாமல், "கொஞ்சம் வேலை இருக்கிறது" என்று அங்கிருந்து ஓடியும் விட்டாள்.

ஆனால் வீட்டின் எல்லாவித வேலைகளுக்கும் சசிதரன் ஆட்களை நியமித்திருந்ததால் வேலை என்ற நாத்தனாரிடமிருந்து ஒதுங்கிக்கொள்ள ஒரு சாக்கு தான்.

அதைக் கண்டு கொண்டு, மீண்டும் தனலட்சுமி கேள்விக் கணைகளைத் தொடுக்கத் தொடங்கிவிடக் கூடாதே என்று அஞ்சியவளாய் தோட்டத்திற்குச் சென்றாள் மாதுரி.

காடு மாதிரி கிடந்த தோட்டத்தைக் கண்டாலே தனலட்சுமிக்குப் பிடிக்காது. எனவே மாதுரியைத் தேடிக் கொண்டு அவள் அங்கே வரப் போவதில்லை.

நாத்தனாரிடம் பேசப் பிடிக்காமல் ஓடுகிறேனே இது சரியாகுமா என்று எண்ணமிட்டபடி தோட்டத்திற்குச் சென்ற மாதுரி சற்றுத் திகைத்தாள்.

வீட்டின் முக்கிய எடுபிடி ரங்கண்ணாவின் மேற் பார்வையில் சிலர் அங்கிருந்த புல் பூண்டுகளைப் பிடுங்கி கொண்டு இருந்தார்கள்.

மாதுரியைக் கண்டதும் மரியாதை தெரிவித்து, "அய்யா தோட்டத்தைச் சுத்தம் பண்ணச் சொன்னாருங்க அம்மா" என்று பணிவாக உரைத்தான் ரங்கண்ணா.

பேசாமல் தலையசைத்துவிட்டு, வேலை தொடங்கி இருந்த இடத்திற்கு மறு கோடிக்குச் சென்று அங்கிருந்த மாமரத்தின் கீழ் அமர்ந்து கொண்டாள் மாதுரி.

தோட்டம் சீர் செய்யப்பட வேண்டிய ஒன்றுதான் ஆனால் அழகுபடுத்துவதாக அதன் இயற்கை அழகை ஒரேயடியாகக் கொன்றுவிடக் கூடாதே என்று இருந்தது அவளுக்கு. அவனிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்.

யாரோ மெதுவான குரலில் அழைப்பது கேட்டு நிமிர்ந்து பார்த்தாள் மாதுரி. உடனே அவள் முகம் கன்றிச் சிவந்தது.

கும்பவுண்டுச் சுவருக்கு மறுபுறமிருந்து அவளை அழைத்தவன் ரவீந்திரன்.

சட்டென எழுந்து, வீட்டின் புறமாக அவள் திரும்பவும் "மாதுரி! ப்ளீஸ். ஒரே ஒரு வார்த்தை கேட்டு விட்டுப் போ. ப்ளீஸ் மாதுரி" என்று கெஞ்சினான் அவன்.

"உங்களிடம் பேச எனக்கு ஒன்றும் இல்லை. அப்படியே ஏதுவும் பேசுவது என்றால் நேரே வாசல் வழியே வந்து பேசுங்கள்," நில்லாமல் நடந்தபடியே மாதுரி கூறினாள்.

"அதற்குத்தான் என்னை உள்ளேயே விடமாட்டேன் என்கிறானே, உன் கூர்க்கா," என்றான் ரவீந்திரன் அவசரமாக.

மாதுரி நிற்கவும், "நிஜம், மாதுரி உன்னிடம் பேச வேண்டும் என்று கேட்டால் உள்ளே வரக்கூடாது என்று உத்திரவு என்கிறான்" என்றான் தொடர்ந்து.

அவளது வீட்டில் அவளை ஒருவர் பார்ப்பதற்குத் தடையா? முகத்தில் சின்னச் சிவப்புடன், "வாசல் பக்கம் வாருங்கள்" என்று கூறி விடுவிடென்று கேட்டை நோக்கி விரைந்தாள்.

ஓடித்தான் சென்றானோ, மாதுரி கேட்டை அடையுமுன் ரவீந்திரன் அருகே நின்று கொண்டிருந்தான். அவனை உள்ளேவிட மறுத்து விரட்டிக் கொண்டிருந்தான் கூர்க்கா.

"அவரை உள்ளே விடு" என்று உத்தரவிட்டது தன் குரல்தானா என்று மாதுரிக்கே சந்தேகம் வந்தது. அவ்வளவு அதிகாரம் அந்தக் குரலில்.

திடுக்கிட்டுப் போய் "இவரை உள்ளேவிட வேணாமின்னு அய்யாதான்..." என்று விளக்கம் கூற முயன்ற கூர்க்காவை இடைவெட்டி "பரவாயில்லை உள்ளே விடு" என்று விரைப்பாக கூறிவிட்டு மேலே பேச இடம் கொடாமல், "உள்ளே வாருங்கள்" என்று ரவீந்திரனை அழைத்துக் கொண்டு திரும்பி நடந்தாள்.

வராந்தாவை ஒட்டினாற் போல அமைந்திருந்த பார்வையாளர் அறைக்கு ரவீந்திரனை அழைத்துச் சென்று அமரச் செய்தாள்.

விரைப்பு குறையாமலே, "உங்களை உள்ளே அழைத்து வந்தேன் என்பதால் பணத்தாசை பிடித்த உங்கள் குற்றத்தை மன்னித்து விட்டேன் என்றோ மறந்து விட்டேன் என்றோ அர்த்தம் இல்லை. நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லி விட்டு உடனே கிளம்பலாம்" என்றாள்.

"ஆனால் என்னைக் குற்றவாளி என்கிறாயே, நீ எப்படி?" என்று அவன் திரும்பவும் வியப்பும் கோபமுமாக, "என்ன உளறுகிறீர்கள்?" என்று சீறினாள்.

எவ்வளவு பெரிய பிழை செய்துவிட்டு பேச்சு வேறு என்றிருந்தது அவளுக்கு. அதிலும் அவளைக் குற்றம் சாட்ட என்ன தைரியம்?

ஆனால் அவன் வேறு சொன்னான். "என் பெற்றோர் பணத்துக்கு ஆசைப் பட்டிருக்கலாம். ஆனால் நான் அப்படி இல்லையே."

"நீங்களும்தான் உடனே எழுந்து ஓடினீர்களே" என்று குத்தலாக நினைவு மூட்டினாள் அவள்.

"பின்னே மணமேடையில் உட்கார்ந்து கொண்டு வைத்து வாக்குவாதம் செய்ய முடியுமா? அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, ஒத்துக் கொள்ள வைத்து அழைத்து வருமுன் அடுத்தவன் காலிக்குக் கழுத்தை நீட்டி விட்டாயே இது என்ன நியாயம்?" என்று ரவீந்திரன் கேட்கவும் மாதுரி ஒரேயடியாய் திணறிப் போனாள்.

மெய்தானே! அவள் செய்திருப்பதும் தப்புதானே!

ரவீந்திரன் எவ்வளவோ கஷ்டப்பட்டு தன் பணத்தாசை பிடித்த பெற்றோரைச் சமாதானப்படுத்தி, தன் விருப்பத்திற்கு அவர்களை இணங்க வைத்துத் திருப்பிக் கூட்டி வந்ததாக என்று வைத்துக் கொண்டால், அப்படித் திரும்பி வந்த வேளையில் அவளுக்கு வேறு ஒருவரோடு திருமணம் முடிந்து விட்டது என்பது எவ்வளவு பெரிய அவமானம்! பெற்ற தாய் ஆசைப்பனாரையே மீண்டும் பார்க்க முடியாதே! திருமண மண்டபத்தில் அவ்வளவு பேசியவர் மேலே என்னென்ன கூறி மகனை ஏசியிருப்பார்!

ஆனால்...

"ஆனால் நீங்கள் திரும்பி வந்ததாக யாரும் சொல்ல வில்லையே?" என்று கேட்டாள் அவள்.

"மறைத்திருப்பார்கள்" என்றான் ரவீந்திரன் இலகுவாக. 'இப்போது கூடப்பார். உங்களிடம் சொல்லி விடப் போகிறேனே என்றுதானே என் போட்டோவைக் கூர்க்காவிடம் கொடுத்து என்னை மட்டும் வீட்டுக்குள் விடக் கூடாது என்று தடுக்கச் சொல்லியிருக்கிறார் உன் கணவர்."

"போட்டோ... வா?"

"ஆமாம், பையில் இருந்து என் படத்தை எடுத்துப் பார்த்து விட்டுத்தான் உள்ளே விட மறுத்தான் கூர்க்கா."

"ஆமாம்... அப்படி... அப்படி எதற்காக...." என்று குழம்பினாள் மாதுரி, "அதுவும் திருமணம் முடிந்த பிறகு எ...எதற்காக...?"

அந்தத் திருமணம் ஏன் செய்தான் என்பதே ஒரு புரிபடாத குழப்பம், அதற்குமேல் இது வேற குழப்பமா?

ஆனால் எல்லாக் காரணமும் ரவீந்திரனுக்குத் தெரிந்திருந்தது. "மிஸ்டர் சசிதரனுடைய வண்டவாளத்தை நான் தண்டவாளம் ஏற்றி விடுவேனோ என்ற பயம்தான்" என்றான் தெளிவாக.

"என்ன...என்ன வண்டவா...ளம்?" என்று கலக்கத்துடன் விசாரித்தாள் மாதுரி.

"சொல்லத்தான் வந்திருக்கிறேன். சொல்லுகிறேன். கேள். நீ என்னை பணத்தாசை பிடித்தவன் என்றாயே. இப்போது உனக்குத் தாலி கட்டியவன் எப்படி என்று தெரியுமா? ஐந்து லட்சம் கடன் கொடுத்து விட்டு இருபது லட்சம் பெறுமான வீட்டை அப்படியே 'ஸ்வாஹா' பண்ணத்தானே உன்னை மணந்து கொண்டான்?"

மனம் குழம்பியது மாதுரிக்கு. ஆயினும் ஐந்து லட்சம் கடனுக்காக இருபது லட்சம் பெறுமான வீட்டை எழுதிக் கொடுக்கிற அளவு தாத்தா முட்டாள் அல்ல என்ற திடத்துடன், "நிறைய கடன் இருந்ததாகத் தாத்தா சொன்னார்" என்று மறுத்துப் பேசினாள்.

தாத்தாவின் கெட்டிக்காரத்தனத்தை நிரூபிப்பதை விட, தன் கணவன் மோசக்காரன் அல்ல என்பதை நிலைநிறுத்தும் ஆவலே அதிகம் இருப்பதை உணர்ந்து உள்ளூரத் திகைத்தாள் மாதுரி.

ஆனால் அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருக்க விடாமல் தன் கூற்றை அடித்துப் பேசினான். ரவீந்திரன். "ஐந்து லட்சமும் நிறைய ரூபாய்தான். மாதுரி மேலே ஏதோ கொஞ்சம் வாங்கியிருக்கலாம். அது ஒன்றும் அதிகம் இராது. நீயேன உன் தாத்தாவோ அதிகச் செலவாளி கிடையாதே. இப்போது திருமணத்திற்கு என்று கொஞ்சம் கேட்டிருப்பார். அதை வைத்துக் கொண்டு வீட்டை விழுங்க வந்தவன் திருமணத்தில் குழப்பத்தை உண்டாக்கி நிறுத்தி விட்டு, தொல்லை இல்லாத உரிமை என்று நல்லவன் போல அவசரமாகத் தாலியைக் கட்டி விட்டான்."

அருகில் இருந்து பார்த்தவன் போல அத்தனையையும் தெளிவாகச் சொன்னான் ரவீந்திரன்.

உண்மையாக இருக்குமா? என்று தோன்றியது மாதுரிக்கு.

செய்த தொழிலில் அப்பா, அப்பா மறைவின்போது நட்டப்பட்டதாக சிவநேசர் ஒரு தரம் கூறியிருக்கிறார். எனவே இந்த ஐந்து லட்சம் அதில் வந்த கடனாக இருக்கலாம்.

மற்றபடி வேறு என்ன பெரிய செலவு?

சிவநேசரின் வருமானம் என்று ஒன்றுமே இல்லை என்று வைத்துக் கொண்டாலும்கூட மாதாந்திரச் செலவு என்று... ஓர் ஆயிரத்து... ஐநூறு தொடர்ந்து வாங்கியிருந்தாலும்கூட, இந்தப் பதினைந்து ஆண்டுகளில் மிஞ்சி மிஞ்சி மூன்று லட்சம் தான் ஆகும்.

ஆக எட்டு லட்சம் கடனுக்கு இருபது லட்சம் வீடா!

இந்த அதிரடித் திருமணத்தின் காரணம் இதுதானா?

இவனுடைய பணத்தாசைக்குத் தாத்தாவின் உயிரே பலியாகிவிட்டதே.

கட்டுமீறிப் பொங்கித் துடித்த கண்ணீரைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு பேசாமல் நின்றாள் மாதுரி.

அவள் முகத்தைப் பார்த்து இரங்கியவன்போல, "இதைச் சொல்லாமல் விட்டிருப்பேன், மாதுரி. ஆனால் மேலும் ஏமாந்து உன்... உன் நகைகள், மற்ற மதிப்புள்ள எதையும் இவனிடம் நீ விட்டுவிடக் கூடாதே என்றுதான் எச்சரிக்க வந்தேன். மற்றபடி சொல்லாமலே ஊரை விட்டுப் போயிருப்பேன்" என்று தன் வைக்கோல் போர் நாய் வேலையை மறைத்து சோகம் காட்டிப் பேசினான் ரவீந்திரன்.

ஏற்கனவே தன் வேதனையை மறைக்க முயன்று கொண்டு இருந்தவளுக்கு ஒரு வழி கிடைத்தது. தன் பிரச்சினையை ஒதுக்கி, "ஊரை விட்டா? வெளியூர் ஏதும் டூர் போகிறீர்களா?" என்று அவனைப் பற்றி விசாரித்தாள்.

"டூரா?" என்று பெருமூச்சு விட்டான் ரவீந்திரன் "என் வாழ்க்கையே நாசமாகிவிட்டது." என்று வருத்தத்துடன் தொடங்கி விவரம் சொன்னான்.

"அன்றைக்கு கல்யாணத்துக்கு எங்க முதலாளியையும் கூப்பிட்டிருந்தேன், மாதுரி. அவர் உன் தாத்தாவின் பழைய நண்பராம் அந்த வக்கீலுக்கு பழக்கமாம். அன்று திருமணக் குழப்பத்திற்கு உன்னைப் போலவே அவரும் என்னைக் குற்றவாளியாக்கிவிட்டார். என் வேலையும் 'டெம்பரவரி' தானே. விரட்டிவிட்டார்கள். வீட்டிலானால் தங்கைகள் குதறுகிறார்கள். அவர்களுடைய சினேகிதிகள் மட்டமாகப் பேசுகிறார்களாம் அப்பாவோ எப்போதும் தாண்டவம்தான். பேசாமல் கொஞ்சநாள், கண் காணாமல் வடக்கே போய்விடப் போகிறேன். உன்னிடம் சொல்லாமல் போக மனம் வரவில்லை.... வரட்டுமா...?"

ரவீந்திரன் விடைபெற்றுச் சென்று கொண்டு இருக்கையிலேயே அங்கே தனலட்சுமி வந்து சேர்ந்தாள்.

வருது சொல்லுகிறவன் யார் என்று அறிந்து கொண்டவள் ஒரு விநாடிதான் பார்வைக்கு மேல் அவனிடம் அக்கறை காட்ட விரும்பாமல் மாதுரியை இரவு பற்றியே பேசினாள்.

மாதுரி இருந்த மனநிலையில் அவளுக்கு யாருடனும் பேசவே மனம் இல்லை. விண்ணென்று தெறித்த நெற்றிப் பொட்டை அழுத்தியபடி, "ஒரே தலைவலி, அண்ணி நான் சற்று படுத்திருக்கட்டுமா?" என்றாள். தனியே விட்டுப் போக மாட்டாளா என்றிருந்தது அவளுக்கு.

"தலைவலியா? ஏன் வந்தது? அடிக்கடி வருமா?... அல்லது நேற்று இரவு தூக்கம் சரியில்லாமல்... தூங்காமல்... தூங்கா...ததால் வந்ததா?" என்று அக்கறையோடு விசாரித்தாள் தனலட்சுமி.

"இ... இருக்கலாம்..." என்றாள் மாதுரி அசுவாரசியமாய்.

"ம்... மாதுரி தம்பி, நம்ம பப்பி பற்றி உன்னிடம் ஏதேனும் சொன்னானா... நேத்து ராத்திரி சொன்னானா என்று கேட்கிறேன்."

"நேற்று இரவு... ஊகூம். டம்மினி பற்றிப் பேசவில்லை..." சற்று யோசித்து, லேசாக முகம் சிவந்து, மறுத்துச் சொல்லும்போது தனலட்சுமியின் மறைமுக விசாரணைக்குப் பதில் தந்து விட்டதை மாதுரி அறியவில்லை.

ஒருகணம் யோசித்த தனலட்சுமி. "இங்கே கிளிசரின் எங்கே கிடைக்கும்? இந்தக் குளிரில் உதட்டில் வெடிப்பு வரும் போல இருக்கிறது. தடவவேண்டும்" என்றாள்.

ஒரு மருந்துக் கடையின் பெயரைச் சொல்லிவிட்டு, விட்டால் போதும் என்று தன் அறைக்கு விரைந்தாள் மாதுரி.

தனியே கிடந்து எவ்வளவோ சிந்தித்தும் தன் எதிர் காலத்தை என்ன செய்வது என்று மாதுரிக்கு முடிவு செய்ய முடியவில்லை.

ரவீந்திரன் சொன்னது உண்மையென்று வைத்துப் பார்த்தால் பப்பி சொல்லுவதால் அவனுக்கு ஒரு லாபமும் இல்லையே, அதனால் அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும் – அதனால் தான் சசிதரனும் இந்த வீட்டுக்காகத்தான் அவளை மணந்திருக்கிறான் என்பது நிச்சயம்.

ஏற்கனவே வீட்டை 'ஸ்வாஹா' பண்ண வந்தவன் தானே. ஆனால் அதில் ஒரு சிக்கல். வீட்டைத் தரமுடியாது என்று மாதுரி கோர்ட்டுக்குப் போய் விட்டால் அப்புறம் ஜயித்தால்கூட வருஷக் கணக்காகிவிடும் இது சுலப வழியாகக் கிட்டிவிட்டது...

முந்தைய இரவை நினைக்கையில் சசிதரன் தன்னை அவமானப்படுத்தி விட்டாற்போல் உணர்ந்தாள் மாதுரி.

ஏதோ இந்த வீடு கிடைப்பதற்காக அவளையும் மணக்கும் படி ஆகிவிட்டது.

கணவன் மனைவி என்று ஆனபின் அந்த உரிமையை மட்டும் வைப்பானேன் என்று தானே அவளை நெருங்கியிருக் கிறான்.

ஒத்திட்டுப் பார்ப்பதற்கு என்று அவளுக்கு முன்பின் அனுபவம் இல்லைதான்.

ஆனால் கதைகளில் வருகிற மாதிரி அவனிடம் காதல் கனிவும் இல்லை. ஆசை வெறியும் இருக்கவில்லை. ஏதோ தாலி கட்டியிருக்கிறேன். இது என் உரிமை என்பதுபோல அல்லவா நடந்து கொண்டான்.

ஆக, ஓர் அன்போ, பரிவோ இல்லாமல் அவன் நெருங்குவதும், விதி என்று இவள் பணிவதும் என்றால் இது என்ன வாழ்க்கை.

ஊகூம். இது அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்லி மறுக்கிற அளவு உறுதியும் வரவில்லை.

பின்னே?

மனம் குழம்பியபடி தனியே கிடந்தவளை தனலட்சுமி அழைத்தாள். "ராத்திரி சாப்பாட்டுக்கு நண்டு ஒரு புதுப் பக்குவம் செய்யச் சொல்லியிருக்கிறேன். சமையல் அறையில் நின்று பார்த்துக்கிறாயா? மேல் பார்வைக்கு ஆள் இல்லை என்றால்

பாதி காலியாகி விடும்... நானே பார்ப்பேன், தம்பி வருகிற நேரம் ஆயிற்றா? அவனிடம் நான் சென்னை வீட்டு விஷயம் ஒரு பேச்சு பேச வேண்டி இருக்கிறது" என்றாள் தம்பி மனைவியிடம்.

தம்பி வருகிற நேரம்!

அதற்கு மேல் அங்கிருந்து அகல மாதுரிக்கு வேறு உந்துதல் தேவையிருக்கவில்லை. நேரே சமையல் அறைக்கு சென்றவள் அங்கேயே உட்கார்ந்துவிட்டாள். தனலட்சுமி சொன்னது போல அங்கே யாரும் திருடி உண்ணக் கூடியவர்கள் போலத் தோன்றாவிட்டாலும் அவள் அங்கிருந்து அகலவில்லை.

இரவு உணவின் போதும், அவ்வப்போது சசிதரனின் பார்வை தன் மீது படிவதை உணர்ந்தபோதும் அவள் தலையைத் தூக்கவில்லை.

பத்மினி உணவு உண்ண வரவில்லை.

உணவின் பின் முன் தினம் போலவே மெதுவாகத் தோட்டத்தினுள் மறைந்து கொண்டாள் மாதுரி. இவர்களில் எவருடைய சகவாசத்துக்கும் தனிமை எவ்வளவோ மேல்.

வெகு நேரம் நடந்து அலுத்துக் களைத்துத் திரும்பிய போது கீழே ஹாலில் தனலட்சுமி மட்டும் அவளுக்காகக் காத்திருப்பது போல அமர்ந்திருந்தாள்.

மாதுரியைக் கண்டதும் 'ஊம்...' என்று நீளமாக ஒரு பெருமூச்சு விட்டாள்.

ஏறிட்டுப் பார்த்த தம்பி மனைவியிடம். 'கட்டின புருஷன் சரியில்லை என்று அடுத்தவரை நம்பி வந்தால் இந்தக் கதிதான்" என்று கூறிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

தனலட்சுமியின் கண்கள் சிவந்திருப்பதைக் கண்டதும் மாதுரி மனம் உருகி, அருகில் சென்று அமர்ந்து "வருத்தப் படாதீர்கள் அண்ணி" என்றாள் ஆறுதலாக.

"வருத்தப்படாமல் எப்படி இருக்க முடியும்?" என்று ஓசையின்றி விசும்பினாள் தனலட்சுமி. இருந்திருந்து ஒரே ஒரு பெண், அவளை இரண்டாம் தாரமாகக் கொடுப்பது என்றால்..."

"இரண்டாம் தாரமா?"

"வழி வழியாகச் செய்வதுதான் என்றாலும், வருத்தமாகவும் இருக்கிறதில்லை? எங்கள் தாத்தா சொத்துக்காகவே ஆண் பிள்ளை இல்லாத வீட்டில் அக்கா தங்கை இரண்டு பேரைக் கட்டிக் கொண்டார். அப்பா கூட அம்மாவைச் சொத்துக்காகத் தான் கல்யாணம் செய்தார். தம்பிக்கும் சொத்து பிரியாமல் இருக்க வேண்டும் என்று ஆசை..."

"என்ன சொத்து?"

தலையை நீட்டி மாதுரியை ஒருதரம் உற்றுப் பார்த்தாள் தனலட்சுமி. "உனக்குத் தம்பி ஒன்றும் சொல்லவில்லையா?" என்று கேட்டாள். மாதுரி மறுப்பாகத் தலையசைக்கவும் "நான் சொல்லுகிறேன் கேள்" என்று தொடங்கினாள். "எங்கள் அப்பா சொத்து முழுவதையும் சம பங்காய்ப் பிரித்துக் கொடுத்திருந்தார். பப்பி அப்பா சரியில்லையா, சொத்தை அழித்து விடுவார் என்று நிர்வாகத்தை இங்கேயே வைத்துக் கொண்டார்கள்."

"பப்பி பிறந்த பிறகே அவள் அப்பாவுக்கு பக்தி முத்தி விட்டது. கடவுளைத் தேடி சன்னியாசியாகவே போய்விட்டார்."

கடமையைச் செய்து முடிக்காமல் கடவுளைத் தேடி ஓடினாரா? கடவுள் சரியானவராக இருந்தால் அப்படி வருகிறவர்களைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளவேண்டும் என்று ஆத்திரமாக நினைத்தாள் மாதுரி.

மாதுரியின் பதிலை எதிர்பாராமலே கதை சொன்னாள் தனலட்சுமி. "அப்புறம் எங்கள் அப்பா எங்களை இங்கேயே- [illegible] அவனே பார்த்தான். பப்பி

வயது வந்ததும் கட்டிக் கொள்கிறதாக சொன்னான். கொஞ்சம் அதிகப்படியாகப் போகிறானே என்று பார்த்தேன். ஆனால் வீட்டு ஆண்பிள்ளை சரியில்லாமல் அவனே ஆதரவு என்று வந்துவிட்டு, சொத்தையும் அவன் கையில் கொடுத்துவிட்டு அவனையே அதட்ட முடியுமா? வேண்டாம் என்று வெளியேற்றத்தான் முடியுமா?"

ஏதோ நெஞ்சினுள் சங்கடம் செய்ய பேசமுடியாமல், பேசத் தோன்றாமல் பேசாதிருந்தாள் மாதுரி.

"ஊ...ம் இதையெல்லாம் உன்கிட்ட சொன்னேன் என்று தெரிந்தால் என்னைக் கூறு போட்டு விடுவான். இந்த வீட்டுக்காக உன்னையும் சொத்துக்காகப் பப்பியையும்..." என்றவள் மாதுரியின் முகம் போன போக்கைக் கவனித்து, "என்ன பண்ணுகிறது சொல்லு. இவ்வளவு ஆன பிறகு பப்பியை வேற யாருக்குக் கட்டிக் கொடுக்க முடியும்?" என்று வருத்தக் குரலில் கேட்டாள்.

இந்த ஜாடைமாடை, கோடி காட்டல், குறிப்பு கொடுத்தல் எல்லாம் தாங்க மாட்டாதவை போல மாதுரிக்குத் தோன்றின.

மிகவும் சிரமப்பட்டுத் தொண்டையில் பந்தாய் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, "அப்படி என்றால் என்ன அர்த்தம்?" என்று நேரடியாக வினவினாள்.

சற்றுத் திகைத்தாற்போல் இருந்துவிட்டு, "அடிப்பாவிப் பெண்ணே, உனக்கு ஒன்றுமே தெரியாதா? பப்பி ரூமுக்கு உன் புருஷன் போய் ஒண்ணரை மணி நேரம் ஆகுதே, நீ அந்தப் பக்கம் தோட்டத்துக்குப் போகவும் இவன் உள்ளே போய் விட்டானே!" என்று மெல்ல பெரிய குண்டாகப் பார்த்து எடுத்து மாதுரியின் தலையில் போட்டாள் தனலட்சுமி.



8

சற்றும் நேரம் மாதுரிக்கு ஒன்றுமே தெரியவில்லை. நினைப்பு நடப்பு எதுவுமே புரியாமல் ஒரே சூனியம். உடம்பு கொதித்தது; குளிர்ந்தது; வியர்வை ஆறாய்ப் பெருகியது. இமை தட்டி விழிக்கக் கூட மறந்தவள் போல அப்படியே நின்றாள்.

அந்த அபலைப் பெண்ணின் துன்பத்தை நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டிருந்த தனலட்சுமி அவளை ஆறுதல் படுத்தக் கொஞ்சமும் முயன்றாளில்லை.

மாறாக, "ஊஉம்... முன்னே எப்படியோ; புதிதாக உன்னைக் கட்டியிருப்பதால் கொஞ்ச நாளாவது சும்மா இருப்பான் என்று பார்த்தேன்..." என்று வருத்தம் காட்டியே மேலும் வருந்தச் செய்தாள்.

மாதுரிக்கு அடிவயிற்றிலிருந்து குமட்டிக் கொண்டு வந்தது. ஆனால் நடந்து 'வாஷ்பேசின்' வரை செல்லக் கூடத் திராணியற்று கால்கள் துணியாய் துவண்டன. தன்னைச் சமாளிக்க அவன் வெகுவாய்ப் போராடிக் கொண்டு இருந்த போது எங்கோ ஒரு கதவு மெல்ல - திருட்டுத்தனமாகத் திறக்கும் ஓசை கேட்டது.

ஓசை வந்த இடத்தை அனுமானித்து நிமிர்ந்து நோக்கிய போது பத்மினியின் அறைக் கதவை மெல்லச் சாத்திக் கொண்டு சிதரன் வெளியே வருவது தெரிந்தது.

கீழ் உதட்டின் மீது பற்கள் பதிந்த இடத்தில் ரத்தம் கசிய, மாதுரி கல்லாய் உறைந்து நின்றாள்.

கலைந்திருந்த கேசத்தைக் கையால் கோதிவிட்டபடி அவன் அவளுடைய அறையை நோக்கி நடக்கவும் அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

சட்டென நாத்தனாரிடம் திரும்பி அவளது கையைப் பற்றி, "அண்ணி, நான்... நான் இன்று உங்கள் அறையில் படுத்துக் கொள்கிறேனே" என்று கேட்கும் போதே குரல் நலித்து போயிற்று.

அவளது வீட்டில் அவளுடைய கணவரிடமிருந்து தப்புவதற்காக இன்னொருவர் உதவியை கேட்க நேருவது என்றால் எவ்வளவு அவமானம்! அவள் மறுத்தால் அது இன்னும் எவ்வளவு பெரிய அசிங்கம்!

ஆனால் நல்ல வேளையாக தனலட்சுமி அப்படி ஏதும் சொல்லிவிடவில்லை. பெண்ணுக்குப் பெண் அல்லவா? மாதுரியின் மனநிலை புரிந்தவளாக, "அதற்கென்னம்மா நீ என்ன அல்லா அசலா? நீயும் எனக்கு ஒரு மகள் மாதிரி தான். நீயும் தம்பி மனைவிதானே..." என்றாள் ஆறுதலாக.

நீயும் தம்பி மனைவி என்றால்... மாதுரியின் மனம் ஆறுதல் அடைய மறுத்தது.

ஆனால் அதைப் பற்றி யோசித்துக் கொண்டு இருக்க முடியாமல் சசிதரனின் காலடி ஓசை கேட்டது.

மாதுரியின் அறையில் அவள் இல்லை என்பதைக் கண்டு தேடி வந்தான் போலும்.

அவன் முகத்தைப் பார்க்கவும் மனமற்று தனலட்சுமியின் பின்னே ஒதுங்கினாள் மாதுரி.

"மாதுரி..."

அவன் மேலே பேசுமுன் தனலட்சுமி அவசரமாய் குறுக்கிட்டு "தம்பி, இன்றைக்கு மாதுரிக்கு அவள் தாய்வீட்டு நினைப்பு ரொம்பவும் வந்து விட்டதாம்; பாவம்! உங்களைப் பார்த்தால் என் அம்மா மாதிரி இருக்கிறது. அவளைக்

உங்களோடு படுத்துக் கொள்கிறேன் என்று கேட்டாள். சரியென்று விட்டேன் பாவம், பப்பி போல இவளும் சின்னக் குழந்தைதானே" என்றாள் பரிவான குரலில்.

சற்று தயங்கிவிட்டுச் "சரிதான்" என்று திரும்பிச் சென்றான் சசிதரன்.

இரவெல்லாம் மாதுரிக்கு உறக்கம் வரவில்லை.

படுக்க. உட்கார என்று ஒன்றும் முடியாமல் தவியாய்த் தவித்தாள்.

அருவருப்பு, ஆங்காரம், அழுகை என்று எல்லாமே முட்டி மோதிக் கொண்டு வந்தன.

ரவீந்திரன் வீட்டாரை மிகவும் நல்லவர்கள் ஆக்கி விட்டானே அவளுடைய கணவன்!

அவர்களாவது வெறும் பணத்தாசை பிடித்தவர்கள் மட்டும்தான்.

ஆனாலும் சசிதரன் இவ்வளவு கேவலமானவரா?

கண்ணாரக் கண்டுவிட்டு சந்தேகம் வேறா? அவன் தமக்கையே சொல்லவில்லையா?

மற்றபடி பத்மினியின் அறையில் அவன் அவ்வளவு நேரம் இருக்க வேறு என்ன காரணம் இருக்க முடியும்? முதலில் இருந்தே அவர்கள் இருவரும் பழகும் விதம் அதிகப்படி என்று அவளுக்குத் தோன்றத்தானே செய்தது? ஆனால் மாதுரியின் மந்த மூளைக்கு உச்சந்தலையில் ஆணி வைத்து அறைந்து சொல்ல வேண்டியிருக்கிறது.

கதவைத் திறப்பதில்தான் என்ன திருட்டுத்தனம்! இதை எத்தனை நாள் மறைப்பதாக உத்தேசம்? கலைந்த தலையைக் கோதிவிட்டுச் சீர் செய்து கொள்கிறானாக்கும்!

இதற்குமேல் உடனேயே அவன் அவளை நாடிச் செல்வதுதான் மாதுரிக்கு மிகவும் கேவலமாகத் தோன்றியது.

நினைக்க நினைக்க அருவருப்பு தாளாமல் எழுந்து சென்று ஒருதரம் வாந்திகூட எடுத்துவிட்டு வந்தாள்.

சே. இனி இவரோடு எப்படி வாழ முடியும்?

அது சாத்தியமற்ற காரியம் என்று சர்வ நிச்சயமாக உணர்ந்தாள் மாதுரி.

ஆனால் இவனோடுதான் வாழ்க்கை முழுவதையும் கழித்தாக வேண்டும் என்றல்லவா விதி அவளை அவனோடு பிணைத்து வைத்திருக்கிறது.

தன் கையையும் காலையும் கட்டி சசிதரனின் காலடியில் போட்டு வைத்திருக்கும் விதியை எண்ணி ஒரு மூச்சு அழுதாள்.

கழுத்தில் உறுத்திய தாலிச் சங்கிலியைத் தொட்டுப் பார்த்தே அழுதாள்.

இதைக் கழற்றி வீசிவிட்டு, இனி நீ என் கணவனும் அல்ல. உன் மனைவியும் அல்ல என்று சசிதரனை அந்த வீட்டை விட்டு வெளியேற்றி விட்டால் என்று கூட ஒரு தரம் நினைத்தாள்.

ஆனால், இப்படி ஒரு வழி இருக்கிறதா என்று யோசனையை ஓட விட்டவள் சற்று சிந்தித்துவிட்டு அது முடியாத காரியம் என்ற முடிவுக்கு வந்தாள்.

முதலாவதாக, திருமணம் என்பது சசிதரனுக்கு எப்படியோ மாதுரியைப் பொறுத்தவரை வாழ்வு முழுமைக்கும் ஒரே முறையான சமாச்சாரம் இன்று இவன் கொடியவன் என்று அவன் கட்டியதைக் கழற்றி வீசிவிட்டு, கடந்ததை மறந்து, தன்னைக் கன்னியாகப் பாவித்துக் கொள்வதோ, பிறகு இன்னொன்றை பற்றுவதோ அவளால் முடியாத காரியம்.

இரண்டாவதாக அவனை வெளியேற்றி விடுவதற்கு இப்போது இது முழுக்க அவளது வீடும் அல்ல.

ஆனால் அதற்காக இவ்வளவுக்குப் பிறகும் முன்னூறு வருங்கள் மாதிரி கண்ணை, காதை, வாயை மூடிக் கொண்டு அவனோடு வாழ்வதும் அவளால் முடியாது.

ஒட்டவும் முடியாது; வெட்டவும் முடியாது என்றால் வேறு வழி?

விலகிக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தாள் மாதுரி.

விலகி எங்கே செல்வது. என்ன செய்வது என்று சற்று மருண்டபோதும் விலகியே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தபின் அதற்காக வழி முறைகளை அவளால் யோசிக்கும் அளவுக்கு மூளை வேலை செய்தது.

விலகி வாழ்தலின் முதல் பிரச்சினை பணம்.

உணவுக்கு, உடைக்கு, உறைவிடத்துக்குப் பணம் வேண்டும். அத்தோடு வெறும் பி.ஏ. படிப்பைக் கூட முடித்திராத நிலையில் அவளுக்கு யார் வேலை கொடுப்பார்கள்?

படிப்பை முடித்து, ஏதாகிலும் ஒரு வேலைக்கான பயிற்சி பெற்று வேலைத் தேடிக் கொள்ளும் வரையிலேனும் அவளது செலவுக்குப் பணம் வேண்டும்.

அந்தப் பணத்தைப் பெறுவதற்கான ஒரு வழியும் அவளுக்குப் புலப்பட்டது.

ரவீந்திரன் கூற்றுப்படி பார்த்தால் முதலில் ஓர் ஐந்தும், பிறகு நாளாவட்டத்தில் ஒரு மூன்றுமாக, சிவநேசர் சசிதரனிடம் பெற்றிருந்தது எட்டு லட்சம் வீடு சீர் செய்ய இரண்டு லட்சம் என்றானே எல்லாமாகப் பத்து லட்சம் ஆகிறது.

வீட்டின் மதிப்பில் மீதம் பத்து லட்சம் இருக்கிறது.

மாதுரிக்கு வெளியே தங்கிப் படிக்க வீட்டு வாடகை, [illegible] செலவு, சாப்பாடு என்று மாதம் இரண்டு ஆயிரம் ஆகக் கூடுமோ?

[illegible] ஆண்டுப் படிப்பு, இரண்டு வருடப் பயிற்சி-ஓர் இலட்சம் [illegible] தாராளம்.

[illegible] ஐம்பது லட்சம் ரூபாய் கொடுத்தால் விலகி விடுவதாகக் [illegible] சசிதரன் ஓ.கே. என்று சம்மதித்து விடுவான்.

விவாகரத்து, விடுதலைப் பத்திரம் என்று கையெழுத்துக் கேட்கலாம். கொடுத்து விட்டால் சந்தோஷமாகப் பணத்தைக் கொடுத்துக் கை கழுவி விடுவான் என்று வேதனையோடு நினைத்தாள் மாதுரி.

தன் யோசனையை மறுக்க மாட்டான் என்று நிச்சயமாய் நினைத்தாள். ஏனெனில் ஒரு கடமையும் இல்லாமல் ஒன்பது லட்சம் லாபமல்லவா? அவனுக்கு உலகத்தில் உயர்ந்தது பணம் தானே என்று வெறுப்போடு நினைத்தாள்.

திட்டமிட்டதைச் செயலாற்ற எண்ணி மறுநாள் காலையிலேயே சசிதரனைத் தேடினாள்.

மாதுரி சசிதரனைத் தேடுவதைக் கண்டதும் தனலட்சுமி, "மாதுரி. நீ என் பெயரை சசியிடம் இழுத்து விட மாட்டாயே. ஒரு வகையில் நானும் என் மகளும் உன்னை விடவும் அனாதைகள்" என்று கண்ணைக் கசக்கினாள்.

இரங்கி, "இல்லை அண்ணி நிச்சயமாகச் சொல்ல மாட்டேன்" என்று அவளுக்கு வாக்குத் தந்துவிட்டு கணவனை நாடிச் சென்றாள் மாதுரி.

ஏதோ வேலை என்று அன்று சற்று முன்னதாகவே வெளியே செல்லக் கிளம்பியிருந்தான் சசிதரன்.

அவனது ஆபீஸ் அறையாகப் பயன்படுத்திக் கொண்டிருந்த முன் அறையில் ப்ரீஃப் கேசில் எதையோ எடுத்து வைத்துக் கொண்டிருந்தவன், அவளைக் கண்டதும் கையிலிருந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு அவள் புறம் திரும்பி முறுவலித்து, "என்ன" என்று விசாரித்தான்.

அழுத்தமாக அதட்டிப் பேச வேண்டும் என்று நினைத்து வந்தவளுக்கு விசித்திரமான வகையில் வாயில் இருந்து சத்தம் எழும்ப மறுத்தது...

"வந்து..." என்று இழுத்தவளுக்கு இல்லாத சந்தேக மெல்லாம் வந்தது.

தாத்தா முதலில் கடன் வாங்கிய தொகை ஐந்து லட்சம் என்பது ரவீந்திரன் சொன்னதுதான். அவன் உண்மைதான் சொன்னான் என்று என்ன நிச்சயம்?

"அதுதான் ஏற்கனவே வந்தாகி விட்டதே" என்று இலகுவாகக் கேலி பேசினான் சசிதரன்.

செய்வதையும் செய்துவிட்டுச் சிரிப்பு வேறா என்று ஆத்திரம் வந்தது அவளுக்கு.

ஆனால் ஆத்திரம் அறிவை மழுக்கி விடும்.

ஒருகணம் நிதானித்து, "தாத்தா முதலில் உங்களிடம் கடன் வாங்கிய தொகை ஐந்து லட்சம் இல்லையா?" என்று கேட்டாள்.

"ம்" என்றான் அவன் சுருக்கமாக.

"பிறகு அவ்வப்போது வா... வாங்கியது போ-போக மீ... மீதிப் பணம் ஏதும் இருக்கிறதா" என்று தடுமாற்றத்துடன் முடித்தாள் மாதுரி.

ஒருகணம் அவளை ஆழம் பார்த்தான் சசிதரன். "உன் தாத்தா என் தந்தையிடம் ஐந்து லட்சம் வாங்கியது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, பதினாறு சதவட்டி போட்டாலும் கூட ஒரு தொகை வாங்கி ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாகிவிடும். பதினைந்து ஆண்டுகளில் எவ்வளவு ஆகியிருக்கும்? அத்தோடு உன் தாத்தா எப்போதேனும் ஏதேனும் தொழில் செய்து பார்த்திருக்கிறாயா? பழைய நட்புக்காக அப்பா கொடுத்துக் கொண்டே வந்தது... இப்போது கூட உன் தாத்தாவாகத்தான் வீட்டை எடுத்துக் கொள்ளச் சொல்லி எழுதி வரச் சொன்னார்..."

வட்டி!

இதை அவள் எண்ணிப் பார்க்கவே இல்லையே!

பணம் என்றால் அதிலும் கடன் ஏறும் போது வட்டி நினைவு வந்திருக்க வேண்டாமா? நாலாம் வகுப்பிலிருந்து தனி வட்டி, கூட்டுவட்டி என்று எத்தனை கணக்குகள் போட்டிருப்பாள்!

எவ்வளவு முட்டாள்தனமாக நடந்து கொண்டோம் என்று எண்ணி அவளுக்கு முகம் கன்றி சிவந்து போயிற்று.

சசிதரன் கொஞ்சம் அதட்டிப் பேசியிருந்தால்கூட நன்றாக இருந்திருக்கும் போலத் தோன்றியது.

புரியாத குழந்தைக்குச் சொல்வது போல அவனது மிருதுவான குரல் அவளை மேலும் தலைகுனிய வைத்தது.

ஆனால் அவளும்தான் பணவரவு செலவே தெரியாத ஒரு சிறு குழந்தையைப் போலத்தானே கேட்டு விட்டாள்.

மனைவியின் கன்றிய முகத்தைப் பார்த்ததும் சசிதரன் சட்டென்று அவளை அணுகி, "தொல்லை பிடித்த இந்தப் பண வரவு செலவு கணக்கெல்லாம் இந்த அழகான தலைக்கு வேண்டாமே" என்று ஒரு கையால் அவளது தோளைப் பற்றி மறுகரத்தால் அவளது தலையை மென்மையாக வருடினான்.

இவ்வளவு அருகாமையில், நெடிய உருவம் அகன்ற தோளுடன் நின்று அவன் பேசும்போது கவலையற்று அவனுள் ஒதுங்கிக் கொள்வது எளிதாகத்தான் அவளுக்கும் பட்டது.

தலையை வருடிய கரத்தால் அவள் முகத்தை லேசாக நிமிர்த்தி, "உனக்காக இதையெல்லாம் பார்க்கத்தான் நான் இருக்கிறேனே" என்று சரசமாகப் பேசியபடியே அவள் முகத்தை நோக்கிக் குனிந்தான் சசிதரன்.

செதுக்கினாற் போல் வடிவமைந்த அழுத்தமான உதடுகள் அவளை நெருங்குவதைப் பிரமை தட்டினாற் போலப் பார்த்துக் கொண்டிருந்தாள் மாதுரி.

இதே உதடுகள் நேற்று... சீச்சீ... வினாடிக்குள் அதை எப்படி மாதுரி மறந்தாள்?

அவன்தான் என்ன? இப்படி அவன் மனைவி நடந்திருந்தால் ஒப்புவானா? ஆண் என்றால் தனிச் சட்டமா?

சட்டென விலகி அறைக் கதவை நோக்கி விரைந்தவளை, "ஒன்று கேட்டுவிட்டுப் போ" என்ற அவனது குரல்

தடுத்து நிறுத்தியது. "ரவீந்திரன் இனி இந்த வீட்டிற்குள் வரக் கூடாது."

தன் முழு உயரத்துக்கும் நிமிர்ந்து, தலையை மட்டும் திருப்பிக் கணவனை வெறித்தாள் மாதுரி. ரவீந்திரன் என்ன அந்த மன்மதனே வந்தால்கூட நான் நிலை பிறழ்ந்து போவேனா? என்னையும் என்ன, உன்னைப் போல எண்ணினாயா என்று நினைத்தவள் ஓர் அலட்சியப் பார்வையுடன் திரும்பி நடந்து விட்டாள்.

தனியாக அறையில் உள்ளே பூட்டிக் கொண்டு அமர்ந்து இருந்த போது சசிதரனின் கார் செல்லும் ஓசை கேட்டது. இனி அவன் ஐந்திலிருந்து ஆறு மணிக்குள் திரும்பி வரக்கூடும் அதற்குள்ளாகத் தன் வாழ்வை என்ன செய்வது என்று முடிவு செய்து மாதுரி செயலாற்றியாக வேண்டும்.

விலகி விட வேண்டும் என்பதில் மட்டும் அவள் மனதில் எவ்வித மாற்றமும் இல்லை.

சொல்லப் போனால் அவன் அவளைத் தொட்டு, தலையை வருடியதையும் அதில் அவள் இதம் கண்டதையும் நினைக்கையில், அதில் முன்னை விடவும் உறுதிதான் உண்டாயிற்று.

எவ்வளவு இயல்பாக முத்தமிட வந்தான்!

சின்னப் பிள்ளைகளுக்கு விளையாட்டு சாமான்போல இந்த ஆண் பிள்ளைகளுக்கு எத்தனை பெண்கள் கிடைத்தாலும். ஆசையாகத்தான் இருக்குமோ? இல்லாவிட்டால் பழைய ராஜாக்கள் எல்லாம் டஜன் கணக்கில் கட்டி வைத்திருப்பார்களா?

ஆனால் அவன் முன் தினம் தப்பு செய்தது தெரிந்தும் அன்று அவன் தொடும் போது தான் சும்மா நின்றது மகாக் கேவலமாகப்பட்டது மாதுரிக்கு.

இந்தக் கேவலத்துக்கு இனி இடம் தராமல் வெளியேறி விட வேண்டியதுதான்.

ஆனால் கையில் பணம் இல்லாமல் வெளியே ஒரு நாள் கூடத் தங்க முடியாதே என்பதுதான் பிரச்சனையாக இருந்தது.

யாராவது ஒருவர்-உறவோ, நட்போ-அன்பாக இருக்க வேண்டும் என்பது கூட இல்லை. படித்து ஓர் வேலை தேடிக்கொள்ளும்வரை தங்க இடம் கொடுத்து உதவி செய்தால் அதைக் கடனாக ஏற்று அவள் திருப்பிக் கொடுத்து விடுவாளே, ஆனால் அப்படி உதவிக்கரம் கொடுக்க அவளுக்குத் தெரிந்து யார் இருக்கிறார்கள்?

அறிந்தவர் தெரிந்தவர் என்று ஒவ்வொருவராக எண்ணிப் பார்த்து எதுவும் படியாது என்று அவள் நிராசையுற்றுச் சோர்ந்தபோது அவளுக்குக் கடைசியாக நினைவு வந்து நிலைத்த பெயர் தான் ரேவதி சித்தி.



ரேவதியை நேரில் பார்த்த நினைவு மாதுரிக்கு இல்லை.

அப்படி ஒரு சித்தி இருப்பதே திருமண அழைப்பிதழ் அனுப்ப முகவரி எழுதும்போதுதான் அவளுக்குத் தெரிய வந்தது.

ஒரு பழைய டைரியை எடுத்து ரேவதியின் முகவரியைக் கூறிய போது சிவநேசர் அப்போது ரேவதி பற்றிய விவரத்தையும் பேத்திக்குக் கூறினார்.

"என் தம்பி மகள் தானம்மா, பாவம், பிறந்தபோதே தாயைப் பறிகொடுத்து விட்டாள். உன் அம்மா மங்களாவை விட நாலுமாதம் சின்னவள், சேர்ந்து வளரட்டும் என்று உன் பாட்டிதான் அழைத்து வந்தாள்.

"மறு வருஷமே வீட்டு வேலைக்காரியின் பெண்ணை இழுத்துக் கொண்டு உன் சின்ன தாத்தா எங்கேயோ ஓடி விட்டான்; இதுவரை அவன் பற்றி ஒரு தகவல் இல்லை.

"நாங்கள் எவ்வளவோ பார்த்துப் பார்த்து வளர்ந்த போது தகப்பனைப் பற்றிய ஏக்கமும் குறையும் அவளுக்கு ரொம்பவும் உண்டு.

"உன் அப்பா மகேசுவரனை இந்த வீட்டுக்கு அழைத்து வந்தவள் உன் சித்திதான். அவளுக்கு உள்ளூர ஓர் ஆசை இருந்திருக்கும் போல. ஆனால் உன் அப்பா உன் அம்மாவைப் பார்த்த பிறகும் இப்படி அப்படித் திரும்பவே இல்லை. உன் அம்மாவும் அப்போது உன்னைப் போல் மிகவும் அழகாக இருப்பாள். எப்படியே இரண்டு பேர் மனதும் ஒன்றுபட்டு போனது.

"ஆனால் உன் சித்தி அதை ஒப்புக் கொள்வதாக இல்லை. இங்கே வந்து இந்த வீட்டைப் பார்த்ததும் வீட்டின் வாரிசின் மேல் அவர் கண் பாய்ந்து விட்டதாம்.

"எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். அவள் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. உன் அப்பாவைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று மங்களாவுக்கு ஏகப்பட்ட அட்வைஸ். அவளது புத்திமதியை மங்களாவும் ஏற்கவில்லை; நானும் திருமணத்திற்குச் சம்மதித்து விட்டேன் என்றதும் ஒரே கோபம் வந்து விட்டது அவளுக்கு. மதுரைப் பக்கம் ஒரு வேலையைத் தேடிக் கொண்டு போய் விட்டாள். வயது வந்த பெண், மீறிச் செல்லும் போது என்னாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"ஆனாலும் பாசம் இல்லாதவள் என்று சொல்ல முடியாது. உன் அப்பா அம்மா விபத்து பற்றித் தெரிந்ததும் ஓடி வந்தாள். உன்னைவிட்டுப் பிரிய அவளுக்கு மனமே இல்லை. பிறகு உன் பாட்டி போனபோதும் வந்தாள். என்னிடம் வளர்ந்தால் நீயும் உன் அம்மா மாதிரி மனபலம் இல்லாமல்தான் வளருவாய் என்று

சொல்லித் தன்னோடு அனுப்பி விடும்படி கேட்டாள், அதற்கு நான் விடவில்லை என்று மீண்டும் மகாக்கோபம்.

"திருமணம் செய்துகொள்ள அடியோடு மறுத்து விட்டாள். ஆண்கள் மோசக்காரர்களாம்.

"தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று அதிலேயே நிற்பாள். காசு பணத்தில் கொஞ்சம் கெட்டி. அது வாழ்க்கைக்கு அவசியம்தான். மற்றபடி நல்ல குழந்தைதான் அவளும்.

"இப்போது உனக்குத் திருமணம் என்றால் ஆசையாக வருவாள் என்று நினைக்கிறேன். மற்றபடி நானும் பார்த்துப் பதினைந்து வருடம் ஆயிற்றே" என்று முடித்தார் தாத்தா.

"பதினைந்து ஆண்டுகளாகப் பார்க்கவே இல்லையா?" என்று வியந்தாள் மாதுரி; "நீங்களாவது போயிருக்கலாமே தாத்தா."

"போயிருக்கலாம், நானும் பெரிய 'ஸ்ட்ரோக்' வந்து தளர்ந்து போய்ட்டேன் இல்லையா கண்ணு? அத்தோடு அதைச் சாக்காக வைத்து வேறு உன்னை அவளிடம் விட்டு போகச் சொல்லுவாள். அவளுக்குப் பிடிக்காதபடி நடந்தால் மனதில் தைக்கும்படி சுள்ளென்று பேசுவாள். எதற்கு வம்பு என்றுதான் விட்டு விட்டேன். மற்றபடி தன்னைப் பார்த்துக் கொள்வதில் அவளும் என்றைக்குமே கெட்டிக்காரிதானே என்கிற தைரியம் வேறு."

மனதில் தைக்கும்படியான சுள்ளென்ற பேச்சுக்களைப் பிற்பாடு அனுபவத்தில் அறிந்து கொள்ள முடிந்த அளவு அப்படிப் பேச்சுக்கு இடம் வராதபடி கவனத்துடன் நடக்கப் பழகிக் கொண்டபோதுதான் தாத்தா ஏன் அந்த அளவுக்கு ஒதுங்கி போனார் என்பது மாதுரிக்குப் புலப்பட்டது.

ஆனால் அன்றைக்கு இந்த ஓர் உறவுதான் ஒரே ஒரு புகலிடமாகத் தோன்றவும் அவசரமாகத் தாத்தாவின் டைரியை எடுத்து ரேவதியின் முகவரியைத் தேடினாள்.

திருமணத்திற்கு ரேவதி வரவில்லை, வெறுமே முன்னூறு ரூபாய் மட்டும் அனுப்பியிருந்தாள் என்று சிவநேசர் சொல்லியிருந்தார்.

ஆனால் டைரிக்குள் இருந்த அவளது கடிதம் வேறு சொல்லிற்று.

மகளைப் போலவே பேத்தியையும் அந்த வீட்டைச் சுருட்ட வந்த ஒரு சந்தர்ப்பவாதிக்குத் தாரை வார்க்க வேண்டாம் என்று எச்சரித்தாள் ரேவதி. பெண்களுக்குத் திருமணம் அவசிய மில்லை என்றும் திருமணத்தை நிறுத்தி விடுமாறும், "ஏதோ, மங்களாவின் மகள் வாழ்க்கையும் நாசமாகி விடக் கூடாது என்று நினைப்பதால் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். இதையும் மீறி உங்கள் வழக்கமான முட்டாள் தனத்தில் அவளையும் பலி கொடுப்பதானால் அதில் தலையிட எனக்கு உரிமை இல்லை. இந்தப் பணத்துக்கு அவளுக்கு ஏதாவது வாங்கிக் கொடுங்கள்" என்றும் கூறிக் கடிதத்தை முடித்திருந்தாள் அவள்.

தாத்தாவை முட்டாள் என்று குறிப்பிட்டது மனதை உறுத்தியபோதும், எவ்வளவு தீர்க்க தரிசனம் என்று தோன்றியது மாதுரிக்கு, பலிதானே ஆகிவிட்டது.

முன்பின் அறியாத ரேவதியிடம் செல்லுவதில் இருந்த கொஞ்ச நஞ்சத் தயக்கமும் அகன்றது.

கடிதத்தோடு, முகவரி இருந்த பக்கத்தை மட்டும் முதலில் கிழித்து எடுக்க நினைத்தவள் பிறகு டைரியையும் எடுத்துக் கொண்டாள்.

அதில் இருந்தவை பெரும்பாலும் அறிந்தவர் தெரிந்தவர் முகவரிகளே. ஒன்றிலிருந்து ஒன்று என்று விசாரித்து அவள் இருக்கும் இடத்தை தேடிக் கொண்டு சசிதரன் வந்துவிடக் கூடாதே.

தொல்லை விட்டது என்று நிம்மதிதானே அவனுக்கு என்று தோன்றியபோதும் அன்று சசிதரன் அவளை இயல்பாகத் தொட்டு முத்தமிட முயன்றதிலிருந்து ஒருவகையில் கலக்க மாகவும் இருந்தது மாதுரிக்கு. அத்தோடு ஒரு பெண் தன்னை அலட்சியப்படுத்திப் போவதா என்று நினைத்து விட்டால்? எதற்கு வம்பு? அவள் இருக்கும் இடம் அவனுக்குத் தெரியாமலே இருக்கட்டும்.

கைப்பையைத் திறந்து பார்த்தாள்.

எதற்கும் இருக்கட்டும் என்று தாத்தாவின் சொல்படி பையினுள் எப்போதும் வைத்திருக்கும் நூறு ரூபாயோடு அன்றாட போக்குவரத்துச் செலவுக்கென்று ஒரு பத்து ரூபாய் தவிர மாதுரி வேறு பணம் ஏதும் வைத்துக் கொண்டது இல்லை.

இப்போது பையில் ரேவதி அனுப்பிய முன்னூறும் இருந்தது. கூடவே திருமணமான மறுவாரம் சசிதரன் அவளிடம் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து, "செலவானதும் சொல் வேறு தருகிறேன்" என்று கொடுத்திருந்த பணமும் இருந்தது.

அவன் என்ன கணக்கு சொன்னான்? ஐம்பது ஆண்டுகளில் இருமடங்கா? அப்படியானால் இந்த பதினைந்து ஆண்டுகளில் முதலில் வாங்கிய தொகைக்கு வீடு சரியாகி விடும்.

"உன் தாத்தா தொழில் செய்து பார்த்திருக்கிறாயா?"

தன் நகைகள் எல்லாவற்றையும் சேர்த்து வைத்துப் பார்த்தார். முன்பு 'யதேஷ்டம்' என்று தோன்றியவை இப்போது பரிதாபத்திற்கு உரிய அளவு கொஞ்சமாகத் தோன்றின.

ஒரு திருமணத்திற்குச் செல்லும்போது நடந்த விபத்தில் அவளுடைய பெற்றோர் இறந்ததாகவும். அதிர்ச்சியும் துக்கமும். சற்றே சமனப்பட்ட பிறகு விசாரிக்கையில் இருவர் உடலில் நகைகள் ஏதும் இல்லை என்று போலீசார் சொன்னதாகவும் சிவநேசர் ஒரு தரம் கூறியதுண்டு. இந்த மாதுரி அகாலமாய் மரணமடைந்த உடல்களில் இருந்து நகைகளைத் திருட எப்படி மனம் வந்ததோ என்று மாதுரி நினைத்திருக்கிறாள்.

பாட்டியின் நகைகளில் விற்றது போக மீதியிருந்த ஒன்றிரண்டில் செய்த சில நகைகளைத் தவிர மற்றவைக்கும் மூலம் சசிதரனுடைய பணமாகத்தான் இருக்க வேண்டும்.

எல்லா நகைகளையும் தாலிக்கொடி நீங்கலாக-அவையும் கழற்றி வைத்து விடலாமா என்று கூட ஒருதரம் மாதுரிக்குத் தோன்றியது. ஆனால் இந்தத் தமிழ் மண்ணில் பிறந்த பாவமோ என்னவோ, அதற்கு மனம் வரவில்லை. எனவே மற்ற அனைத்தையும் சேர்த்து வைத்தாள்.

சசிதரன் கொடுத்த ஆயிரத்தையும் அதனுடன் சேர்த்து வைத்தாள்.

அவனுக்கும் ஒரு கடிதம் எழுதி வைத்தாள்.

மொட்டையாக இந்த மாதிரி வாழ்வது அவளுக்குச் சாத்தியப்படாது என்றும் அவனுக்கும் அவளுக்கும் இடையில் இனி ஒன்றும் இல்லை என்றும் அவன் வேறு திருமணம் செய்து கொள்வதில் அவளுக்கு முழு சம்மதம் என்றும் எழுதினாள். வீட்டின் மேல் அவளுக்கு ஏதேனும் உரிமை இருந்தால் அதை அடியோடு விட்டுக் கொடுப்பதாக எழுதினாள்... தாத்தாவின் கடனைத் தன்னால் இயன்ற அளவு திருப்பியிருப்பதாகவும் தன்னைத் தேட வேண்டாம் என்றும் எழுதி முடித்தாள்.

நகை, பணம், கடிதம் எல்லாவற்றையும் கொண்டு போய் சசிதரனின் தனியறையில் மேசைமேல் அடுக்கி வைத்தாள்.

மீண்டும் தன் அறைக்குச் சென்று தனக்கு அத்தியாவசியம் என்று தோன்றிய பொருட்களை எடுத்து வைத்தாள்.

அதிகம் எடுக்கவும் பயம். பெட்டி போலப் பெரிதாக எடுத்துச் சென்றால் வேலையாட்கள் அவளைத் தடுத்து நிறுத்திவிடக் கூடாதே? அவனுக்குத் தகவல் கொடுத்து வரவழைத்து விடக்கூடாதே என்று அஞ்சினாள். அவர்களுக்குச் சசிதரன் என்ன மாதிரி உத்திரவு இட்டிருந்தான் என்று அவளுக்குத் தெரியாதே!

யோசித்து எண்ணி நாலே நாலு சாதாரணமான மெல்லிய 'வாஷ் அன்ட் வேர்' சேலைகளைப் பொருத்தமான துணை ஆடைகளோடு எடுத்து வைத்தாள். சோப்பு, சீப்பு. பிரஷ் முதலியவை கைப்பையில் அடக்கமாயின. ஒரு சின்ன தோள் பையில் துணிகளை அழுத்தி அடுக்கி வைத்தாள்.

பெற்றோர் அறையினுள் போய்ப் படங்களை வெறித்துப் பார்த்தாள்.

பகல் உணவின் பின் தனலட்சுமி படுத்து உறங்கும் வேளையில், வீடு முழுமையுமே ஓரளவு ஆசுவாசம் அடங்கியிருக்கும் நேரத்தில் மடமடவென்று கிளம்பிவிட்டாள்.

பையோடு அவளைப் பார்த்துத் திகைத்த ஒன்றிரண்டு வேலையாட்களிடமும், கூர்க்காவிடமும் டெயிலரிடம் தைக்கத் துணி கொடுக்கப் போவதாகவும், அப்படியே ஒரு சினேகிதியைப் பார்த்துவிட்டு வருவதாக உரைத்து முறுவலித்து விட்டு ஒருவாறு வீட்டைவிட்டு வெளியேறிய பிறகும் ஒருபுறம் நெஞ்சு கனத்த போதும் கொஞ்சம் நிம்மதியாகவும் உணர்ந்தாள்.

எப்படியோ, ஒரு அருவருப்பான வாழ்விலிருந்து வெட்டி முறித்துக் கொண்டு ஒருவாறு வெளியேறியாயிற்று ஒருவரும் அறியாமல் ஒளிந்து மறைந்து என்றாலும்தான்.

மதுரையில் ரேவதியின் வீட்டைக் கண்டுபிடிக்க மாதுரி அதிகம் சிரமப்படவில்லை.

ரேவதியும் அவளை அறிந்து கொள்ள அதிகம் சிரமப்பட வில்லை.

ஒருதரம் மாதுரியைக் கூர்ந்து பார்த்தாள். "யார் என்று நீ அறிமுகப்படுத்திக் கொள்ளத் தேவையே இல்லை. மைதிலியின் அசட்டுக் களை அப்படியே உன் முகத்தில் படர்ந்திருக்கிறதே. என்ன, நான் எழுதியது போல வீட்டை வாங்கிக் கொண்டு உன்னை அடித்துத் துரத்தி விட்டானா உன் புருஷன்! எதுவானாலும் உள்ளே வந்து உட்கார்ந்து சொல்லு. சொல்வதை

ஒரு வாய் காபி குடித்து விட்டுச் சொல்லு. அதற்குமுன் இங்கேயே மயக்கம் போட்டு விழுந்து வைத்தாயானால் அது வேறு தொல்லை ஆஸ்பத்திரிச் செலவுக்கு கூடப் பணம் வைத்திருக்கிறாயோ என்னவோ?" என்று அதட்டலாலேயே வரவேற்றாள்.



விசித்திரமான வகையில் ரேவதியின் அதட்டலும் கடுமையும் அன்றைக்கு மாதுரிக்குத் தேவையாகவே இருந்தது மற்றபடி ஓர் அன்பு மொழி, ஏன் பிரியமான ஒரு பார்வையால் கூட அவள் உடைந்து போய் கண்ணீரைக் கொட்டியிருப்பாள்.

ஆனால், அப்படி நீ அழுவதால் உன்னைத் தட்டிக் கொடுத்துத் தாங்குவதற்கு இங்கு யாரும் தயாரில்லை. என்று ரேவதி சொல்லாமல் சொன்னது மாதுரியைத் திடம் கொள்ள வைத்தது.

அவளும் ஒன்றும் தஞ்சம் என்று அடைக்கலம் தேடி வரவில்லையே, படித்து வேலை தேடிக் கொள்ளும் வரை ஓர் உதவி அதுவும் கடனாகச் செய்தால் போதும்.

கண்ணீர், கம்மல், விம்மல் என்று எதுவும் இல்லாமல் ஒரு மொத்த குரலில் மாதுரி விவரத்தை சொல்லி முடிக்கவும், அவளை ஏற இறங்கப் பார்த்தாள் ரேவதி.

"ஊம் ஊர் ஏமாற்றுக்காரப் புரட்டன் ஏதோ கதை கட்டினானாக்கும் உடனே உனக்கு ரோஷம் பிய்த்துக் கொண்டு வந்ததில் நகைகள் அத்தனையையும் கழற்றி வீசி விட்டு வந்து விட்டாயாக்கும் ஏதோ பாரத குல ரத்தினம், தாலிச் சங்கிலியையாவது விட்டு வைத்தாயே" என்றாள் பரிகாசமாக.

உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாதிருந்தாள், பெண்.

உடனேயே குரல் மாறிவிட ரேவதி திட்டமிடத் தொடங்கினாள். "கவனி மாதுரி, உன் திட்டம் கிட்டத்தட்ட சரிதான். ஆனால் படிப்பை முடித்து விட்டுத்தான் வேலைக்கும் பயிற்சி எடுக்க வேண்டும் என்பது இல்லை.

ஆங்கிலம் நன்றாயிருந்தால் பிளஸ்டூ கூடப் போதும். வெளியே தங்குவதானால் செலவு நிறைய ஆகும். அதனால் இங்கேயே மாடி அறையில் தங்கிக் கொள். ஓசியாக அல்ல பாதி வாடகை. ஒழுங்காக வாடகை தந்து விட வேண்டும். அப்புறம் சாப்பாடு. அவ்வளவுக்கும் நானே செய்வது என்றால் முடியாது... ஒன்று செய்யலாம் முதலில் இந்தச் சங்கிலியை விற்று விடு என்ன?"

எவ்வளவோ கவனத்துடன் இருந்தும் அதிர்ச்சியை மாதுரியின் கண்கள் காட்டிவிட்டன.

"என்ன? என்ன பெரிய விஷயம்? மகாப் புனிதமான தாலியா? ஒரு மோசக்காரக் கழுதை கட்டியது. பணத்திலும்தான் சொல்லுகிறேன். அப்படி வீடு முழுகுகிற அளவு கடன் வளரும் வரை யாரும் சும்மா இருக்க மாட்டார்கள் எல்லாம் கப்சா, வேண்டுமானால் இதில் இருக்கும் மாங்கல்யத்தை மட்டும் எடுத்து ஒரு கயிற்றில் கோர்த்து மாட்டிக்கொள். உன் பத்தினித்தனத்துக்குப் பங்கம் நேராமல் இருக்கும்" என்றாள் ரேவதி ஏளனமாக.

மாதுரி பேசாமல் இருக்கவும். "இந்த அனாவசியமானசென்டி மென்டுகளை ஒதுக்கி விடவே கற்றுக் கொள் மாதுரி. இல்லை என்றால் பிழைக்க முடியாது. அப்புறம் இது... மெல்லிசாகத்தான் தெரிகிறது. நாலு... ஐந்து பவுன் இருக்குமா?" என்று கேட்டாள்.

ஐந்து என்றுதான் சிதம்பரம் சொன்னார். தாங்களே தாலி செய்து விடுவதாகக் கூறி பணம் வாங்கிச் சென்றவர். மருமகளின் மென்மையான கழுத்துக்கு அதிகச் சுமை வேண்டாம் என்று யோசித்து மெல்லியதாகச் செய்ததாகச் சொல்லுவார்.

'ஐந்து என்றால் சுமார் பதினைந்து ஆயிரம் ரூபாய் கிடைக்கும். எனக்குத் தெரிந்த ஓர் இடத்தில் இரண்டு வட்டி தருவார்கள். மாதம் முன்னூறு வரும் அது போதாதுதான். மேலே தேவைப்படுவதை நான் தருகிறேன் ஆனால் ஒரு நிபந்தனை. பயிற்சி முடிந்து நீ வேலை செய்யத் தொடங்கியதும் நான் எவ்வளவு தந்தேனோ அதை இந்தப் பணத்தில் இருந்து மொத்தமாகத் திருப்பித் தந்துவிடவேண்டும்."

நெஞ்சில் நிம்மதியோடு சம்மதித்தாள் மாதுரி.

சித்தி கூறியதுபோல டைப்ரைட்டிங் வகுப்பில் சேர்ந்தாள். சுருக்கெழுத்தும் பயின்றாள்.

முதலில் ஒரு டைப்பிஸ்ட் வேலையில் சேர்ந்து கொண்டால் பிறகு மேலே படித்து செகரட்டரியாக உயர்ந்து விடலாம்.

முதலில் சில நாட்கள் எப்படியோ சசிதரன் தேடி வந்து விட்டது போலக் கனவுகள் வந்தன. தெருவில் நடக்கையில் உயரமானவர்களைக் கண்டால் ஒளிந்து கொள்ளத் தோன்றும். மெல்ல மெல்ல இந்தத் தொல்லைகள் மறைந்தன.

அடுத்த கஷ்டம் ரேவதியின் பேச்சு.

அவளுடைய முரட்டுத்தனமான பேச்சுக்களும் ஒருவாறு மாதுரிக்குப் பழகிவிட்டன.

ரேவதியைப் பொறுத்த வரையில் மாதுரியின் தந்தை மகேசுவரன் ஒரு முழு மோசக்காரர். அதை வெளிப் படையாகவே சொல்லுவாள். ஆனால் அவரைத் தெய்வமாக வணங்கிப் பழகியிருந்த மாதுரிக்கு இதைக் கேட்க கஷ்டமாக இருக்கும்.

"பணம் மனிதர்களை விடவும் முக்கியம் என்று ஒரு அத்தியாவசியமான பாடத்தைக் கற்றுத் தந்தவர் உன் தகப்பன்தான். எவ்வளவோ சொல்லியும் உன் முட்டாள் தாயும் கேட்கவில்லை. ஏதோ வாழுகிற வரை முட்டாளின் சொர்க்கத்தில் வாழ்ந்து விட்டுப் போனாள்" என்பாள்.

முன்னே என்றால், "இல்லை என் அப்பாவும் அம்மாவும் உண்மையாகவே காதலித்துக் கல்யாணம் செய்து மெய்யான மகிழ்ச்சியோடு வாழ்ந்தவர்கள்தான்" என்று அடித்துச் சொல்லக் கூடியவள்தான் மாதுரி.

ஆனால் வெகு சமீபத்தில் நாத்தனாரிடம் கற்ற புதுப் பாடம் ஒன்று இருக்கிறதே. ஆதரவை நாடி வந்து விட்டு அவர்களையே அதட்டுவது எப்படி?

பேசாமல் பொறுத்துப் போனாள்.

தன் வேலைகளைக் கச்சிதமாய்ச் செய்து கொண்டு சுருக்கமான பேச்சுடன் ஆர்வத்துடன் பயின்ற அந்தப் பெண்ணை ரேவதிக்கும் ஒருவாறு பிடித்துப் போயிற்று.

உள்ளூர இருந்த ஒரு ஏமாற்றச்சி தவிர, ஒரு மாதம் நிம்மதியாகக் கழிந்தது.

அன்று காலையில் எழும்போதே தலை இருமடங்கு கனத்துடன் தன போக்கில் எங்கோ போவது போல இருந்தது மாதுரிக்கு.

பல் விளக்க பிரஷ்ஷை வாயில் வைத்தால் வயிற்றைச் சுருட்டிக் கொண்டு வாந்தி வந்தது.

வகுப்பு இருக்கிறதே; உடம்பு ஏதோ சரியில்லை போல் தெரிகிறதே என்று வருந்தியபடி காபியை எடுத்தால் மீண்டும் குமட்டிக் கொண்டு வந்தது.

காபியை மேசைமேல் வைத்துவிட்டுத் திரும்பியவள் நள்ளாடவும். "என்னடி?" என்று அதட்டியபடி தாங்கிப் பிடித்தாள் ரேவதி.

"என்னவோ உடம்பு சரியில்லை சித்தி. சமாளித்துக் கொள்ளலாம் என்று பார்த்தால் முடியவே இல்லை. இன்று மட்டும் கொஞ்சம் படுத்திருந்தால் சரியாகிவிடும் என்று நினைக்கிறேன்" என்று கூறி மெதுவாக நடந்து மாடிக்குச் சென்று மீண்டும் படுக்கையில் விழுந்தாள் மாதுரி.

அவள் செல்லுவதையே பார்த்துக் கொண்டே இருந்தாள் ரேவதி. தன் பணிக்குச் செல்லுமுன் மகளிடம் சென்று நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். "இந்த உடம்பு சரியில்லாததை ஒன்றிரண்டு நாளில் நீக்கிக் கொள்வதா இல்லை இன்னும் மூன்று மாதம் சகித்துக் கொள்வதா என்று நீதான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் மாதுரி ஏனென்றால் இது உன் குழந்தை. எதற்கும் இன்றைக்கு லீவு சொல்லி விடுகிறேன்" என்றவள் மேலே பேசாமல் வேலைக்குப் போய்விட்டாள்.

ரேவதியின் பேச்சு நன்றாகப் புரிபட மாதுரிக்குச் சில பல நிமிடங்கள் தேவைப்பட்டது.

புரிபட்டதுமே முதலில் அவளால் நம்பவே முடியவில்லை.

அந்த ஒரே ஒரு நாளில் எப்படி?

முதலில் நம்பமாட்டாமல் ஒதுக்கியவள், பிறகு தனக்குத்தானே கணக்கிட்டுப் பார்த்துவிட்டு அது உண்மைதான் என்று உணர்ந்தாள்.

சித்தியின் பேச்சு சரிதான்.

"உன் குழந்தை" என்றாளே!

"என் குழந்தை!" என்று மெல்லச் சொல்லிப் பார்த்தாள்.

உச்சிமுதல் உள்ளங்கால்வரை பூச்சொரிந்தாற்போல ஒரு சந்தோஷம் உண்டாயிற்று.

எழுந்து உல்லாசமாகத் துள்ளிக் குதித்து ஆடவேண்டும் போலத் தோன்றியது.

ஆனால் அப்படி ஆடினால் உள்ளே இருக்கும் பாப்பாவுக்கு ஏதும் ஆகிவிடுமோ என்று ஓர் இனிய கலவரம் அவளை அடக்கிற்று.

அதுவரை அவள் கண்டு தூக்கி, விளையாடி மகிழ்ந்திருந்த அத்தனை குழந்தைகளும் அவள் மனதில் பவனி வந்தன.

இந்தக் குதூகலத்தில் ஆழ்ந்திருந்தவள். மாலையில் ரேவதி வந்து, "என்ன முடிவு செய்தாய்?" என்று வினவிய போது திகைத்தாள்.

"எ... எதைப்பற்றி சித்தி!"

ரேவதியின் முகம் சுருக்கவும், மாலையில் அவள் பேசிய மற்றதும் நினைவு வந்தது மாதுரிக்கு.

"ஊகூம், சித்தி எனக்கு இந்தக் குழந்தை வேண்டும்" என்றாள் பிடிவாதமாக.

அதுதான் உன் குழந்தை உன் முடிவு என்றேனே ஆனால் ஒன்றை யோசித்துப் பார்த்தாயா? டானிக், வைத்தியர், பிரசவம் என்று செலவு நிறைய ஆகக் கூடும். பிறக்கும் குழந்தைக்குச் செலவு இருக்கும். உன்னால் தாங்க முடியுமா என்று யோசி. ஏனென்றால் என் மேல் ஒட்டுண்ணியாக உறிஞ்சலாம் என்று நினைக்கக் கூடாது, இலவசமாக என்று எதற்கும் என்னை எதிர்பார்க்கக் கூடாது." என்றாள் ரேவதி கறாராக.

இந்த ஒரு மாதத்தில் ரேவதியின் பேச்சுமுறை மாதுரிக்குப் பழகிப் போயிருந்து இந்த 'ஒட்டுண்ணி' கொஞ்சம் உறுத்தவே செய்தது. காட்டிக் கொள்ளாமல் "இல்லை சித்தி. முடிந்த அளவு செலவைச் சுருக்கிக் கொள்கிறேன். மொத்தப் பணத்தில் எல்லாவற்றையும் தந்து விடுகிறேன். அப்புறம் வேலை கிடைத்ததும் சமாளித்துக் கொள்கிறேன்" என்றாள் கனிந்த குரலில் உறுதியோடு.

அதன்படி செய்தாள். தக்காளி, காரட், கீரை என்று உண்டு டானிக் செலவு இல்லாமல் பார்த்துக் கொண்டாள். வயிற்றைத் தள்ளிக் கொண்டே 'லோயர்' எழுதினாள். கைப் பிள்ளையோடு 'ஹையர்' பாஸ் செய்தாள்.

எதிர்பார்த்த அளவு சம்பளம் இல்லாதபோதும் கிடைத்ததை விடாதே. இதில் இருந்து கொண்டு மேலே முயற்சி செய்யலாம். என்ற ரேவதியின் புத்திமதிப்படி இந்த வேலையில் சேர்ந்தாள்.

குழந்தைக்குப் பால் பவுடர் செலவு எக்கச் சக்கம் ஆவதைக் கண்டு, மற்றவர்களிடம் கேட்டு, டாக்டரையும் கலந்து கொண்டு கேப்பைக்களஞ்சி தயார் செய்து பாலுடன் கலந்து கொடுத்தாள்.

எப்படி எப்படியோ சிக்கனமாக வாழ்ந்தும், வேலை செய்யத் தொடங்கியபோது நகை விற்ற பணம் முழுமையுமே ரேவதிக்குக் கொடுத்து முடிக்கும்படி ஆயிற்று.

அப்போதும் மாதுரி கலங்கிவிடவில்லை இந்த வருமானம் இப்போது போதுமானது இனி வருமானம் கூடும்போது வளம்தானே என்று நிம்மதியாகத்தான் இருந்தாள். மகிழ்ச்சியாக என்று கூட சொல்லலாம்.

எப்போதாவது, ஓரோர் சமயம் கண்ணன் பார்க்கும் விதத்தில் சசிதரனின் முகம் நினைவு வரும். அதைத் தொடர்ந்து இப்போது எப்படி எங்கே இருக்கிறானோ என எண்ணக் கூடும். உடனேயே தன்னையே அதட்டி அடக்கிக் கொள்வாள். அவனுக்கென்ன அடுத்து கழுத்தை நீட்ட அக்கா மகள் இருக்கிறாள். அவ்வளவு பெரிய வீடு இருக்கிறது. அவன் நன்றாகத்தான் இருப்பான். அவனைப் பற்றி நினைத்து மனதை குழப்பிக் கொள்வது மதியீனம்.

இன்னும் ஒரு பயமும் அவளுக்கு அவ்வப்போது வரும்.

கண்ணன் என்று ஒரு மகன் இருப்பது தெரிந்தால் அவன் என்ன செய்யக்கூடும்? கண்ணனைப் போல ஒரு பிள்ளையின் மீது உரிமைகிட்ட ஒரு சிறு வாய்ப்பு இருந்தால்கூட அதை விட்டுவிட யாராலும் முடியாதே! அதனால் இந்த விஷயத்தை அவன் தெரிந்து கொள்ள விடவே கூடாது; என்ன பாடுபட்டாவது அதைத் தடுக்க வேண்டும் என்று உறுதி செய்து கொள்வாள். அவனைப் பார்க்கும் வாய்ப்பு அதுவரை நேராததால் அந்த மாதிரி பாடுபட வேண்டிய அவசியமும் அதுவரை இல்லாதிருந்தது. ஆனால் அவளது உறுதியை அவளே உடைத்து எறிவது போல் அவனிடமே பணஉதவி கேட்பது என்றால் எப்படி?

கேளாவிட்டால் கண்ணனின் கதி?

பித்துப் பிடித்த பெற்ற மனம், பிற்பாடு பிள்ளையைப் பிரிய நேர்ந்தாலும் பரவாயில்லை என்று தீர்மானித்து வெட்கம், மானம், ரோஷம் அத்தனையையும் கைவிட்டு அதன் தகப்பனிடம் கையேந்த முடிவு செய்தது.

ஆனால் அவன் தருவானா?

அதிலும் அன்று ஒன்றுமே வேண்டாம் என்று வெட்டி எறிந்துவிட்டு ஒருவரும் அறியாமல் சென்றவள் எந்த முகத்தை வைத்துக் கொண்டு பணம் கேட்க வந்தாய் என்று கேட்டால்?

ரேவதிக்குக் காலம் பொன்னாகத் தெரிந்தது.

சீக்கிரம், சீக்கிரம் என்று மாதுரியை விரட்டி அடித்தாள்.

ஆனால் அவளையும் குற்றம் சொல்வதற்கு வழியில்லாமல் அவளும் வெளிநாடு செல்வது தொடர்பான வேலைகளைக் கவனிக்க வேண்டியிருந்தது.

ஒருவாறு அதுவரை சேமித்து வைத்திருந்ததில் மீதமிருந்த ஐநூறு ரூபாயையும் எடுத்துக் கொண்டு மாதுரி அவளுடைய கணவனை நாடிச் சென்றாள்.

மாதுரி தன் கணவனைப் பற்றி அறிந்திருந்தது கொஞ்சமே.

'பாக்கியலட்சுமி எண்டர்பிரைசஸ்' என்கிற பெயரில் வால்வ் பேரிங்ஸ் என்று ஏதோ இயந்திரப் பொருட்களைச் செய்து கொண்டிருந்தான். அதன் விற்பனைக்காக அங்கங்கே கிளைகள் வைத்திருந்தான் என்பதை அவனது விசிட்டிங் கார்டைப் பார்த்துத் தெரிந்து கொண்டிருந்தாள்.

"எல்லாம் எங்கள் அப்பா சம்பாத்தியம். அவருக்கு எதிலும் எங்கள் பாட்டி பெயர்தான் இருக்க வேண்டும்.

என் பெயரில் கூட பாதி பாட்டி பெயர்தான். சொத்து பத்து எல்லாவற்றிலும் பாதி..."

பாதியென்ன? முழுவதையும் தனலட்சுமியும் அவளுடைய மகளுமாக எடுத்துக் கொண்டாலும் மாதுரிக்கு அக்கறை யில்லை. அவளுடைய செல்வனின் வைத்தியத்துக்காக ஒரு பத்தாயிரம் தந்தால் போதும்.

பாக்கியலட்சுமி எண்டர் பிரைசஸ்சின் தொழிற்சாலையும் தலைமை அலுவலகமும் சென்னையில் இருந்ததால் சசிதரனும் பெரும்பாலும் சென்னையிலேயே இருக்கக்கூடும் என்று ஊகித்து சென்னைக்கே சென்றாள் அவள்.

உள்ளூர அவளுக்கு இன்னொரு ஐயப்பாடு கூட.

பங்களூரில் அந்த அழகான வீட்டை விட்டுவிட்டு ஒருவரால் வேறு இடத்தில் இருக்க முடியுமா?

ஆனால் அந்த வீட்டின் அழகை அறிய ரசிக மனம் வேண்டும்? ரசிகமனம் கிட்ட நல்ல குணம் கொஞ்சமேனும் வேண்டும். இவனுக்கு அது ஏது.

அந்த வீட்டை என்றோ நல்ல விலைக்கு விற்றுவிட்டிருப் பான். அல்லது இடித்துத் தகர்த்துவிட்டு நிறைய ஃப்ளாட் கட்டியிருப்பான். குறைந்தபட்சம் ரவீந்திரனுடைய அப்பா சிதம்பரம் கூறிய மாதிரி வாடகைக்கேனும் விட்டிருப்பான்.

தாத்தா. அம்மா, அப்பாவின் பெரிய போட்டோக்கள், அம்மாவின் வீணை, மிருதங்கம்.... எல்லாம் எங்கே குப்பையில் எறியப்பட்டு விட்டனவோ!

வெகு சிரமப்பட்டு மனதை அமைதிப்படுத்திக் கொண்டாள் மாதுரி. இந்த மாதிரி கண்ட கற்பனைகளில் மனதைக் குத்தி ரணமாக்குவது அனாவசியம் முட்டாள்தனமும் கூட, அங்கே ஏற்கனவே இருக்கும் காயங்கள் போதாதா?

இப்போது பணம் கிடைத்து அவளுடைய செல்வன் பிழைத்து எழுந்துவிட்டால் வேறு எதுவுமே அவளுக்கு வேண்டாமே, வேண்டவே வேண்டாமே!

வெளியே இருந்து டெலிபோன் செய்து, சசிதரன் மதியம் இரண்டு மணிக்குமேல்தான் அலுவலகம் வருவான் என்கிற செய்தியை அறிந்து கொண்டாள் மாதுரி.

பின்னடிக்கத் தொடங்கிய கால்களை உறுதியோடு முன்னே செலுத்தி, சுமார் மூன்று மணி அளவில் சசிதரனின் அலுவலகத்தை அடைந்த மாதுரியை, "பாக்கியம் டவர்ஸ்" என்ற அந்த ஏழு மாடிக் கட்டிடம் சற்று மலைக்க வைத்தது.

உடனேயே, பல்வேறு தளங்களில் பல்வேறு பெயர்ப் பலகைகளைக் காணவும், இவர்களைப் போலவே சசிதரனும் தனது அலுவலகத்தை அங்கே வைத்திருக்கிறான் என்று எண்ணினாள்.

கடைசி தளமாக ஏழாவது மாடி முழுமையும் அவனது அலுவலகம்.

லிஃப்டில் ஏறிச் சென்று, ரிசப்ஷனில் இருந்த ஒரு அழகிய நங்கையிடம், "மிஸ்டர் சசிதரனைச் சந்திக்க வேண்டும்" என்று மாதுரி கேட்டபோது, "முன் ஏற்பாடு இல்லாதபடி யாரையும் பாஸ் பார்ப்பது இல்லையே" என்று ஒரு குண்டைத் துக்கிப் போட்டாள்.

பேச்சு வராமல் முகம் வெளிறி நின்ற அந்தப் பெண்ணைப் பார்த்ததும் 'ரிஷப்ஷன்' பெண்மணிக்குப் பரிதாபம் தோன்றியது போலும். "அல்லது ஐந்து மணி வரை இருந்தீர்கள் என்றால், முன் அனுமதி பெற்றவர்களைப் பார்த்தபிறகு நேரம் இருந்தால் உங்களிடமும் அவர் பேசக்கூடும். அதோ அந்த 'வெயிட்டிங் ரூமில்' காத்திருங்கள். எதற்கும் உங்கள் பெயரைத் தருகிறீர்களா, செகரட்டரியிடம் கேட்டுப் பார்க்கிறேன்" என்றாள் தன் இனிய குரலில்.

சற்று தயங்கினாள் மாதுரி.

அவளுடைய முதலாளிக்கு ஒரு காலத்தில் அறிவற்றுப் போய்க் கழுத்தை நீட்டிய அசட்டுப் பெண் மாதுரியின் பெயர் இங்கே எந்த அளவு பிரசித்தம்?

"நா...ன் காத்திருந்தே பார்க்கிறேன்" என்று மெல்லிய குரலில் இயம்பிவிட்டு, வெயிட்டிங் ரூமை நோக்கி நடந்தாள் அவள்.

தொடைக்குக் கீழே வந்து அடித்த மாதுரியின் நீண்ட ஜடையைப் பிரமிப்புடன் பார்த்தபடி, தன் 'கொத்து மல்லிக் கீரைக்கட்டு' கூந்தலை வருடிப் பெருமூச்சு விட்டாள் அந்த வரவேற்புப் பெண்.

நேரம் ஆக ஆக, மாதுரியின் நெஞ்சுக்குள் பந்தயக் குதிரை ஓடலாயிற்று. இதமான ஏசியிலும் வியர்த்து. வயிற்றைச் சுருட்டிக் கொண்டு தொண்டை வரண்டு என்னென்னவோ செய்தது. காத்திருப்பதன் கொடுமை!

பிடிவாதமாக மனதை வேறு புறங்களில் செலுத்த முயன்றாள் அவள்.

"வால்டுவால்' பரப்பப்பட்டிருந்த பச்சை நிற கார்ப்பெட்; அதில் 'ப' வடிவில் வரிசையாகப் போடப்பட்டிருந்த 'மங்கிய தங்க' நிற வெல்வெட் கூறையிட்ட அழகிய சோபாக்கள். மூலைக்கு மூலை இருந்த கலைப் பொருட்கள்... கடவுளே, மணி இன்னமும் நாலுகூடவா ஆகவில்லை!

நல்ல காலமாக ஏதோ ஜூஸ் கொணர்ந்து கொடுத்தார்கள்.

அந்த 'ரிசப்ஷன்' பெண் உள்ளே வந்து, சில பத்திரிகைகளை அவளிடம் கொடுத்துப் "பார்த்துக் கொண்டு இருங்கள்" என்று இனிமையாக முறுவலித்துச் சென்றாள்.

சற்றுப் பொறுத்து ஒரு சிறு பரபரப்புடன் அலுவலகம் காலியாகத் தொடங்கியது. அவள் இருந்த அறையும்கூட காலிதான்.

தோளில் பெரிய கைப்பையை மாட்டியபடி உள்ளே வந்த வரவேற்பு பெண். "இனி உங்கள் முறைதான்" "பெஸ்ட் ஆஃப் லக்" என்று வாழ்த்தி விட்டுப் போனாள்.

அவசியமான வாழ்த்துதான்.

கால்கள் பின்னி விழுந்துவிடக் கூடாது என்று மிகுந்த கவனத்துடன் நடந்து உள்ளே சென்றாள் மாதுரி.

ஏன் வந்தாய் என்று விரட்டாதது போலவே வா என்று அழையாமல் அவன் பேசாமல் அமர்ந்திருந்த போதும் சசிதரனின் பார்வை தன் மீது படிந்திருப்பதை மாதுரி ஒரு படபடப்புடன் உணர்ந்தாள்.

மேசை அருகே வந்தவளுக்கு மௌனமாகவே ஒரு நாற்காலியைக் காட்டிவிட்டு காத்திருந்தான் அவன்.

தப்பு செய்தவன் சசிதரன். அவன் சற்றும் சலனம் இல்லாமல் கம்பீரமாய் அமர்ந்திருக்கையில் அவளுக்கு மட்டும் ஏன் தப்பு செய்து பிடிபட்ட பதறி வியர்த்து விருவிருக்க வேண்டும்? மாதுரிக்குப் புரியவில்லை.

கால்கள் தடுமாறுமுன் அவசரமாக அமர்ந்து கொண்டவள் வெளியே தெரியாமல் பெரிய பெரிய மூச்சுகளை எடுத்து சுதாரித்துக் கொள்ள முயன்றாள்.

"என்ன விஷயம்?"

என்ன விஷயம்... அந்தப் பெரிய கண்ணாடி மேசை மேல் கிடந்த அவனது கரங்களிலிருந்து மெல்ல பார்வையை உயர்த்தினாள் மாதுரி.

குரலைப் போலவே முகத்திலும் உணர்ச்சி சுத்தமாக துடைக்கப்பட்டிருந்தது.

இவனா என் பிள்ளையுடைய தந்தை? இவனிடமா பணம் கேட்க வந்தேன் என்று உள்ளூரத் திகைத்தாள். இது... இது எதையும் கொடுக்கக் கூடிய முகமாகத் தெரியவில்லையே.

"என்ன விஷயம் என்று கேட்டேன்."

உமிழ் நீரைக் கூட்டி விழுங்கிக் காய்ந்திருந்த தொண்டையை நனைத்து, "நான்... நான்..." தொடங்கியவளுக்கு மேலே தொடர முடியவில்லை.

அவனது பாறை முகத்தைப் பார்த்துப் பேச முடியாது போலத் தோன்றவே பார்வையை மீண்டும் கோத்திருந்த அவனது விரல்களுக்குத் தாழ்த்தி மீண்டும் முயன்றாள்.

"நா...ன்...நான்."

"நீ யார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். தெரிந்துதான் முன் அனுமதி இல்லாத போதும் உன்னைப் பார்க்கத் தீர்மானித்தேன். அதனால் அந்த சுய விளக்கத்தை விடுத்து, சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடிப் போனவளுக்கு திடீர் என்று என் நினைவு ஏன் வந்தது என்பதை விளக்கினாயானால் நன்றாக இருக்கும்" என்றான் சசிதரன் குரலில் பிசிரற்று.

ஓடிப் போனவள்!

பிரிந்து சென்றவள் என்று கவுரவமாகக் கூறக் கூடாதா? ஏதோ முறை கெட்டுத் தப்பாக நடந்தவள் போலக் கேவலப்படுத்த வேண்டுமா?

"மாதுரி, எனக்கு வேலை நிறைய இருக்கிறது. இன்னும் வீடு சென்று குளித்து தயாராகி ஒரு பிசினஸ் டின்னருக்குப் போக வேண்டும். உன் வாயிலிருந்து எப்போது முத்து உதிரும் என்று காத்துக் கிடக்க எனக்கு நேரம் கிடையாது" என்றான்.

பழி வாங்குகிறான்.

ஆனால் தலையைச் சிலுப்பிக் கொண்டு எழுந்து சென்று விட அவளது அவல நிலை இடம் தரவில்லையே!

ஒரு பெரும் அமைதியிழந்த மூச்சுடன், திரும்பவும் அவன் பேச வாயெடுக்கவும், சட்டென "எனக்கு ஒரு பெரிய தொகை, ஒரு

பத்தா... இல்லை, பதினைந்து ஆயிரம் ரூபாய் வேண்டும்" என்று தொடங்கிப் பட்டென உடைத்தாள்.

இமை இடுங்க அவளை வெறித்தான் சசிதரன். "பதினைந்து ஆயிரம்?"

அவளுக்கு இது இமயமலைதான். அவனுக்கும் அது சக்தியை மீறியதாக இருக்குமோ என்று தோன்றவும் மயங்கி போனாள் மாதுரி. "ஏன்...ஏன்? உங்களுக்கும் இது பெரிய தொகையா? உங்களிடமும் இவ்வளவு பணம் இல்லையா?" என்று பதறினாள்.

அவன் முகம் ஒரு தரம் இறுகி உடனே தளர்ந்தது. "இல்லை, பெரிய தொகை என்று இல்லை" என்று தலையசைத்தான். "ஆனால் எதற்காக இந்தப் பணம்?" என்று வினவினான்.

உதடுகளை இறுக மூடிக் கொண்டு பேசாதிருந்தாள் மாதுரி.

இவன் கட்டாயப்படுத்திக் கேட்டால், விஷயத்தைச் சொல்லாவிட்டால் பணம் தரமாட்டேன் என்று நிபந்தனை இட்டால் சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கும். பிறகு மகனை விடுவானா?

வேறு ஒன்று தோன்றவும் சுருக்கென நெருஞ்சிமுள் தைத்தாற் போல் நெஞ்சில் வலித்தது அவளுக்கு. இவனுக்கு வேறு மகன் இருக்கின்றானா?

அவன், அவளுடைய பதிலுக்காகக் காத்திருக்கிறான் என்பது புரியவும், "சொன்னால் தான் தருவீர்களா?" என்று வேதனையால் விழி அகலக் கேட்டாள்.

விழி மூடித் திறந்து, "இல்லை அப்படி இல்லை," என்றான் சசிதரன், "ஆனால் இது அலுவலகம். இங்கே எல்லாம் கணக்குக் காட்ட வேண்டிய பணம் திடீரென்று ஒருவருக்கு பதினைந்து ஆயிரம் ரூபாயைத் தூக்கிக் கொடுத்தால் காரணம் சொல்ல வேண்டும்; இல்லாவிட்டால் ஐ.டி. இல் தகவல் வரும். உள் முகவரி கேட்பார்கள். பிறகு உன்னிடம் விசாரிப்பார்கள்."

முகவரியா?

மாதுரியின் கண்களில் ஐயம் படரவும் அவன் தோளைக் குலுக்கினான். "அல்லது வேற பணம் வீட்டிலிருந்து கொண்டு வந்து தருகிறேன். நாளை வந்து வாங்கிக் கொள். இப்போதே வேண்டுமானால் வீட்டிற்கு வா தருகிறேன்."

வீடா? அங்கே அவனுடைய அக்கா மகள் இருப்பாளே. அவள் அக்கா மகளாக இருக்கிறாளோ, அன்றி அவனுடைய மனைவியாக இருக்கிறாளோ?

ஏனோ, அதை உடனே அறிந்து கொண்டு விடவேண்டும் போல அவளது மனம் பரபரத்தது.

ஆனால் பத்மினியின் குரோதப் பார்வையும் நினைவும் வந்தது. அன்றைக்கே அப்படி முறைப்பாளே. வேலை அற்றுத் தேளை நெருங்குவானேன்? பிறகு அது கொட்டி விட்டது என்று வேதனைப் படுவானேன்?

மாதுரியைப் பொறுத்தவரை இது முடிந்துவிட்ட அத்தியாயம். இந்தப் பணத்தேவை மட்டும் இல்லை என்றால் தாலி கட்டிய சசிதரனைக்கூட அவள் திரும்பச் சந்தித்திருக்கவே மாட்டாள். அதற்கு மேல் அடுத்த உறவெல்லாம் எதற்கு?

"நான் நாளைக்கு இங்கேயே வந்து வாங்கிக் கொள்கிறேன்" என்று எழுந்தாள்.

கூடவே எழுந்தபடி, "நானும் கிளம்ப வேண்டியதுதான். நீ தங்கி இருக்கும் இடம் சொன்னால் காரில் கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன்" என்றான் அவன்.

"இல்லையில்லை, நான்...நானே போய்க்கொள்வேன், காலைல பத்து மணிக்கு வரட்டுமா?"

"இல்லை பதினொன்றுக்கு வா, ரிசப்ஷனில் சொல்லி வைக்கிறேன், நீ வந்ததும் நேரே என்னிடம் அழைத்து வருவார்கள்" என்றான் அவன் அவளையே பார்த்தபடியே.

சற்றுத் தயங்கிவிட்டு. "நா... நாளைக்கு வருகிறேன்" என்று உரைத்து மடமடவென்று வெளியேறினாள் மாதுரி.

லிஃப்டில் இறங்கி வந்து வெளியே ரோடில் ஆட்டோவுக்காகக் காத்திருக்க நேர்ந்த நேரம் உட்பட எல்லாம் சேர்ந்து ஓர் ஐந்து நிமிடங்கள் ஆகியிருக்கக்கூடும்.

ஆனால் ஒவ்வொரு வினாடியும் சசிதரன் பின்னோடு வந்துவிடப் போகிறான் என்று ஏனோ அவள் மனம் படபடத்துக் கொண்டே இருந்தது.

ஆட்டோவில் ஏறும்போது கூட யாரோ மேலிருந்து பார்ப்பதுபோல் உணர்வுடனேயே ஏறிச் சென்றாள். ஆனால் ஆட்டோவின் பின்புறத் திறப்பின் வழியே அவள் எட்டிப் பார்த்தபோது 'பாக்கியம் டவர்சிஸ்' ஏழாவது மாடியில் எந்த உருவமும் அவளது கண்ணில் படவில்லை.

விசித்திரமான வகையில் அது ஏதோ வேதனையாகவும் இருந்தது அவளுக்கு.

அன்றைய இரவிலும் மாதுரியால் சரியாக உறங்க முடியவில்லை.

பிறந்ததிலிருந்து பிரிந்து அறியாத மகள் தேடி அழுதானோ என்ற கவலை ஒருபுறம் இருக்க முழு விவரம் தராமல் கிடைக்குமோ கிடைக்காதோ என்று கலங்கியிருந்த பணம் கிடைத்து விடும் என்றாகிவிட்ட பிறகு அடுத்துத் தொடர வேண்டிய அறுவை சிகிச்சை ஒருபுறம் அவளை மருட்டியது.

எவ்வளவு சின்ன உருவம் அதனுடைய முதுகுத் தண்டில் ஆப்ரேஷனா? மயிரிழை தப்பினாலும்.... மேலே நினைக்க அவளுக்கு அச்சமாக இருந்தது.

அப்படித் தப்பு எதுவும் நேராது என்று உருப்போட்ட போதும் உடம்பின் நடுக்கம் குறைய மறுத்தது.

இப்போதே இப்படி என்றால் ஆபரேஷனின் போது, அவள் எப்படித் தூங்குவாள்? சித்திகூட இங்கே இருப்பாளோ

என்னவோ? அவள் இருந்தாலும்கூட மாதுரியின் தவிப்பை அவள் புரிந்து கொள்ளப் போவதில்லை.

எவ்வளவோ பிடிவாதமாகத் தள்ளிவிட்டாலும் பிடிவாதமாக சசிதரனின் வலிய கரங்களும் நெடிய உருவமும் நிஜம்போல் எதிரே தோன்றியது. அவனது துணை மட்டும் கிடைக்குமானால் எவ்வளவோ நிம்மதியாக இருக்கும். அந்த சிகிச்சை தொடர்பான வேலைகளைக் கூட அவனே பொறுப்பேற்று நடத்தித் தரக்கூடும்.

ஆனால் அதன் பிறகு இதற்கெல்லாம் ஒரு விலை கொடுக்க வேண்டியிருக்குமே. கண்ணனை அவனிடம் கொடுத்துவிட்டு அவளால் எப்படி உயிரோடு இருக்க முடியும்?

அது முடியாத காரியம் என்பதால் இந்த வேதனையையும் தவிப்பையும் அவள் தனியேதான் தாங்கியாக வேண்டும்?

'தாங்கிக் கொள்ளும் சக்தியை முருகா, நீ எனக்குக் கொடு' என்று வேண்டிக் கொண்டாள்.

கூடவே அவளுக்கு இன்னொன்று உறுத்தியது. ஒரு தகப்பனிடம் அவளுடைய பிள்ளையைப் பற்றித் தெரிவியாமல் மறைப்பது பாவமா?

"என்னென்னவோ எண்ணங்களில் உழன்று தவித்து ஒருவாறு உறங்கி அவள் எழுந்தபோது விடிந்து வெகு நேரம் சென்றிருந்தது. அவசரமாக எழுந்து, தயாராகி மீண்டும் 'பாக்கியம் டவர்சை' நாடிச் சென்றாள்.

இந்தமுறை அந்த வரவேற்புப் பெண்ணின் முகத்தில் அந்த வேலைக்குரிய இளமையோடு மரியாதையும் வியப்பும் அதிகமிருந்தது. யாருடனோ பேசிக் கொண்டிருந்தவள் மாதுரியைக் கண்டதும் பாதி வாக்கியத்தில் பேச்சை நிறுத்திவிட்டு வந்து அவளை நேரே சசிதரனின் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

கதவைத் தட்டி, மேடம் வந்திருப்பதை அறிவித்து உள்ளே அனுப்பிவிட்டு மரியாதையுடன் கதவை ஓசை அற்று மூடிச் சென்றாள்.

மாதுரி அமர்ந்ததும் சில போஸ்டல் ஆர்டர்களை அவளிடம் நீட்டினான் சசிதரன். "பணமாகக் கொண்டு போவது ஆபத்து செக், டிடி எல்லாம் சரிப்படாது என்று போஸ்டல் ஆர்டர் வாங்கினேன். தபால் ஆபீசின் பெயரை நீயே எழுதிக் கொள்வாய் இல்லையா?"

இவனைச் சந்தேகப்பட்டது தவறு என்று இப்போது மன்னிப்பு கேட்க வேண்டுமோ?

உதட்டைக் கடித்துக்கொண்டு அவன் நீட்டிய போஸ்டல் ஆர்டர்களை வாங்கினாள் மாதுரி.

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது திடுக்கிட்டவள் மீண்டும் ஒரு தரம் ஆராய்ந்தாள். "இ... இதில் இருபது ஆயிரம் இருக்கிறதே."

"ஆமாம் எதிர்பாராது வரக்கூடிய செலவுகளுக்கும் கொஞ்சம் வைத்தேன்."

இந்த அதிகப்படி பணம் அவளுடைய மகனுக்கு எத்தனையோ வசதிகளை ஈட்டித் தரக்கூடும்.

கண்ணனுடைய சிகிச்சைக்குப் பணம் தந்து பிழைக்க வைப்பதோடு, பிற்பாடு அவனது போஷாக்கிற்கும் உதவுகிறான்!

சட்டென மாதுரியின் விழிகள் நனைந்தன.

நெஞ்சில் நிறைந்து முட்டிய நன்றியை வெளியிட வெகுவாக முயன்றும் அடைத்துக் கொண்ட தொண்டையி லிருந்து சத்தம் வெளிவர மறுத்தது.

அவளது முகத்தையே பார்த்திருந்தவன். "இந்தப் பணம் எதற்காக என்பதை இன்னமும் சொல்லுவதற்கில்லையா? அப்படித்தானே?" என்று வினவினான்.

சற்றுத் திடுக்கிட்டு ஒரு கணம் யோசித்து; மறுப்பாகத் தலையை மட்டும் அசைத்தாள் மாதுரி. கூடவே 'சாரி' என்ற வார்த்தை தானாக வெளிவந்தது.

ஆனால் சசிதரனின் முகத்திலிருந்து எதுவோ அவளைக் குழப்பியது. யோசித்ததும் புரிந்து கொள்ள மாட்டாதவளாக மெல்ல எழுந்தாள்.

"நா....ன்... நான் கிளம்புகிறேன்... பணத்துக்கு....ந.... நன்றி" என்று ஒருவாறு உரைத்துவிட்டு வெளியேறினாள்.

அதற்குமேல் அவள் சென்னையில் தாமதிக்கவில்லை. வைகையைப் பிடித்து, 'அன்ரிசர்வ்ட்' இல் ஏறி இரவே மகனிடம் சென்று விட்டாள். 'ஏதோ' வெகுகாலம் பிரிந்திருந்தாற்போல உணர்வில் அவனை விட்டு இப்படியும் அப்படியும் அசங்கவில்லை.

இரவு அவன் உறங்கிய பிறகு ரேவதியிடம் வந்தாள். "அழுதானா சித்தி?" என்ற கேள்வியே சிறு கேவலுடன் முடிந்தது.

"உன் பிள்ளை அழுகிறவன் இல்லையே, அம்மா எங்கே என்று அவ்வப்போது கேட்டான்தான். ஆபீஸ் போயிருப்பதாகச் சொன்னால் விட்டுவிடுவான். கூட இரண்டு தடவை கேட்டால் வேலைக்காரியோடு வெளியே அனுப்பி விடுவேன்... அதிருக்கட்டும். போன காரியம் என்ன ஆயிற்று? பலித்ததா? இல்லையா?"

"பணம் கிடைத்தது சித்தி" என்று விபரம் முழுமையும் சொன்னாள் மாதுரி.

"இருபதாயிரம் தந்தானா?" என்றாள் ரேவதி ஆச்சரியத்துடன் உடனே அலட்சியமாக உச்சுக் கொட்டினாள் "எப்படியும் நீ சட்டப்படி அவன் மனைவி அல்லவா? சொத்து கித்து கேட்க வந்திருப்பாளோ என்று பயந்திருப்பான். கேட்டதற்கு மேல் கூட ஐயாயிரம் கொடுத்தால் அதிலேயே

உச்சி குளிர்ந்து ஓடிவிடுவாய் என்று கணக்கிட்டுத் தந்திருக்கிறான். நீயும் அதே போல் ஓடி வந்து விட்டாயே" என்றாள் அலட்சியமாக.

இருக்குமோ என்று தோன்றியது மாதுரிக்கு.

ஏனெனில், ஏற்கனவே மாதுரி அந்த வரையில் சசிதரனுக்குப் பிரியம் இரக்கம் என்பன போன்ற மேன்மைகள் கிடையாதுதானே, பணத்துக்காக எதையும் செய்கிறவன்தான்.

சோர்ந்த தோளை ஒருதரம் ஏற்றி இறக்கி விட்டுக் கொண்டாள் மாதுரி. என்னவோ போகட்டும் எப்படியோ கண்ணனின் சிகிச்சைக்குத் தேவையான பணம் கைக்கு வந்தது. அதுபோதும் அதற்குமேல் யாருடைய பிரியமும் கிட்டா விட்டாலும் பரவாயில்லை.

மறுநாளே டாக்டரிடம் போனாள்.

அவருக்கும் சந்தோஷம்தான், சிகிச்சையைத் தள்ளிப் போட்டு குழந்தை மேலும் பலவீனமடையுமுன் வந்து விட்டாளே.

கண்ணனின் உடல் வலுப்பெறுவதற்கான மருந்துகளை அவரே எழுதிக் கொடுத்தார்.

அடுத்து "இந்த ஆபரேஷனை எங்கே வைத்துச் செய்யலாம் என்று நினைக்கிறீர்கள் மிசஸ் மாதுரி?" என்று விசாரித்தார். "வேலூர், சென்னை இரண்டு இடங்களிலுமே தேவையான வசதிகள் இருக்கின்றன. இரண்டு இடங்களிலும் எனக்குத் தெரிந்த பெரிய டாக்டர்களும் இருக்கிறார்கள். உங்களுக்கு வசதிப்படுகிற ஊரைச் சொன்னீர்களானால் அங்கே உள்ள டாக்டருக்குக் கடிதம் எழுதி மேற்கொண்டு ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்றார் அவர்.

சென்னையில் என்றால் எங்கேயானும் போகும் வரும் வழியில் கூட சசிதரனைச் சந்திக்க நேரும் அபாயம் இருக்கிறது வேலூரில் அந்த மாதிரி ஆபத்து ஏதும் கிடையாது. பயமில்லை

கூட சென்னையில் ஏதோ பாதுகாப்பு இருப்பது போன்று உணர்ந்து, "சென்னை" என்றாள் மாதுரி.

முட்டாள்தனம் தான் விவரம் தெரியும்போது சித்தியும் அதையே சொல்லித் திட்டப் போகிறாள் அவளிடம் வேறு என்னவெல்லாம் வாங்கிக் கட்டிக் கொள்ளவேண்டுமோ?

ஆனால் விஷயம் அறிந்தபோது விசித்திரமாகப் பார்த்தாளே தவிர ரேவதி வேறு ஒன்றும் சொல்லவில்லை. அத்தோடு அவளுக்கு நெருங்கிவிட்டிருந்த வெளி நாட்டுப் பயணம் தொடர்பாக நிறைய வேலைகள் இருந்ததால் அக்கா மகள் மீது அக்கறை காட்டவில்லை பத்து நாட்கள் பறந்தன.

சென்னை நிபுணருக்குக் கடிதம் எழுதியதோடு நில்லாமல், அவரோடு, டெலிபோனிலும் தொடர்பு கொண்டு மேற்கொண்டு தேவைப்பட்ட ஏற்பாடுகள் அத்தனையும் செய்தார் டாக்டர்.

கண்ணனுக்கு மருந்துகள், மாத்திரைகள், மசாஜ் என்று நிறைய நடந்தது.

கிளினிக், க்ரஷ், அலுவலகம், க்ரஷ், கடைகள், வீடு என்று மாதுரி பறந்தாள்.

சாப்பிடக் கூட நேரம் இல்லாததுபோல் அலைந்தவளுக்கு உள்ளூர ஓர் ஏக்கம் பிறந்து விசுவரூபம் எடுத்தது. சீச்சீ. என்ன பைத்தியக்காரத்தனம் என்று தன்னைத் தானே குட்டிக் கொண்ட போதும் அந்த ஏக்கம் மறைய மறுத்தது.

12

இந்தப் பரபரப்பிலும் ஏக்கத்திலுமாகப் பதினைந்து நாட்கள் பறந்தோடிய பிறகு ஒருநாள் அது நடந்தது.

அதை மாதுரி அடியோடு எதிர்பார்க்கவே இல்லை என்று ஒரேயடியாகச் சொல்ல முடியாது. கண்ணனுக்காக அவன் தந்தையிடம் பணம் கேட்ட நாளில் இருந்தே இது நடக்கக்கூடும் என்கிற எண்ணம் அவளது அடிமனதில் இருந்து கொண்டே தான் இருந்தது.

இது நடந்துவிடுமோ என்ற பயம்; நடந்துவிடக்கூடாதே என்கிற பிரார்த்தனைகளோடு ஒரு திகில் கலந்து எதிர்பார்ப்பும் இருக்கவே செய்தது.

பதினைந்து நாட்கள் சென்ற பின்னும் எதுவும் நடக்க வில்லை எனவும், எதையோ இழந்தாற்போல உணர்ந்தாலும் கொஞ்சம் நிம்மதியாகவும் இருந்தது. பரவாயில்லை. இந்த ஒன்றே முக்கால் ஆண்டுகள் போலக் கண்ணனும் அவளும் ஒருவருக்கொருவர் என்று காலமெல்லாம் வாழப் போகிறார்கள் அவ்வளவுதானே?

வேறு எதையும் எண்ணி மனதைக் குழப்பிக் கொண்டு இருக்க அவளுக்கு நேரமும் இல்லை.

டாக்டர் எவ்வளவோ உதவி செய்தபோதும் அவள் மட்டுமே செய்தாக வேண்டிய வேலைகளும் பல இருந்தன.

கண்ணனுக்கு செய்ய வேண்டியிருந்த அதிகப்படி வேலையோடு, அலுவலகத்தில் லீவு பெறுமுன் முடித்துக் கொடுக்கப்பட வேண்டியிருந்த வேலைகள், சென்னையில் தங்கும் இடம் ஏற்பாடு செய்வது, சென்ற முறைபோல ஏதாவது ஓட்டலில் தங்கி இரவில் அடுத்த அறையிலிருந்து வந்த அருவருப்பான சத்தங்களினால் அது வேறு தூக்கமின்றித் தவித்தது போல இப்போதும் ஆகிவிடக் கூடாது; பிள்ளைக்கும் அவளுக்கும் தேவையான துணி மணி, பொருட்கள் பார்த்து வாங்கி சேகரிப்பது. (சசிதரன் கிருபையால் கூட இரண்டு செட் வாங்கப் பணம் இருந்தது) என்று ஓடி ஓடி உண்ணக் கூட நேரம் இல்லாது அவள் இன்னமும் மெலிந்து போனாள்.

காலை மாலை ரேவதி வீட்டு உணவு என்று இருந்ததால் ஏதோ வயிற்றுக்குக் கொஞ்சம் கிடைத்தது

இப்படி ஓடிக் கொண்டிருந்த போதுதான் ஒருநாள் அந்த இடி விழுந்தது.

வழக்கம் போல் அலுவலகம் முடிந்து, 'க்ரஷ்' இல் மகனை அழைத்துவரச் சென்றபோது அங்கே அவன் இல்லை.

"உங்கள் வீட்டு வேலைக்கார அம்மா அழைத்துப் போனார்கள்" என்று சொல்லவும் அப்போதைக்கு அவளுக்குப் பெரிய பயம் ஒன்றும் வந்துவிடவில்லை. ஏனெனில் எப்போதாவது அபூர்வமாக மாதுரிக்கு அலுவலகத்தில் அதிகப்படி வேலை இருந்தால் சித்திக்குச் சொல்லி வேலைக் காரியை அனுப்பி குழந்தையை அழைத்துக் கொள்வது உண்டுதான். ஆனால் அவளாக அப்படி அழைத்துச் சென்ற பழக்கம் இல்லை என்பது லேசாக உறுத்தியது.

ஒரு வகைக்கு இதுவும் நல்லதே அவனைத் தூக்கிக் கொண்டே அலைய வேண்டும் என்று ரெடிமேட் கடைக்குச் சென்று கண்ணனுக்குச் சில பிளாஸ்டிக் ஐட்டிகளை வாங்கினாள். வெளியே அதிகம் அழைத்துப்போக நேரும்போது இவை மிகவும் வசதி என்று உடன் வேலை செய்யும் ஒரு பெண் சொல்லியிருந்தாள்.

சித்தி ஏதோ விஷயமாக அவளுடைய பழைய தோழியைப் பார்க்க வெளியூர் சென்றிருந்ததால் ஆயா சற்று நேரம் அதிகம் நின்று பார்த்துக் கொள்ளுவாள் என்பதால் நின்று நிதானித்து மற்றும் சில பொருட்களையும் வாங்கிக் கொண்டு வீடு சென்று பார்த்தால் அங்கே கண்ணன் இல்லை.,

வாங்கி வந்தவற்றை மேசைமேல் வைத்து விட்டு "கண்ணன் மேலே தூங்குகிறானா, ஆயா?" என்று விசாரித்தாள் மாதுரி.

"இல்லையேம்மா, இங்கேதானே ஹாலில் வெளையாடிக் கிட்டிருந்தான் இப்பதானே நீ வரதுக்கு நேரமாச்சேன்னு தோசைசுடப் போனேன்" என்றாள் சமையல் அறையில் நின்றிருந்த ஆயா.

மாதுரிக்குத் திக்கென்றது.

ஒருவேளை மாடிக்குப் போயிருப்பானோ?

அவசரமாக ஏறும்போதே, பாதி படியில் கால்கள் வலுவிழந்திருந்ததால் என்ன ஆகியிருக்கும் என்று மனம் படபடக்க ஓடினாள். மாடியில் கண்ணன் இல்லை அவசரமாக இறங்கி வந்து வீடு முழுவதும் தேடினாள். சின்ன வீடு. சிறு தோட்டம் தேட அதிக இடம் இல்லை.

தெருப்பக்கம் ஓடிப்போனாள்.

கண்ணனுக்குச் சின்னப் பிள்ளைகள் என்றால் மிகவும் ஆசை. அவனைவிடச் சற்றுப் பெரிய பிள்ளைகள்கூட அவனுக்குப் பாப்பாதான். வழியில் எந்தக் குழந்தையாவது பார்த்தால் நடை அந்தப் பக்கம் திரும்பி விடும்.

அப்படி எந்தப் பிள்ளை பின்னோடு சென்று எங்கானும் விழுந்து விடுகிறானா? தெரு முனையில் திறந்து கிடந்த 'மானுவல்' கழிவுநீர்க் கால்வாயில் அவளுக்குக் கைகால் ஆடிப்போயிற்று.

இரண்டு பக்கத்து வீடுகளிலும் லீவுக்கு வெளியூர் சென்றிருந்தார்கள்.

ரேவதியின் வீடு அதிகம் 'டெவலப்' ஆகாத பகுதியில் இருந்தது. எனவே அங்கே வீடுகளும் அதிகம் இல்லை. விசாரிக்க ஆட்களும் அதிகம் இல்லை.

இங்கும் அங்குமாய் ஓடி ஓடித் தேடிப் பலனின்றி ஓய்ந்து விழுந்தவளை ஆயா அனுதாபத்துடன் பார்த்தாள்.

"கொஞ்சம் காப்பி குடியம்மா. ரெண்டு பேரும் சேர்ந்து தேடலாம். அப்படி எங்கே நம்மை மீறிப் பிள்ளை போயிடும்? கண்டுபிடிச்சிடலாம்" என்றாள் ஆறுதலாக.

இவளுக்கென்ன? இவள் பிள்ளையா காணாமல் போயிருக்கிறது? பிள்ளையைக் கூட்டிவந்து தொலைத்து விட்டுப் பேச்சு வேறா என்று சுருசுருவென்று பொங்கிய ஆத்திரம் உடனே இறங்கியது.

இவளைக் குற்றம் சொல்லிப் பயன் இல்லை.

சற்றுநேரம் கதவைத் திறந்துபோட்டால் கொள்ளை போய்விடும் என்கிற மாதிரி நிலைமை அந்தப் பகுதியில் இல்லை வீட்டு எல்லையைவிட்டு வெளியே போகாத பிள்ளை எங்கேனும் போகக்கூடும் என்று அவள் எதிர்பார்க்கவும் வாய்ப்பில்லை.

மாதுரியாலேயே இன்னமும் குழந்தை எப்படி காணாமல் போக முடியும் என்று புரிந்து கொள்ள முடியவில்லையே.

அவனாக எங்கே சென்றிருந்தாலும் இந்த வட்டம் தாண்டி எங்கும் போயிருக்க முடியாது. ஆனால்...

விசுக்கென்று நிமிர்ந்தாள் மாதுரி.

பிள்ளைத் திருடர்கள்!

பச்சிளம் பிள்ளைகளைத் துக்கிச் சென்று ஊனமாக்கி பிச்சை எடுக்கச் செய்து சம்பாதிப்பார்களாம். அவர்களில் யாரும், தளர்நடையுடன் தனியே வந்த சிறுவனைத் தற்செயலாகக் கண்டு உடனே தூக்கிச் சென்று விட்டார்களோ?

கடவுளே! அவளுடைய மகனுக்கு உடனே வைத்தியம் செய்ய வேண்டுமே செய்யாவிட்டால் அவன் உயிரோடு இருக்கவே மாட்டானே, இது அவர்களுக்குத் தெரியாதே!

"ஆயா!" என்று பதறிக் கொண்டிருந்தாள் மாதுரி.

"ஆயா, யாரோ பிள்ளை பிடிக்கிறவர்கள்தான் கண்ணனைக் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள். உடனே போலீசுக்குப் போக வேண்டுமே ஆயா. இங்கே பக்கத்தில் எங்கே போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. தெரியுமா ஆயா?" என்றாள் தவிப்புடன்.

"போலீசுக்குத்தானே உடனே செல்லலாம் அம்மா, நீ முதல்ல இந்தக் காப்பியக் குடியம்மா. அதுக்குள்ளார ஒரு தெரு தாண்டி மாடி வீட்டிலேயே பெரிய இன்ஸ்பெக்டருக்கு அக்கா

ஓரம்மா இருக்காங்க அவங்கிட்ட போயி போன் போட்டு அவுங்க தம்பியே உடனே வரச்சொல்றேன். நீ முதல்ல தொண்டையை நனைச்சிக்க தாயி. இதோ மினிட்ல இன்ஸ்பெக்டரோட வர்றேன்" என்று கிளம்பினாள் ஆயா.

"நானும் வருகிறேன்" என்று ஓர் எட்டு எடுத்து வைத்தாள் மாதுரி.

"என்னத்துக்கும்மா? அந்த அம்மா வீட்டிலே என் தங்கச்சி வேலை செய்யுது. அது மூலியமா அந்தம்மா கிட்டே பேசி போன்போட்டு அர்ஜண்டா அவங்க தம்பிய வரச்சொல்லப் போகிறேன். நீ வந்து என்ன செய்யப் போறே? வீட்டப் பூட்டி கீட்டிக்குன்னு சும்மா நேரம்தான் ஆவும். நீ உட்கார்ந்து காப்பியக்குடி. நான் இதோ ஓடியாந்துடறேன்" என்று ஓட்டமும் நடையுமாக விரைந்தாள் ஆயா.

அவள் சொல்வதும் சரிதானே.

மாதுரி இருக்கும் நிலையில் வேலைக்காரியின் வேகத்தில் அவளால் நடக்க முடியுமா என்பதே சந்தேகம்.

ஓய்ந்து அமர்ந்தவளின் மனம் ஊனமாய் அழுதது.

என் மகன் இவ்வளவு நேரம் என் செல்வத்தை எங்கே கொண்டு போய் விட்டார்களோ? அவனை என்னவெல்லாம் செய்து விட்டார்களோ? போலீசால் கூட அவனை கண்டு பிடிக்க முடியுமோ என்னவோ? முருகா... நான் யாருக்கும் ஒரு கெடுதலும் செய்ததில்லையே...

"பிள்ளையைத் திருட்டுக் கொடுப்பது என்றால் எப்படி இருக்கிறது?"

தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்து பார்த்தாள் மாதுரி.

இன்ஸ்பெக்டர் எங்கே?

இவன் எங்கே இங்கே வந்தான்.?